

# ஞானச்சுடர்

ஆவணி மலர்

2009



ஓம்

முருகா

வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

உ

# குறள்வழி



அறத்தான் வருவதே இன்பமற் றெல்லாம்
புறத்த புகழு மில

பொருள் : இல்லற வாழ்வினால் வருவதே இன்பம் : மற்ற வகையில் வருவனவெல்லாம் இன்பமாயினும் துன்பங்களாகும். அதுவேயன்றி அவை புகழ் உடையனவுமல்ல. (39)

செயற்பால தோரும் அறனே ஒருவற்
குயற்பால தோரும் பழி

பொருள் : ஒருவன் தன்பொருட்டுச் செய்யவேண்டியது நற் செய்கையே : தவிர்க்கவேண்டியது தீச்செயலே (40)

# நற்சிந்தனை



மறப்பேனோ குருநாதன் தன்னை

திருத்தாண்டகம் - 1

எல்லாஞ் செயவல்ல சித்தர் போலும்
ஏக மனேகமாய் நின்றார் போலும்
கல்லார்க்குங் கற்றார்க்கு மருள்வார் போலும்
காமனையுங் காலனையுங் காய்ந்தார் போலும்
சொல்லாலே சும்மாவிருக்க வைத்தார் போலும்
சுருதிமுத லாகமங்கள் காணார் போலும்
எல்லாமா யல்லவுமா யிருந்தார் போலும்
என்னிதயம் நீங்காத விறைவர் தாமே 3


சிரித்துப் புரமூன்றுஞ் செற்றார் போலும்
திருவெல்லா மொருங்கே திரண்டார் போலும்
அரிக்கு மயனுக்கு மெட்டார் போலும்
ஆவ தழிவ தில்லார் போலும்
கரிக்குரு விக்கரு ளீந்தார் போலும்
காட்டானைத் தோலுரித்து மகிழ்ந்தார் போலும்
மரித்தல் பிறத்த லில்லார் போலும்
மன்னியெம் முள்ளத்தி னுண்ணின் றாரே 4

# ஞானச்சுடர்



வெளியீடு :

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை




## 2009 ஆவணி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| பிள்ளை யார் | துணைவியூர் கேசவன் | 1 - 6 |
| தொண்டைமானாறு.... | கு. சிவபாலராஜா | 7 - 9 |
| கொன்றைவேந்தன் | ஔவையார் | 10 |
| அருணகிரியாரும்.... | ஆ. மகேசு | 11 - 13 |
| சிவசக்தியாக விளங்கும்.... | நா. நல்லதம்பி | 14 - 15 |
| சந்நிதியான் ஆச்சிரமத்தால் | | 16 |
| முத்திக்கு வித்தாகும் | மூ. சிவலிங்கம் | 17 - 19 |
| மயில் | வாரியார் சுவாமிகள் | 20 |
| ராம பிரம்மம் | திருமதி பா.சிவனேஸ்வரி | 21 - 23 |
| ஆசாரக்கோவை | | 24 - 25 |
| மங்கலப் பொருட்களின் | செல்வி செ. ஐடா | 26 - 27 |
| நித்திய அன்னப்பணி | | 28 - 29 |
| திருவிளையாடற் புராண.... | ஆறுமுகநாவலர் | 30 - 31 |
| வேண்டுதல்கள் | திருமதி சி. யோகேஸ்வரி | 32 - 34 |
| நாவலர் நற்றமிழ் | சிவ சண்முகவடிவேல் | 35 - 37 |
| வட இந்திய ஸ்தல | | 38 - 40 |
| தவமுனிவனின் தமிழ்... | சிவமகாலிங்கம் | 41 - 45 |
| சந்நிதியான் | ந. அரியரத்தினம் | 46 - 48 |
| செய்திச் சிதறல்கள் | | 49 |
| தமிழகத் திருக்கோயில்.... | வல்வையூர் அப்பாண்ணா | 50 - 52 |



அன்பளிப்பு : மலர் ஒன்று 30/- ரூபா

வருடச்சந்தா தபால் செலவுடன் 385/- ரூபா

**சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம் : 021 - 2263406, 060 - 2219599

Web Site : WWW. Sannithiyan.org

E-Mail : sannithijanaachchiramam@yahoo.com

பதிவு இல. Q.D/38/NEWS/2009

அச்சுப்பதிப்பு : சந்நிதியான் ஆச்சிரமம், தொண்டைமானாறு

உ

## ஞானச்சுடர்

# ஆடிமாத வெளியீடு

**வெளியீட்டுரை:**

ஆடிமாத ஞானச்சுடர் மலருக்கான வெளியீட்டுரையினை யா/ தோப்பு அருநந்தி வித்தியாலய ஆசிரியையும், சைவப்புலவருமான செல்வி. கனகசுந்தரம்பிள்ளை சசிலேகா அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது உரையில் தொடர்ந்து கூறும்போது ஆற்றங்கரை வேலவனின் அருள் நிறைந்திருக்கும் இவ்வாச்சிரமம் கந்தப் பெருமானின் அருளோடு பல்வேறுபட்ட சமய சமூகப் பணிகளை ஆற்றிவருகின்றது. இப்பணிகள் சிறப்பாக நடைபெறுகின்றது என்பதை ஆச்சிரம மண்டபச் சுவரிலே மாட்டப்பட்டுள்ள படங்களே எடுத்துக் காட்டுகின்றது என்றும் வாராந்த வெள்ளி நிகழ்வுகளில் பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்விற்கு ஓரிடத்தை கொடுத்து சமய ரீதியாக மாணவ சமுதாயத்தை வளர்க்கும் பணி மகத்தானது என்றும் மேலும் இம்மலர் தொடர்ந்தும் வெளிவந்து கொண்டிருப்பது சைவ மக்களுக்கு அரிய பொக்கிஷமாக அமைந்துள்ளது என எடுத்தியம்பி முருகப் பெருமானுக்கு நன்றி கூறி வெளியீட்டுரையினை நிறைவு செய்தார்கள்.

**மதிப்பீட்டுரை:**


139ஆவது ஞானச்சுடர் மலருக்கான மதிப்பீட்டுரையினை யா/ புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரி ஆசிரியையான திருமதி கௌரி சுரேஷன் அவர்கள் நிகழ்த்தினார்கள்.

அவர் தனது மதிப்பீட்டுரையின்போது சந்நிதியான் சூழலில் அமைந்திருக்கும் சந்நித்யான் ஆச்சிரமத்தினது செயற்பாடுகள் யாவும் மேலைத்தேசக் கலாச்சாரம், நடை, உடை பாவனைகள் யாவும் மேலோங்கி நிற்கின்ற தற்காலச் சூழ்நிலையிலும் கூட உலக மனித விழுமியங்களைக் கட்டிக் காத்து வருவதோடு கடமைஉணர்வு, ஒழுக்கங்கள், சைவசமயப் பண்புகள் போன்றவற்றை நன்னெறிப்படுத்துவதாகவே காணப்படுகின்றது.

மேலும் இம்மலரில் நல்லவர்களாக ஆசைகளை அடக்கி அமைதியாக வாழ்ந்தால் வாழக்கையில் வெற்றி கொள்ள முடியும் என்பதற்கு பல்வேறு ஒழுக்க விதிகளை எளிய மொழிநடையில் இலகுவில் வாசித்து விளங்கிக் கொள்ளக் கூடியவாறு கட்டுரைகள், நற்சிந்தனைகள், சுடரின் தகவல், பொன்மொழிகள் போன்றன அமைந்துள்ளது என்பதை சபையில் கூடியிருந்த அடியார்களுக்கு இரத்தினச் சுருக்கமாக விளக்கிக் கூறினார்.

உ

# சுடர் தரும் தகவல்



வாழ்க்கையிற் பெருந்தன்மையுடன் நடந்து கொள்ளுங்கள். சந்தர்ப்பங்கள் எழுப்பும் அலைகள், நிகழ்ச்சிகள் தோற்றுவிக்கும் இழுபறிகள், உங்களை இங்கும் அங்கும் தூக்கிப் போட்டுத் தடுமாற வைக்கலாம் : மேலும் கீழுமாகத் தள்ளி அலைக்கழிக்கலாம். ஆனால் நீங்கள் உங்கள் எண்ணத்திலும் செயலிலும் பெருந்தன்மையோடு இருக்க வேண்டும். அப்போது நீங்கள் என்றும் பவுத்திரமாக இருக்கலாம்.

இதயத்தில் மலரும் இந்தப் பெருந்தன்மை உங்கள் செயல்களில், உங்கள் ஒழுக்கத்தில், உங்கள் பணியில் பளிச்சென்று ஒளிவிட வேண்டும். உங்கள் கடமைகளை ஏற்கும் போது முகத்தைத் தொங்கப்போட்டுக் கொள்வதும், சலித்துக்கொள்வதும் வாழ்க்கையின் சுமையில்உங்களை நீங்களே இழுத்துக் கொண்டு செல்வதும் உங்கள் வாழ்வை வேதனை மிகுந்த, பலனில்லாத ஒன்றாக ஆக்கிவிடும்.

ஒரு வேலையைச் செய்வதற்கு உங்களுக்கு எவ்வளவு மணி நேரம் ஆயிற்று என்பதை ஒரு குறையாகச் சொல்லி முணுமுணுக்காதீர்கள். உங்கள் அன்றாட வேலையில், ஒவ்வொரு மணி நேரத்திலும் உங்களை எவ்வளவு தூரம் மனமார ஈடுபடுத்திக் கொண்டீர்கள் என்று மதிப்பிட்டுப் பார்க்கும் பெருந்தன்மை உங்களுக்கு இருக்க வேண்டும்.

அன்பு கண் கூடாக வெளிப்படும் சந்தர்ப்பமே பணி என்பது. பிறரிடம் நீங்கள் காட்டும் அன்பை மன மலர்ச்சியுடன் வெளியிடுவதே பணியாற்றுவது. ஒவ்வொரு நாளும் செய்ய வேண்டிய பொறுப்புக்களை, முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு, வேதனையும் துயரமும் வெளிப்பட இழுத்து இழுத்துச் செய்வது பிரயாசை தான். மனம் கலந்து ஈடுபட்ட பணியின் மூலமாகவே சாதனையில் வெற்றியடையும் பெருமிதம் உண்டாகும். எப்படியோ செய்து தொலைக்கும் பிரயாசையில் அது இருக்கவே இருக்காது.

அன்போடு செய்யும் பணியின் மூலம், கலப்பற்ற சாதனைப் பெருமிதத்தை அடையும் பெருந்தன்மையான மனிதனாக உங்களை வளர்த்துக் கொள்ளுங்கள்.

# வேல்கொண்டு விளையாடும் சந்நிதி முருகன்

(சிந்து)

வேல் கொண்டு விளையாடும் முருகன் - அமர்ந்து
வீற்றிருக்கும் தொண்டைமான் ஆறு
பால் கொண்டு முருகன்பால் வந்து - அடியார்
பக்தி யபிஷேகிக்கும் நாடு.

மாலோ டயனறி யாத சிவன் மகன் - (அன்று)
மாபெரும் கதிர்காம ரேந்த - அவருக்கு
வேலோ டருள்சுரந் தளித்தான் - அவரும்
வேல் நாட்டிய பூசையும் ஏற்றான்

தேவரும் பணிகின்ற சேயோன் - அவர்க்கு
தேடியே அருள் செய்யுஞ் சீலன்
ஏவரும் பணிந்திடின் அவர்க்கு - நாளும்
இல்லையென் னாதருள் புரிவான்.



ஆவணி மகோற்சவ நாளில் - வந்து
ஆலயம் தங்குவோர்க் கெல்லாம்
யாவர் இவர் எனப்பா ராமல் - அவர்க்கு
ஏற்றன அள்ளிக் கொடுப்பான்

பராபரா! முருகையா! என்றும் - மற்றும்
பாடியும் ஆடியும் வருவோர் - அவனை
அரோகரா முருகையா என்றால் - மகிழ்ந்து
அவரையும் கண்ணாலே பார்ப்பான்.

சிற்சிலர் பாற்காவடி எடுப்பார் - சிலர்
வேல்குத்திக் காவடி எடுப்பார்
பொற்சட்டி கர்ப்பூர தீபம் சில
பூவையர் ஏந்திப் பிடிப்பார்.

மங்கலம் சங்கொடு முழங்க – முருகன்
வலமாகக் கோயிலை வருவான் – தினமும்
பண்களும் திருப்புகழ் ஓதி – அடியார்
பாங்கையும் அன்பையும் அறிவான்.



தினந்தினம் வாகனம் மீது வருகின்ற
செல்வச் சந்நிதித் திரு முருகன்
மனந்திகழ் தீமைகள் துடைக்க – தேரேறி
வலமாகச் சுற்றி வருவான்

ஆவணிப் பூரணை தினத்தில் – சந்நிதி
அப்பனுடன் தீர்த்தம் தாமாடி – அவன்
சேவடி தொழுதிட மக்கள் லட்சமாய்த்
திரண்டுவந் தேத்துவர் அறிவீர்

இந்தநற் பொன்னாளில் அடியார் – சந்நிதியை
எங்கிருந்தும் எண்ணி நோற்றால் – முருகன்
அங்கெல்லாமே சென்று அருள்வான் – ஆதலால்
அவனை மறவா தீர் அன்பீர்



அருளாளர் அன்றன்று கட்டிய – மடங்களில்
ஆவணி யில்அன்ன மிடுவார் – மற்றும்
பொருளாக ஆண்டாண்டு தோறும் – ஆச்சிரமம்
பெருஞ்சபை அன்னம்பாலித் தோயாது

உலகம் அறி மோகனதாஸ் சுவாமி – செய்யும்
ஒப்பிலா அன்னதா னத்தை
நிலவிட ஞானச் சுடரில் – எழுதி
நேர்மையாய் நடாத்துவார் வாழ்க

முதுபெரும் புலவர்மணி
கலாபூஷணம்
வை.க. சிற்றம்பலம்

உ

# ஆவணிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**Dr. G. பவானி**
(மகப்பேற்று நிபுணர், யாழ்ப்பாணம்)

**உரிமையாளர்**
(மதுரா நகைமாடம், யாழ்ப்பாணம்)

**Dr. திருமதி பத்மராணி குகானந்தன்**
(பல்வைத்திய நிபுணர், அச்சுவேலி)

**S.S. றஜீந்திரன்**
(நீர்வேலைப்பகுதி, மாநகரசபை, யாழ்ப்பாணம்)

**சி. சிவமூர்த்தி**
(ஸ்ரீ சிவாஞ்சனா நகைமாளிகை, யாழ்ப்பாணம்)

**ஏ. அனுசாந்தன்**
(ஆசிரியர், குப்பிளான்)

**கி. மாலினி**
(கலாச்சார உத்தியோகத்தர், கோப்பாய்)

**A. நாகரெத்தினம்**
(கஜானன் அரைக்கும் ஆலை, நீர்வேலி)

**சி. குமாரசாமி J.P.**
(ஆசிரியர், பத்தமேனி, அச்சுவேலி)

**வே. இராஜேந்திரா**
(பொது சுகாதாரப் பரிசோதகர், ஆவரங்கால்)

**பொ. குமாரசாமி**
(சட்டத்தரணி, நவிண்டில்)

**உரிமையாளர்**
(அருளானந்தா புடவை மாளிகை, சங்கானை)

**Dr. V. சச்சிதானந்தராஜா**
(கண்ணா கிளினிக், சித்தங்கேணி)

**திருமதி கௌரி சுரேசன்**
(ஆசிரியர், ஆவரங்கால்)

**செ. கந்தசாமி**
(வங்கியாளர், சண்டிலிப்பாய்)

**நா. சிவசிதம்பரம்**
(கோணாவளைலேன், கொக்குவில்)

**இ. அரிகரன்**
(ஈவினை, புன்னாலைக்கட்டுவன்)

**முகாமையாளர்**
(திருமகள் அழுத்தகம், தெல்லிப்பளை)

**திருமதி தமிழ்ச்செல்வி செந்தில்ராஜா**
(மிருசுவில்)

**ச. பத்மநாதன்**
(தெற்குத் தோப்பு, புத்தூர்)

**சி. சிவயோகநாதன்**
(விக்னேஸ்வரா வீதி, கரணவாய்)

**தே. தேவராஜேந்திரன்**
(திகிரி லேன், தும்பளை)

**பொ. நாகலிங்கம்**
(கெருடாவில் தெற்கு, தொண்டைமானாறு)

**க. மயில்வாகனம்**
(விஜிதா வளவு, அல்வாய்)

**இ. நித்தனசிங்கம்**
(ஊரிக்காடு, வல்வெட்டித்துறை)

**நா. தங்கராசா**
(வலவந்தோட்டம், கரணவாய்)

**இரத்தினம் சதீஸ்குமார்**
(மடத்தடி, குப்பிளான்)

**முத்து கணேஷ்**
(மஞ்சத்தடி, இணுவில்)

**K. கஜமுகன்**
(இராசவீதி, நீர்வேலி)

**செ. சிவலிங்கம்**
(மலர் வசந்தம், இணுவில்)

**N. ஜெயரட்ணராசா**
(பண்ணாகம், சுழிபுரம்)

**சி. சிவமோகன்**
(ஆனந்தகிரி, தாவடி)

**சி.து. கலைச்செல்வம்**
(பரமானந்தி அம்மன் கோவிலடி, இணுவில்)

**S. கிருபாகரன்**
(உபதபால்கந்தோர், ஆனைக்கோட்டை)

**வ. ரவிச்சந்திரன்**
(நல்லூர், யாழ்ப்பாணம்)

**வே. பரமேஸ்வரன்**
(மாரக்காய், புலோலி தெற்கு)

**வை.ச. பரஞ்சோதி**
(சோதி ஸ்ரோர்ஸ், கோண்டாவில்)
**ச. ஸ்ரீவிவேகானந்தராசா**
(கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்)
**சீ.சி. கந்தையா (பலாலி)**
(ஆவரங்கால்)
**தி. கருணாகரன்**
(கரன் எலக்ரோனிக், கரணவாய்)
**ந. முத்துக்குமாரசாமி**
(சிறுப்பிட்டி தெற்கு)
T. **தியாகலிங்கம்**
(இராமையாச் செட்டியார் வீதி, யாழ்ப்பாணம்)
**பூ. நித்தியானந்தம்**
(சிறுப்பிட்டி தெற்கு)
S. K. **பஞ்சாட்சரம் ஆச்சாரியார்**
(மானிப்பாய் தெற்கு)
**இ. தயாபரன்**
(கோண்டாவில்)
**க. ஜெயபாலகணேசன்**
(சிறுப்பிட்டி தெற்கு)
S. **சாம்பவி**
(யாழ்ப்பாணம்)
S. **கனகசுந்தரம்**
(சிறுப்பிட்டி தெற்கு)
**து. மனோகரன்**
(நல்லூர், யாழ்ப்பாணம்)
**அருளையா சுப்பிரமணியம்**
(நீர்வேலி மேற்கு)
**கி. சேந்தன்**
(கரணவாய் கிழக்கு, கரவெட்டி)
**த. புவனேந்திரன்**
(அந்திரானை, ஈவினை)
**ஆ. விநாயகமூர்த்தி**
(சாளம்பை, கரணவாய் மத்தி)
**சீ. வைகுந்தசாமி**
(திருத்தணி, வட அல்வாய்)
**சு. நவமணிநாதன்**
(புலோலி தெற்கு, புலோலி)

**ச. சிவகுமாரன் G.S.**
(அமுதசுரபி, கட்டுடை)
**K. நடராசா**
(பொறியியலாளர், பத்தமேனி)
**சி. நவரெத்தினம்**
(ஆனந்தா வீதி, மானிப்பாய்)
**S. சரவணபவன்**
(தோப்பு, அச்சுவேலி)
**ந. கனகநாயகம்**
(வட்டுக்கோட்டை கிழக்கு, சித்தங்கேணி)
**உரிமையாளர்**
(லக்ஷி தொலைத் தொடர்பகம், அச்சுவேலி)
**திருமதி ம. கமலக்கண்ணன்**
(கந்தப்பா வளவு, வல்வெட்டி)
**சி. சுப்பிரமணியம்**
(சமரபாகு, உடுப்பிட்டி)
**த. முகுந்தன்**
(மூளாய், சுழிபுரம்)
**வ. இளையதம்பி**
(முருகையன் கோவில் ஒழுங்கை, தும்பளை)
**சி. சுப்பிரமணியம்**
(பழைய பொலிஸ் நிலைய வீதி, சுண்ணாகம்)
**க. தேவதாஸ்**
(ஆவரங்கால் மேற்கு, புத்தூர்)
**ந. பொன்னுத்துரை**
(தொம்பை வீதி, உடுவில்)
**ச. திவாகரன்**
(உரும்பராய் மேற்கு)
**க. சச்சிதானந்தம்**
(சந்தை வீதி, உடுப்பிட்டி)
**நா. கதிரமலைநாதன்**
(உரும்பராய் கிழக்கு)
**நா. மகேந்திரராசா**
(பிறேம மகால், வல்வெட்டி)
**ச. ஹரிஹரன்**
(கரணவாய் தெற்கு)

உ

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய உற்சவத்தையொட்டி ஆச்சிரம மண்டபத்தில் 20.08.2009 தொடக்கம் 02.09.2009 புதன்கிழமை வரையான விசேட நிகழ்வுகள்

**20.08.2009 வியாழக்கிழமை**

விடயம் : "சாயி பஜனை"

**21.08.2009 வெள்ளிக்கிழமை**

சொற்பொழிவு : "தேவி பாகவதம்" (தொடர்)

வழங்கியவர் : அ. குமாரவேல் அவர்கள் (சிரேஷ்ட விரிவுரையாளர். யாழ். கல்லூரி வட்டுக்கோட்டை)

**22.08.2009 சனிக்கிழமை**

சொற்பொழிவு : "உன்னையே நீ அறிவாய்"

வழங்கியவர் : க. முருகமூர்த்தி அவர்கள் (ஆசிரியர்- யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி.)

**23.08.2009 ஞாயிற்றுக்கிழமை**

சொற்பொழிவு : "வேல் வெற்றி வேல்"

வழங்கியவர் : சைவப்புலவர் செ. கந்தசத்தியதாசன் J.P.அவர்கள்

(செயலாளர். அகில இலங்கை சைவப்புலவர் சங்கம்)

**24.08.2009 திங்கட்கிழமை**

சொற்பொழிவு : "தீராத விளையாட்டுப்பிள்ளை"

வழங்கியவர் : சைவப் புலவர் க. நித்தியதசீதரன் அவர்கள் (ஆசிரியர்)

**25.08.2009 செவ்வாய்க்கிழமை**

சொற்பொழிவு : "பிரணவம் உரைத்தோன்" வழங்கியவர் : K. கைலநாதன் அவர்கள் (ஆசிரியர்)

**26.08.2009 புதன்கிழமை**

சொற்பொழிவு : "கடவுள் எங்கே இருக்கின்றார்"

வழங்கியவர் : சைவப்புலவர் சி. நவரத்தினம் அவர்கள் (கீழ்க்கரவை நவம் - ஆசிரியர்)

**27.08.2009 வியாழக்கிழமை**

சொற்பொழிவு : "ஆறுமுகமான பொருள்"

வழங்கியவர் : சைவப்புலவர் ஏ. அனுசாந்தன் அவர்கள் (ஆசிரியர் - யூனியன் கல்லூரி. தெல்லிப்பளை)

**28.08.2009 வெள்ளிக்கிழமை**

"ஞானச்சுடர் மாதவெளியீடு"

வெளியீட்டுரை : இரா. ஸ்ரீ நடராசா அவர்கள் (ஆசிரியர் -யா/தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை ம.வி.)

மதிப்பீட்டுரை வழங்கியவர்: க. நடேசு (தெணியான்) அவர்கள்

**29.08.2009 சனிக்கிழமை**

சொற்பொழிவு : "இந்து சமயம் காட்டும் ஆன்மீகம்"

வழங்குபவர்: மதுரகவி காரை. M.P. அருளானந்தன் அவர்கள் (ஆசிரியர் - ஸ்ரான்லிக் கல்லூரி - யாழ்ப்பாணம்)

**30.08.2009 ஞாயிற்றுக்கிழமை**

விடயம் : "பஜனை" வழங்குபவர் : கோப்பாய் சத்தியசாயி நிலையம்

சொற்பொழிவு : நாயக நாயகி பாவம் வழங்குபவர் : சிவத்திரு வ. குமாரசாமி ஐயர் அவர்கள்

**31.08.2009 திங்கட்கிழமை**

சொற்பொழிவு : "துணை"

வழங்குபவர் : சிவத்தமிழ்ச் சொல்லழகர் ச. லலீசன் அவர்கள் (அதிபர். கோப்பாய் நோ.க.த.க. பாடசாலை)

**01.09.2009 செவ்வாய்க்கிழமை**

சொற்பொழிவு : "திருப்புகழுக்கு ஆசை கொண்டோம்"

வழங்குபவர் : ஆ. சிவநாதன் அவர்கள் (அதிபர். யா/ வல்வை சிவகுரு வித்தியாசாலை)

**02.09.2009 புதன்கிழமை**

சொற்பொழிவு : "அலங்காரம்"

வழங்குபவர் : செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல் அவர்கள்

உ

# பிள்ளை யார்

**- சில அறிமுகக் குறிப்புக்கள் -**

**துணைவியூர் கேசவன் அவர்கள்**

*முன்னவனே யானை முகத்தவனே முத்திநலம்*
*சொன்னவனே தூய்மைச் சுகத்தவனே மன்னவனே*
*சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சோதரனே*
*தற்பரனே நின்தாள் சரண்.*

விநாயக வழிபாடு என்பது இந்துக்களிடமிருந்து பிரித்துவிட முடியாத ஓரம்சமாக விளங்குகின்றது. எந்தக் கடவுளின் ஆலயத்திலும் எந்தக் கிரியைகளிலும் முதன்மை வழிபாட்டிற்குரியவராக அவர் விளங்குகின்றார். இன்று உலகமெலாம் பரந்துள்ள விநாயகர் வழிபாடு இந்துக்களால் மட்டுமன்றி பிறமதத்தினராலுங்கூட முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. எளிமையாம் உருவங்கொண்டிருக்கும் அவர் எளிமையான வழிபாட்டிற் கூட மனம் மகிழ்ந்து அருள்சுரக்கக் கூடியவர். தன்னைப் போற்றித் துதிப்போரை உயர்த்தி விடும் ஆற்றல் கொண்டவர். குழந்தை வடிவங் கொண்டிருப்பவரான அவர் இலகுவில் மகிழக்கூடியவர். அன்பைப் பகிரக் கூடியவர். இத்தகைய இயல்புகளால் தானோ என்னவோ இவர் முதன்மை வழிபாட்டிற்குரியவராகத் திகழ்கின்றார். ஸ்ரீ சங்கரர் மீளநிறுவிய 'சண்' மதங்களுள் காணாபத்தியம் ஒரு நெறியாக அமையினும் இந்துமதப் பிரிவினர் அனைவராலும் மட்டுமன்றி பௌத்தம் முதலிய பிறமதத்தவராலும் கூட விரும்பி வழிபடப்படுபவராகக் கணபதி விளங்குகின்றார்.

எளிமையானவராக விளங்கினாலுங் கூட தத்துவார்த்தங்கள் பலவற்றைத் தன்னுள் அடக்கியவராகப் பிள்ளையார் விளங்குகின்றார்.

**"யாதொரு தெய்வம் கொண்டீர்**
**அத்தெய்வமாகி அங்கே மாதொருபாகனார் தாம் வருவார்"**

என்ற திருமூலர் வாக்கிற்கமைய விநாயகரும் சிவவடிவமாகவே கொள்ளப்படுகின்றார்.

பிள்ளையார் வழிபாடு தொன்மை மிக்கதொன்றாகக் கருதப்படுவதற்குரிய சான்றுகள் உள்ளபோதிலும், தமிழர்கள் மத்தியில் நரசிம்ம பல்லவன் காலத்திலேயே வழக்கிற்கு வந்ததாகத் தெரிகின்றது. இன்று பல நாடுகளிலும் வியாபித்துள்ள விநாயக வழிபாடு மக்களின் நம்பிக்கைக்கும் ஈடுபாட்டிற்குமுரியதாகவே விளங்குகின்றது. பிள்ளையார் வழிபாட்டில் பல விரதங்கள் இடம் பிடித்துள்ளன. அவை பற்றியும் பிள்ளையார் வழிபாடு பற்றியும் பிள்ளையார் பற்றியும் பல புராணங்களும் தோத்திரங்களும் இலக்கியங்களும் பேசி உள்ளன. பிள்ளையார் பற்றிய விபரங்கள் சிலவற்றை அறிமுகத்திற்காகச் சுருக்கமாக நோக்கலாம்.

**எளிமையாம் வடிவம்:**

"பிடிச்சு வைச்சால் பிள்ளையார்" என்றொரு பழமொழி உண்டு. மஞ்சளினாலோ, சாணத்தினாலோ, களிமண்ணினாலோ அல்லது சந்தனத்தினாலோ பிள்ளையார் என நினைத்து உருண்டையாகப் பிடித்து வைத்து, அறுகு சாத்தினால் அங்கே பிள்ளையார் எழுந்தருளி விடுவார் என்பது ஐதீகம். அத்தனை எளிமை வாய்ந்தவர் அவர். எமது சடங்குகளிலும் கிரியைகளிலும் இம்முறையிலேயே பிள்ளையாரை எழுந்தருளச் செய்கிறார்கள். அது மட்டுமல்ல விநாயகர் வீற்றிருப்பதற்காய் பேராலயங்களை வேண்டுவதும் இல்லை. ஆற்றங்கரையோரங்களிலும் அரசமர நிழல்களிலும் கூட வீற்றிருந்து

**அருளின் மிக உயர்ந்த வடிவம் மௌனம்.**

அருளாட்சி நடாத்துகிறார். அவரது தோற் றங் கூட எளிமையானதே. இலகுவில் மனதில் நிறுத்திக் கொள்ளலாம். தியானத் தின் போது விரைவில் மனதில் வரவழைத் தும் கொள்ளலாம்.

பிள்ளையார் விரும்புவதும் நாடு வதும் மிக எளிமையானவற்றையே. அறுகு அவருக்கு மிகவும் பிடித்தமான பத்திரம். அது எங்கும் கிடைக்கக் கூடியது. ஒரு முறை முளைத்துவிட்டால் இலகுவில் அழிந்து போகாதது. விநாயகரும் அப்படியே. நாம் அவரில் அன்பு வைத்து, அவர் எம்மீது அருள் சுரக்கத் தொடங்கி விட்டால் அவ்வருள் இலகுவில் தீர்ந்து விடாது. இவ்வாறு அறுகை விரும்பும் தெய்வமாதலால் தான் "துர்வா கணபதி" என்றவரை அழைக்கின்றனர். வன்னி மரமும் வன்னிப் பத்திரமுங்கூட விநாய கருக்குப் பிரீதியானவை. இவை இரண் டும் மருத்துவக்குணங்கள் நிறைந்தவை என்பதைச் சித்தவைத்திய நூல்களி லிருந்து அறியலாம்.

பிள்ளையாருக்கு மிகவும் பிடித்த உணவு "மோதகம்" ஆகும். இது வும் எளிமையான பலகாரமே. அதுமட்டு மல்ல புரதச் சத்து நிறைந்தது. நீராவியில் அவிக்கப்படுவதனால் இலகுவில் ஜீரணிக் கக் கூடியது. உடலாரோக்கியத்திற்கு உகந்தது. தித்திப்பு நிறைந்ததால் பிள்ளையாரைப் போல பிள்ளைகளும் அதிகம் விரும்புவர். இவ்வாறு எளிமை யான வடிவம் உடையவராகப் பிள்ளை யார் இருப்பதனாலே தான்,

**"கல்லினாலே செய்யினும் மண்ணினாலே செய்யினும்**
**ஐந்தெழுத்து மந்திரத்தை நெஞ்சில் நாட்டும் பிள்ளையார்.**
**ஆற்றங்கரை மீதிலே அரசமர நிழலிலே வீற்றிருக்கும் பிள்ளையார்.**
**பெருமை வாய்ந்த பிள்ளையார்"**

எனப் பாடித் துதிக்கின்றோம்.


**தத்துவார்த்தத் தோற்றம் :**

விநாயகப் பெருமானின் அருட் தோற்றம் தத்துவ அர்த்தங்கள் பலவற் றைக் கொண்டிருக்கின்றது. "ஐந்து கரத் தனை ஆனைமுகத்தனை..." என அவரின் தோற்றத்தை வர்ணிக்கின்றார்கள். யானை முகம் அதாவது விலங்குமுகம் உடைய வர் அவர். மனித உடலும் தேவர்களைப் போன்ற நான்கு கரங்களும் கொண்டவர். அவரது குறுகிய கால்கள் பூதகணங் களுக்கு உரியன. இவ்வாறு பூதம், விலங்கு, மனிதன், தேவர் என அனைத்துமாகி அனைவர்க்கும் தெய்வ மாய்த் திகழ்கின்றார். இவரது பெருந்தலை ஞான நிறைவைக் குறித்து நிற்கின்றது. எப்போதும் அசைந்து கொண்டிருக்கும் சுளகுச் செவிகள், உயிர்கள் மலங்களின் பிணிப்பால் துன்பப்படாமல் வினைகளி னால் வருந் துன்பங்களிலிருந்து காத்து அருள்கின்றன என்பதனையும் யானைச் செவிகள் மிகக் கூர்மையானவையாதலால் அடியார்களின் குறைகளை எப்போதும் ஓர்ந்து கேட்டு அருள்புரிகின்றன என்ப தனையும் குறித்து நிற்கின்றன.

மத்தள வயிறுடையவர் கண பதி. அனைத்துலகும் அதற்குள் அடக்கம் என்பது அதனர்த்தம். பாம்பு ஆபரணத்தை வயிற்றில் அணிந்திருப்பவர் அவர். பாம்பு யோக சக்தியாம் குண்டலினி சக்தியின் குறியீட்டு வடிவம். பாம்பு சுருண்டு கிடப்ப தைப் போல ஒவ்வொருவரிடமும் மூலா தாரத்தில் குண்டலினி சக்தி சுருண்டு கிடக்கின்றது. யோகத்தினால் தூண்டப் படும்போது அது மேலெழுந்து பாம்பு படம் விரித்ததைப் போல விரிந்து உயிர்களைச் சிவமயமாக்கும் என்பர். பிள்ளையாருக்கு உள்ள இரண்டு தந்தங்களில் வலது தந்தம் ஒடிந்தும் இடது தந்தம் ஒடியாதும் காட்சி தருகின்றன. ஒடிந்த வலது தந்தம் பாசஞானத்தையும் ஒடியாத இடது தந்தம் பதிஞானத்தையும் உணர்த்துகின்றன. விநாயகரும் முக்கண் உடையவர்.

நல்லவனைக் கண்டபிழ நல்லவனாக நடிக்காதே.

**தத்துவ விநாயகர்**



னால்த்தான் சித்தி, புத்தி என்ற இரு பண்புகளையே அவருக்கு இரு மனைவிகளாக உருவகப் படுத்தியுள்ளனர் எனலாம். அறிவிற்கும் வெற்றிக்கும் காரணன் அவரே என்பது அர்த்தம் பிள்ளையார் மூஷிக வாகனன். ஆணவ வடிவான கஜமுகாசுரனுடன் போரிட்டு அவனது ஆணவத்தை அழித்து மூஷிகனாக்கித் தன்வாகன

அவரது வலது, இடது கண்கள் இக ஞானக்காட்சியையும், நெற்றிக் கண் பர ஞானக் காட்சியையும் தருவன. எனவே வழிபடும் அடியவர்களுக்கு இகபர காட்சிகளையும் சுகங்களையும் அளிக்க வல்லவராய் விநாயகர் விளங்குகின்றார். அவர் சூடியுள்ள பிறைச்சந்திரன் அறியாமை தேய்ந்த, ஞானம் பெற்ற உயிர்களை உயர்வடையச் செய்து தலைமேல் வைப்பவர் என்பதை உணர்த்தி நிற்கின்றன.

ஐங்கரனாம் விநாயகப் பெருமானின் ஐந்துகரங்களும் பஞ்சகிருத்தியங்களுக்குரியவையாகச் சுட்டிக் காட்டப்படுகின்றன. பாசம் ஏந்தியகை படைத்தலையும் அபயகரம் காத்தலையும் அங்குசம் ஏந்தியகை அழித்தலையும் மோதகம் ஏந்தியகை அருளலையும் தும்பிக்கை மறைத்தலையும் இயற்றுகின்றன. தமிழ்நாட்டில் பிள்ளையார் பிரமச்சாரியாக வழிபடப்படுகின்றபோதும் வட இந்தியாவிலே சித்தி, புத்தி என்ற இருநாயகிகளை உடையவராக உருவகிக்கப்பட்டு வணங்கப்படுகின்றார். தம்மை வழிபடும் அடியார்களின் செயல் சித்தியையும் (வெற்றி) அதற்குரிய புத்தியையும் (அறிவு) அருள்பவர் ஆதலி

மாக்கினார் பிள்ளையார். எனவே அவரின் வாகனமான மூஷிகம் ஆணவம் அடங்கிய ஆன்மாவின் குறியீடு. ஆணவம் முதலிய மலங்கள் நீங்கினால் இறைவனின் திருவடியை அடைந்து ஆனந்தப் பெருவாழ்வு பெறலாம் என்பது செய்தி.

யானை மிகவும் பலமிக்கது. அதனை யாராலும் அடக்கமுடியாது. அங்குசத்தைக் கொண்டுள்ள பாகனே யானையை அடக்க வல்லவன். யானை முகமுடைய விநாயகனும் பலமிக்கவரே. யாருக்கும் அடங்காதவர். அவர் அங்குசத்தினைக் கொண்டிருப்பதனால் அடக்க வல்லவராயும் அவரே இருக்கின்றார். தன்னை மிஞ்சிய தலைவரில்லை என்பதைக் குறிக்கவே யானைமுகம் கொண்டவரான விநாயகர் அங்குசத்தையும் ஏந்தி இருக்கிறார். யானைகள் மதநீரைப் பொழிவன. விநாயகரும் மும்மதங்களைப் பொழிகிறார். இச்சை, கிரியை, ஞானம் ஆகிய மூன்று சக்திகளையே அவர் பொழிகின்றார். கணபதி என்றால் கணங்களின் தலைவர் என்று பொருள்படும். அதுமட்டுமல்ல 'க' என்பது ஞானத்தையும் 'ண' என்பது வீடுபேற்றையும் குறித்து நிற்க 'பதி' என்பது

தலைவன் என்று பொருள்படுகின்றது. எனவே ஞானத்திற்கும் வீடு பேற்றிற்கும் தலைவராகக் கணபதி விளங்குகின்றார்.

பிரணவ ஒலியாகிய 'ஓம்' என்பதே உலகத்தின் மூலம், உலகினைப் படைக்க முன் இறைவன் ஓங்காரத்தைப் படைத்தான் என்றும் அதிலிருந்தே உலகைத் தோற்றுவித்தான் என்றும் ஞானிகள் உரைக்கின்றனர். பிள்ளையாரின் திருமுகத்தின் வடிவம் ஓங்காரமயமானது. பிள்ளையாரைப் போலவே ஓங்காரமும் இடப்பக்கக் கொம்பைக் கொண்டுள்ளது. வலப்பக்கம் கொம்பு இல்லை. எனவே உலகின் ஆதிவடிவம், உலகத் தோற்றத்தின் காரணன் கணபதியே என்பது விளங்கும். பிள்ளையார் சுழி வடிவமும் விநாயகரைக் குறிப்பதே. பிள்ளையார் சுழி, சிறு வட்டத்தினதும் கோட்டினதும் சேர்க்கை ஆகும். (உ) இது பிள்ளையாரின் துதிக்கையை ஒத்த வடிவம். இவ்வடிவம் நாதத்தினதும் விந்தினதும் சேர்க்கை வடிவம். சிவசக்தி தத்துவத்தை உணர்த்துவது. உலகத் தோற்றத்தைக் குறிப்பது. எனவே விநாயகர் சிவசக்தி தத்துவ வடிவினராயும் உலக மூலவராயும் திகழ்கின்றார்.

**சிவ சொரூபம் :**

விநாயகர் சிவபெருமானின் மூத்த புதல்வராகக் குறிப்பிடப்படுகின்றபோதும் அவர் சிவனிலிருந்து வேறானவர் அல்ல. சிவனின் இருபத்தைந்து வடிவங்களில் ஒன்றாகவே கருதப்படுகின்றார். இருவருக்கும் இருக்கும் ஒத்த பண்புகள் இதனைத் தெளிவாக்கும். சிவனும் விநாயகரும் முக்கண் உடையவர்கள். நடராஜரைப் போலவே விநாயகரும் பஞ்ச கிருத்தியங்களை நிகழ்த்துபவர் என்பதனை முன்னர் அறிந்தோம். இருவரும் பிறைச் சந்திரனைச் சூடியவர்கள். பாம்பாபரணத்தை அணிந்தவர்கள். சிவன் ஐந்து முகங்களை உடையவர், ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோஜாதம் என்பன அவ்வைந்து முகங்களுமாம். விநாயகரும் பஞ்சமுகங்களை உடையவராக ஹேரம்பகணபதியாகத் தோன்றுகின்றார். பஞ்சமுகார்ச்சனைக்குரியவராய்த் திகழ்கின்றார். இவற்றை வைத்துப் பார்க்கும் பொழுது சிவ அவதாரமே விநாயகர் என்பது புலனாகும்.

**முதன்மைத் தெய்வம் :**

வழிபாட்டு முதன்மைக்குரியவர் விநாயகராவார். நாம் எக்காரியத்தைச் செய்யத் தொடங்கினாலும் பிள்ளையாரை வணங்கியே அதனைத் தொடங்க வேண்டும். அவ்வாறே தொடங்குகின்றோம். சிவன் கோயிலாயிருந்தாலென்ன, விஷ்ணுவாலயமாக இருந்தாலென்ன, சக்தித்தலமாக இருந்தாலென்ன பிள்ளையாருக்கே முதல்வழிபாடு. இது சிவனே கொடுத்த வரம். முப்புரத்தை எரியூட்ட சிவன் சென்றபோது பிள்ளையாரை வணங்க மறந்தமையினால் சிவனின் தேரின் அச்சை பிள்ளையார் உடைத்தார் என்றும் அப்போது தான் வழங்கிய வரத்தைத் தானே மதிக்கத் தவறியதை உணர்ந்த சிவன் விநாயகரை வழிபட்டு முப்புரத்தை எரித்து மீண்டார் என்றும் புராணங்கள் செப்புகின்றன. இச்சம்பவத்தையே "முப்புரம் எரி செய்த அச்சிவன் உறைரதம் அச்சது பொடி செய்த அதிதீரா" என அருணகிரிநாதர் நினைவுபடுத்துகிறார். இந்தியாவிலுள்ள 'அச்சிறுபாக்கம்' என்னும் திருத்தலம் இச்சம்பவத்தை நினைவுபடுத்தி நிற்கின்றது. விநாயகரை வழிபட்டுத் தொடங்கப்படும் எல்லாக் காரியங்களுக்கும் வெற்றியைத் தருகிறார் அவர். பண்டைத் தமிழ் இலக்கியங்களில் பெரும்பாலானவற்றில் இடம்பெறுகின்ற காப்புச் செய்யுள்கள் பிள்ளையாருக்குரியதாயிருப்பதை அவதானிக்க வேண்டும்.

**வழிபாட்டுத் தொன்மை :**

இருக்கு வேதத்தில் விநாயகர் பற்றிய குறிப்புகள் காணப்படுவதனால் விநாயகர் வழிபாடு வேத காலத்திற்குரியது என ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். இலக்கிய, சிற்பச் சான்றுகளின்படி பல்லவர் காலத்திலேயே விநாயகர் வழிபாடு தமிழ்நாட்டிற் பரவியமை தெரியவருகின்றது. முதலாவது நரசிம்ம பல்லவன் சாளுக்கிய நாட்டை வென்றபொழுது அம்மன்னனின் படைத்தளபதியாகவிருந்த பரஞ்சோதி எனப்படும் சிறுத் தொண்டரால் வாதாபியிலிருந்து விநாயகர் சிற்பம் ஒன்று தமிழகத்திற்குக் கொண்டுவரப்பட்டது எனவும் இச் சிற்பம் இன்று திருச்செங்காட்டங்குடியில் உள்ளது எனவும் கூறப்படுகிறது. ஆனாலும் இந்தியாவின் பிறபகுதிகளில் கணபதி வழிபாடு முன்னரேயிருந்தமைக்குச் சான்றுகள் உள. எடுத்துக்காட்டாக கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தனவாக மதிக்கப்பெறும் அமராவதிச் சிற்பங்களுள் கணபதியுருவமுள்ளது என்பது கவனிக்கப்பட வேண்டியதாகும். விநாயக வழிபாடு தொன்மையான யானை யக்ஷ (உருவ) வழிபாட்டின் தொடர்ச்சியாகக் கொள்ளப்படுகின்ற போதும் கி.பி. 5ஆம் நூற்றாண்டிற்குப் பின்னரே தொடர்ச்சியான வரலாற்றைக் காணக்கூடியதாக உள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரையிலும் விநாயக வழிபாடு தொன்மை மிக்கதாகவே இருக்கின்றது. கி.பி. 7ஆம் நூற்றாண்டிற்கு முன்னரானதாகக் கிடைப்பனவற்றுள் மிகிந்தலை சைத்தியத்தின் 'வாகல்கட்' என்னும் வாசற்புறத் தூணில் இடம்பெறும் பிள்ளையார் (கணேசர்) சிற்பம் குறிப்பிடத்தக்க தொல்லியற் சான்றாகும் கி.பி. 3ஆம் நூற்றாண்டளவில் இலங்கையில் பௌத்தர் மத்தியில் இத்தெய்வத்திற்கு இருந்த செல்வாக்கை மிகிந்தலையிலுள்ள புடைப்புச் சிற்பம் காட்டுவதாக அறிஞர் கருத்துத் தெரிவித்துள்ளனர். ஈழத்தின் தொன்மையான தாது கோபுரங்களில் ஒன்றான 'கண்டக சேத்தியத்தின்' அலங்காரத்தில் கணபதி சிற்பம் காணப்படுகிறது. இச்சிற்பம் கி.மு. 1ஆம் நூற்றாண்டிற்குரியது என்றும் ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இதனை விட கி.மு. 3 அல்லது 2ஆம் நூற்றாண்டிற்குரிய ஈழத்தின் மிகப் பழைய கல்வெட்டொன்றில் கணபதி பற்றிய குறிப்புள்ளது. இக்கல்வெட்டு அனுராதபுர மாவட்டத்திலுள்ள வனசிம் உற விகாரையில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

**வழிபாட்டு வியாபகம் :**

இந்தியா, இலங்கை போன்ற நாடுகளில் மட்டுமன்றி நேபாளம், தீபெத், மங்கோலியா, ஆப்கானிஸ்தான், கம்போடியா, சீனா, ஜப்பான், பர்மா, தாய்லாந்து, இந்தோனேஷியா, மலேசியா போன்ற நாடுகளில் வழிபடப்பட்டு வந்த விநாயகர் இன்று அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளிற் கூட வியாபித்துள்ளார். இந்து மதத்தினரால் மட்டுமன்றி சமணம், பௌத்தம் போன்ற பிறமதத்தவராலும் வழிபடப்படுபவராகத் திகழ்கின்றார். பௌத்த மதத்தில் விநாயக வழிபாடு பிரபல்யம் பெற்றது. புத்தர் தனது சீடராகிய ஆனந்தனுக்கு ராஜ கிருகத்தில் கணேசரின் ஹ்ருதய அநுபூதி மந்திரத்தை அருளியதாகக் கூறப்படுகின்றது. அந்த மந்திரம் "நமோ பகவதே சூர்ய கணபதி ஹ்ருதயாய" எனவும் இம்மந்திரம் நேபாளத்தில் வழக்கிலுள்ளது எனவும் சொல்லப்படுகின்றது.

**விரத வழிபாடு :**

விநாயக வழிபாட்டிலும் விரதங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. மாதந்தோறும் வரும் வளர்பிறை தேய்பிறை (சங்கடஹர சதுர்த்தி) சதுர்த்தித் திதிகள் விநாயக வழிபாட்டில் முக்கியத்துவம் பெறுகின்றன. ஆவணி மாத வளர்பிறைச் சதுர்த்தி விநாயகர் சதுர்த்தியாகச் சிறப்பாக

தாகத்துக்கு முன்பே கிணறைத் தோண்டு

அனுஷ்டிக்கப்படுவதோடு இந்தியாவில் பண்டிகையாகவுங் கூட கொண்டாடப்படுகின்றது. மார்கழி மாதத்தில் இருபத்தொரு நாட்கள் அனுஷ்டிக்கப்படும் விநாயகசஷ்டி விரதம் (பிள்ளையார் பெருங் கதை விரதம்) விநாயக விரதங்களுள் முதன்மையானது. சுக்கிரவாரம் (வெள்ளிக்கிழமை) முதலிய இன்னும்பல விரதங்களும் விநாயகருக்காக அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றன.

**இலக்கியக் காட்சி :**

விநாயகர் பற்றிய தகவல்களைப் பல புராணங்கள் தருகின்றன. இருக்கு வேதமும் விநாயகர் பற்றிய குறிப்புக்களைத் தருவதாகக் கூறப்படுகின்றது. சிவபுராணம், கந்தபுராணம், மச்சபுராணம், வராக புராணம் போன்ற புராணங்கள் பலவற்றிலும் விநாயகர் தொடர்பான செய்திகள் காணப்பட்டாலும் விரிவான விடயங்களைத் தருவது விநாயக புராணமேயாகும். தாய் தந்தையை உலகமெனக் கருதி வலம் வந்து வழிபட்டு மாம்பழம்பெற்றமை, கஜமுகாசுரனைச் சங்கரித்தமை, சிவனது தேரின் அச்சை முறித்தமை, வியாசருக்காய் மகாபாரதத்தை எழுதியமை போன்ற பல கதைகளைப் புராணங்கள் சொல்கின்றன.

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் முதலிய நாயன்மார்கள் பலரும் தமது தோத்திரங்களில் விநாயகரைப் பற்றிக் குறிப்பிட்டுப் பாடியுள்ளனர். பிற்கால அருணகிரி நாதர் முதலியோரும் பிள்ளையாரைப் பாடிப் பரவியுள்ளனர். நம்பியாண்டார் நம்பி இயற்றிய 'மூத்த நாயனார் திருவிரட்டை மணி மாலை', 'மூத்த நாயனார் மும்மணிக் கோவை', 'திருநாரையூர் விநாயகர் இரட்டை மணிமாலை' போன்றன பிள்ளையாரைப் பாட்டுடைத்தலைவனாகக் கொண்ட தொன்மையான இலக்கியங்களாகும். அவற்றைத் தொடர்ந்து பலராலும் படைக்கப்பட்ட இலக்கியங்கள் பலவற்றிலும் விநாயகர் பாட்டுடைத் தலைவராகி உள்ளார். நவீன கவிதைக்கு வித்திட்ட மகாகவி பாரதியார் பாடிய 'விநாயகர் நான்மணிமாலையும்' விநாயகரைப் போற்றும் இலக்கியமாகும். ஒல்லாந்தர் காலத்தவரான நம் நாட்டு சுண்ணாகம் வரதபண்டிதர் எழுதிய 'பிள்ளையார் கதை' இன்றும் விநாயக சஷ்டி விரத காலங்களில் ஆலயங்கள் தோறும் படிக்கப்பட்டு வருகின்றது.

காசிப முனிவரால் எழுதப்பெற்ற 'விநாயகர் கவசம்', காசிப முனிவர் முதலியோரால் பாடப்பெற்ற 'விநாயகர் அட்டகம்' (காரிய சித்தி மாலை), ஔவையார் அருளிய 'விநாயகரகவல்', அருணகிரிநாதரின் 'முத்தி விநாயகர் அகவல்' முதலியன விநாயக வழிபாட்டிற்குரிய சிறந்த தோத்திரங்களாகும். விநாயகருக்குரிய 'காயத்திரிமந்திரம்', 'கணேச பஞ்சரத்தினம்', விநாயகருக்குரிய 'சகஸ்ரநாமம்' முதலியன பிள்ளையாரைப் பூஜிப்பதற்கேற்ற மந்திரங்களாகும்.

வியாபகமும் பேராற்றலும் மிக்கவரான விநாயகரின் முழுத்திறத்தையும் உரைத்திட யாரால் முடியும்? வாழ்நாளெலாம் தேடினாலும் அறிந்தாலும் கேட்டாலும் கண்டுணர முடியா இறைவியாபகமே அவனதாகும். நம்பியாண்டார் நம்பியின் அன்பிற்காய் இரங்கி, இறங்கி நைவேத்தியத்தை ஏற்று, ஞானமளித்த நாயகனான விக்னேஸ்வரன் நாம் அன்பளித்தால் ஏற்றிட வரமாட்டானா என்ன? ஞானமும் ஆற்றலும் நல்வாழ்வும் நமக்கருளமாட்டானா என்ன? அன்பெனுஞ் சங்கிலியால் அவனைப் பிணைப்போம். அவனுள் பிணைவோம். நிகரிலா இன்பம் நுகர்வோம்.

செல்வச் செருக்கு தலைகாட்டியே தீரும்

உ

# தொண்டைமானாறு தொடக்கம் மாணிக்க கங்கை வரை

– கு. சிவபாலராஜா அவர்கள் –

எல்லாம் வல்ல இறைவன் நீர் நிலைகளின் அருகமர்ந்து அடியவர் களுக்கு அருள் புரியும் சிறப்புடையது எமது சைவ சமயம். இவ்வாறே, அன்று தொண்டைமானாறு ஆற்றங்கரையினில் முருகப் பெருமான் மருதர் கதிர்காமர் என்பவருக்கு நேரில் காட்சியளித்து தன் அருட் கடாட்சத்தை வழங்கிய வரலாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலயத்திற்கு உண்டு.

தென் இலங்கை கதிர்காமம் முருகன் தலம் பல் வகை சிறப்புடையது. இங்குதான் ஏழு மலை உண்டு. கதிர்காம முருகன் மாணிக்க கங்கை ஓரத்தில் அமர்ந்து அருள் புரிகிறார். கதிர்காமம் முருகதல கரை யாத்திரையானது இலங்கையில் நிகழும் புனித நிகழ்வுகளில் ஒன்று. தொன்று தொட்டு இன்று வரை இது நடைபெற்று வருகின்றது. அண்மைக் கால அரசியல் நிகழ்வுகள் இதற்கொருதடையாய் அமைந்தமையால் இன்று இதில் கிழக்கிலங்கை மக்கள் அக்கறை காட்டி வருகின்றனர். மட்டக் களப்பு மாவட்டத்தில் பல கிராமங்களில் இருந்தும் இன்று கரைப்பாதை யாத்திரையில் மக்கள் பங்கு கொள்கின்றனர். இந்த யாத்திரையின் வரலாறு மிகப் புனித எண்ணத்துடன் நோக்கப்பட வேண்டியது. இதன் ஆரம்ப கால நிகழ்வு பருத்தித் துறை சித்தி விநாயகர் திருத்தலத்தில் ஆரம்பமாகி கதிர்காமத்தில் முடிவடைந்தமை பழைய வரலாறு. இடையில் செல்வச் சந்நிதி முருகன் கோயிலை அடைந்து யாத்திரை மேற்கொள்ளும் அடியார்கள் அங்கிருந்து தொண்டைமானாறு நீர் வழிப் பாதையைப் பயன்படுத்தி வங்காள விரிகுடாப் பெருங்கடலில் பிரவேசித்து வற்றாப் பளை கண்ணகை அம்மன் ஆலயத் திற்கு அருகிலுள்ள நந்திக் கடலையடைந்து அதன் வழியே அம்மன் ஆலய வாசலை அடைவார்கள். அடியவர் மரக் கலங்களையே இதற்குப் பயன்படுத்தியதாகவும் பின்னர் தோணிகளிற் பிரயாணம் செய்த தாகவும் கூறப்பட்டுள்ளது. வற்றாப்பளை கண்ணகை அம்மன் கோயிற் பொங்கல் மங்களமாக நடைபெற்றுக் கொண்டிருக்கும் வேளையில் கரையாத்திரை அடியார்கள் இரவு நேரத்தில் தோணிகளில், நந்திக் கடலில் வரிசையாக வந்து சேருவது கண்கொள்ளாக் காட்சியாக முன்னர் நிகழ்ந்ததாக வரலாறு. இன்று செல்வச் சந்நிதி முருக தலத்தில் இருந்து அடியவர் புறப்படுகின்ற வழமை உண்டு. ஆயினும் இதற்கு தரை வழிப் பாதையையே அடியார்கள் பயன்படுத்துகின்றனர். நேராக வற்றாப்பளை அம்மன் கோயிலை அடைந்து அங்கிருந்து கிழக்குக் கரையோரமாக அடியவர் செல்வது கண்கொள்ளாக்காட்சியாகும். ஒரு முறை சுமார் எழுநூறு பேர் அடியவர்கள் கொண்ட ஒரு கூட்டம் ஏழு மலையான் திருத்தலம் நோக்கிச் சென்ற காட்சியானது பார்ப்போர் நெஞ்சத்தை உருக்கும் நிகழ்வாக அமைந்தது. கணவனைப் பிரிந்து மனைவியும் மனைவியை வெறுத்து கணவனும், குடும்பப் பந்துக்களை துறந்த நிலையில் முருகனது நினைவு ஒன்றே தமக்கு ஆதாரம் எனக் கருதும் நிலையில் அடியவர்கள் திடீரெனப் பக்திப்பரவசம் கொண்டு அம்மன் தலத்தில் பொங்கல் முடிந்த

மறுநாட் காலை கோயிலை வலம் வந்து, தீ மிதித்து கண்ணீர் மல்க விடைபெற்றுச் செல்வர். இதை நேரிற் பார்த்தவர்கள் தாமும் திடீரென பக்திப் பரவசத்துடன் அவர்களுடன் இணைந்து கொள்வர்.

செல்லும் இடமெல்லாம் அடியவர்களுக்கு அன்னதானம் தாகசாந்தி முதலியன தாராளமாகக் கிடைக்கும், செல்லும் ஒவ்வொரு கோயில்களிலும் வரவேற்பும் மரியாதையும் பயபக்தியும் காணப்படும். சில இடங்களில் தீ மிதிப்பு நிகழ்வுகள் கோயில்களில் சிறப்பு நிகழ்வாக இடம்பெறும்.சில பாதைகள் நீரினால் பிரிக்கப்பட்டிருக்கும் அப்போது அங்கே வள்ளங்கள் மூலம் அடியவர் பிரயாணிப்பர். சில இடங்களில் காட்டுப் பாதைகள் யானை, புலி, கரடி, காட்டெருமை முதலிய மிருகங்கள் இவர்களைக் கண்டு வழி விட்டுக் கொடுக்கும் முருகன் துணையை மனத்தைரியமாகக் கொள்வர், காட்டுப் பாதைகளில் சில இடங்களில் அடியவர் தமது உணவை சமைத்துச் சாப்பிடுவர். சமையற் பாத்திரங்களை தம்மோடு எடுத்துச் செல்வர். கட்டகாமம் என்னும் இடத்தில் நின்று பார்க்கும் போது கதிர்காமம் உச்சிமலை தெரியும். அடியவர் அரோஹரா சொல்லி முருக நாமம் உச்சரிப்பர், செல்லும் போது மொனராகல மாவட்டத்தில் காடுகளில் யானைத் தந்தம் புலிப் பல் தோகை மயிலின் இறகுகள் முதலியன தேடுவாரற்றுக் காணப்படும். அடியவர் இவற்றைத் தொடவும் மாட்டார்கள். காடுகளில் மரங்களில் புளியம்பழம், முருங்கைக் காய், பலாப்பழம் முதலியன தொங்கும்.

முருகனது கிருபையால் வழி மாறிய அடியவர்களுக்கு முருகன் மனித வடிவில் வந்து வழிகாட்டிய பின்னர் மறைந்த சம்பவங்களும் நடைபெற்றுள்ளன. பிள்ளைப் பாக்கியம் பெறும் நோக்கோடு கரைப்பாதை யாத்திரை மேற்கொள்வோருக்குப் பிள்ளைவரம் கொடுக்கும் தன் அருட்கடாட்சத்தையும் முருகப் பெருமான் காட்டியுள்ளார். ஒரு முறை பிள்ளை இல்லாத ஒரு பெண்ணுக்கு பெண் வடிவில் காட்சியளித்த முருகப் பெருமான், உடல் முழுவதும் சொறி சிரங்குள்ள ஒரு பிள்ளையைத் தன் கைகளில் ஏந்தியபடி "இந்தா இப்பிள்ளையைப் பிடி" எனக் கூறி அப்பெண்ணை அணுகியபோது, சிரங்குள்ள பிள்ளை இது எனக்கு வேண்டாமெனக் கூறி அப்பெண் மறுக்கவும் அன்றிரவு அப் பெண்ணின் கனவில் தோன்றிய முருகன் "நான் தரும் போது வேண்டாம் என்றீர் உனக்கினிப் பிள்ளை இல்லை" எனக் கூறியருளினார். இத்தகைய சம்பவங்கள் 1973ஆம் ஆண்டு வரை அதாவது அண்மைக் காலம் வரை இடம்பெற்றமை உண்மையாகும். நடந்து செல்லவும் இயலாத அடியார் ஒருவரை இவர் பெண் அடியார் முருகப் பெருமான் சிறுவன் வடிவில் தோன்றி கதிர்காமம் காட்டுகிறேன் வா என அவள் கையில் பிடித்து ஒரு சிறு பொழுது நேரத்தில், வாய் கட்டிப் பூஜை செய்யும் கதிர்காமக் கந்தனின் காட்சியைக் காட்டியருளினார்.

கரைப் பாதை அடியார்கள் புறப்பட்டுச் செல்லும் போது மூன்று பிரிவினராகத் தமக்குள் பிரிந்து ஒற்றுமையுடன் செல்வர், இவர்கள் செல்வச் சந்நிதி முருகன் குழுவினர், மௌனக் குழுவினர் இயக்கச்சிச் சாமியார் அடியவர்கள் என மூன்று பிரிவினராவர். இவர்களில் மௌனக் கூட்ட அடியார்கள் ஆரம்பம் முதல் முடிவு வரை வெள்ளைத் துணியால் தமது வாயைக் கட்டி மௌனமாகவே செல்வர். கதிர்காமத் தலத்தை அடைந்த பின்னரே இவர்கள் வாய் திறந்து ஒருவரோடு ஒருவர் கதைப்பர், அதுவரை யாதொன்றும் பேசவும் மாட்டார்கள். இயக்கச்சி

இடத்தைச் சேர்ந்த சுவாமியார் ஒருவர் பல காலமாக யாத்திரை மேற்கொண்ட அனுபவம் உடையவர். அவரைத் தலைமையாகக் கொண்ட அடியார் கூட்டம் அவர் பெயரால் வழங்கப்பட்டது. இவ்வடியார்கள் அவரையே தமது வழித்துணையாகக் கொண்டு தமது யாத்திரையை மேற்கொள்ளுவர். இடையில் காட்டுப் பிரதேசங்களில் அடியார்கள் வழி தெரியாது குழம்பி நின்ற வேளையில் இச் சுவாமியாரே தமது கண்களை மூடி முருகனை வேண்டிப் பின்னர் முருகப் பெருமான் வழிகாட்ட அதன் வழி தொடர்வார். இவையெல்லாம் முருகப் பெருமானின் அருட் செயலன்றோ. மூன்றாவது அடியார் கூட்டம் எமது சந்நிதிக் கோவிலடியில் ஒன்று சேர்ந்து தமது யாத்திரையைக் கரையோரப் பாதை வழியே தொடர்வர், இவர்கள் சந்நிதி அடியார் கூட்டம் என அழைக்கப்பட்டனர்.

தொண்டைமானாறு செல்வச் சந்நிதி முருகன் தலத்திற்கும், தென்னிலங்கை கதிர்காமக் கந்தன் திருத்தலத்திற்கும் பூர்வீகக் கதைத் தொடர்புகள் உண்டு. வட இலங்கையில் ஓர் கதிர்காமம் ஆக சந்நிதிக் கோயில் விளங்கி வருவது சிறப்பு. கதிர்காம முருகன் மருதர் கதிர்காமருக்கு நேரில் "கதிர்காமம் காட்டுகிறேன் வா" எனத் திருவாய் மலர்ந்து, கதிர்காமத்தில் நடக்கும் வாய் கட்டிய பூசை முறை களையே காட்டி, அதை இங்கேயும் பின்பற்ற தான் விரும்புவதாகவும் அருள் கொடுத்துள்ளார். எனவே அங்குள்ள முருகன் இங்கு உறைந்து அருள் பாலித்து வருவது நாம் பெற்ற பெரும் பேறு.

தொண்டைமானாறு சந்நிதி முருகப் பெருமான் தீர்த்தமாடும் ஆறு அது. மாணிக்க கங்கை கதிர்காம முருகப் பெருமான் திருவிழாவின்போது தீர்த்தமாடும் கங்கை. மூர்த்தி தலம் தீர்த்தம் ஆகிய மூன்று வகை சிறப்புக்களையும் இவ்விரு தலங்களும் பெற்றுள்ளமை சிறப்பு மிக்கது. அன்னக் கந்தன் இவ்விருதலங்களிலும் வீற்றிருந்து அடியார்களுக்கு, அமுதளித்து வருகிறார். கற்பூரம், காவடிச் சிறப்புக்கள் நிறைந்துள்ள தலங்கள் இவை.

**வாழ்க சிவனடியார் திருப்பாதங்கள்.**



## உன்னை வெல்ல யாருமில்லை முருகா!

**உன்னை வெல்ல யாருமில்லை**
**ஒத்துக் கொள்கின்றேன் முருகா,**
**உன்னை நான் மறக்கவில்லை**
**பூத்திருக்கின்றேன் முருகா,**
**என்னை நன்றாய் நீ படைத்தாய்**
**ஏற்றுக் கொள்கின்றேன் முருகா,**
**என்னையாரும் அடிமையாக்க மட்டும்**
**ஏற்றுக் கொள்ளாதே முருகா.**

**கே.எஸ். சிவஞானராஜா**

**உன் உள்ளம் எப்படியோ அப்படியே உலகம்**

உ

(தொடர்ச்சி...

# ஒளவையார் அருளிச் செய்த

# கொன்றைவேந்தன்

## மூலமும் உரையும்

*25. கௌவை சொல்லின் எவ்வருக்கும் பகை.*

ப-ரை. கௌவை - (பிறர்மேலே பழிச்சொல்லுகளை சொல்லின் - (ஒருவன் சொல்லினால், எவ்வருக்கும் - எல்லாருக்கும், பகை - (அவன்) பகையாவான்.

*26. சந்ததிக்கு அழகு வந்தி செய்யாமை*

ப-ரை. சந்ததிக்கு - தன் வமிசம் பெருகுதற்கு, அழகு - அழகாவது, வந்தி - மலடியாக, செய்யாமை - செய்யாமல் (தன்மனையாளோடு) கூடி வாழ்தலாம்.

*27. சான்றோர் என்கை ஈன்றோட்கு அழகு*

ப-ரை. சான்றோர் என்கை - (தன் புத்திரரைக் கல்வியறிவால்) நிறைந்தோர் என்று (கற்றவர்) சொல்லுகிறது, ஈன்றோட்கு - பெற்றவளுக்கு, அழகு - அழகாகும்.

*28. சிவத்தைப் பேணின் தவத்திற்கு அழகு.*

ப-ரை. சிவத்தை - (முதற் பொருளாகிய) பரம சிவத்தை, பேணின் - (ஒருவன்) வழிபட்டால், தவத்திற்கு - (அவன் செய்யுந்) தவத்திற்கு அழகு - அழகாகும்.

*29. சீரைத் தேடின் ஏரைத் தேடு*

ப-ரை. சீரை - சௌக்கியத்தை, தேடின் - (உனக்குத்) தேடுவாயானால், ஏரை - பயிரிடுந் தொழிலை, தேடு - நீ தேடிக் கொள்ளு

*30. சுற்றத்திற்கு அழகு சூழ இருத்தல்*

ப-ரை. சுற்றத்திற்கு - உறவினருக்கு, அழகு - அழகாவது, சூழ - (சுபாசுபங்களிலே பலரும் வந்து) சூழ, இருத்தல் - (சமீபங்களிலே) குடியிருக்கையாகும்.

*31. சூதும் வாதும் வேதனை செய்யும்*

ப-ரை. சூதும் - சூதாடுதலும், வாதும் - தருக்கம் பேசுதலும், வேதனை - வருத்தத்தை, செய்யும் - உண்டாக்கும்.

*32. செய்தவம் மறந்தால் கைதவம் ஆளும்*

ப-ரை. செய்தவம் - செய்யுந் தவத்தை, மறந்தால் - (ஒருவன்) மறந்தால், கைதவம் - பொய்யாகிய அஞ்ஞானமானது ஆளும் - (அவனை அடிமை கொண்டு) ஆளும்.

*33. சேமம் புகினும் யாமத்து உறங்கு*

ப-ரை. சேமம் - காவற்கூடத்திலே, புகினும் - போய் (ஒரு வேலையும் இல்லாமல்) இருந்தாலும், யாமத்து - ஏழரை நாழிகைக்குப்பின், உறங்கு - நீ நித்திரை பண்ணு. (தொடரும்.....

உ

# "அருணகிரியாரும் திருப்புகழும்"

- ஆ. மகேசு அவர்கள் -

முருகக் கடவுளைத் தமிழ்க் கடவுள் என்று போற்றுகிறவர்கள் அருணகிரிநாதரின் அதியத் தமிழாகிய திருப்புகழையும் நன்றாக அறிந்திருக்கக் கூடும். "முருகும் தமிழும் இரண்டல்ல ஒன்றே! என்று துணிந்திருப்பவர்கள் திருப்புகழைப் பாராயணம் செய்பவர்களாகவும் இருக்கக் கூடும். 'செந்தமிழ் நூலோன்' என்று முருகக் கடவுளைப் புகழ்கின்றார்களே. இத்தகைய புகழுக்கு முருகவேளை உரியதாக்கிய செந்தமிழ் நூல்களிலே திருமுருகாற்றுப் படையும் திருப்புகழும் நனி சிறந்தவை. இந்த இரண்டு நூல்களிலும், மக்கள் இலக்கியமாகவும் இசைப்பிரியர்களின் இன்பக் களஞ்சியமாகவும் போற்றப்படுவது அருணகிரியாரின் திருப்புகழே. இது தமிழர்களின் முருககீத வேதம்.

இதன் பின்னணியில் "அருணகிரியாரும் திருப்புகழும்" என்ற தலைப்பினை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்வதே இதன் நோக்கமாகும். திருவண்ணாமலை நகரத்தில் சக்திவேல் குமரனை நித்தியம் பக்திசெய்யும் முத்து என்னும் ருத்திரக் கணிகையின் குலவிளக்கெனப் பண்டைய தவத்தின் பயனாகப் பதினைந்தாம் நூற்றாண்டில் கொற்றவேல் குமரன் தொண்டர் தம் அணியாம் அருணகிரிநாதர் அவதரித்தார். இவருக்கு ஆதி என்று ஒரு சகோதரி இருந்தார். அருணகிரியாரை மனங்கோணாமல் வேண்டியவையளித்துக் காக்கும்படி ஆதியம்மையிடம் ஒப்புவித்துத் தாய் மரணமடைந்தாள். தாய்க்குத் தந்த உறுதிமொழியைத் தவறாது தமக்கையும் தம்பியைப் பள்ளியிற் சேர்ந்து, அன்னையினும் பரிவோடு ஆதரித்து வந்தார். இளம்பருவம் கடந்தபின் அருணகிரியார் தமக்கையின் ஆணைக்கு அடங்காத காளையாகத் திரிந்து காமாந்தகாரத்தில் உழன்று கொண்டிருந்தார்.

அன்னை ஈட்டிக்கொடுத்த பொருட்கள் எல்லாம் இழந்து தொழுநோய்க்கு ஆளானார் அருணகிரியார். தம் தவறுகளால் தமக்கையும் வறுமை நோயினால் வருந்துகின்றாளே என்று கூடக் கவலைப்படாமல் தமக்குத் தொழுநோய் வந்துவிட்டதே என்றும் கவலைகொள்ளாமல், மேலும் மேலும் தாம் சென்று கொண்டிருந்த தவறான பாதையிலே செல்லவிரும்பிச் செலவுக்குப் பொருள் தரும்படி ஆதியம்மையைக் கேட்டார்.

தம்பியின் அந்தப் பரிதாப நிலையை உணர்ந்து புத்திமதி கற்பிக்க விரும்பினாள் தமக்கை, நானோ வறுமையில் வாடுகின்றேன். உன் அன்னையோ உனது மனங்கோணாமல் நடந்து கொள்ளும்படி ஆணை தந்து மறைந்தாள். நீயோ! இன்னும் கணிகையரையே நாடி நிற்கின்றாய். நானும் கணிகையர் வகுப்பினள் தானே! என்று தம்பியின் மனம் சுடப் பேசினாள். உடனே அருணகிரியார் கணமும் அவள்முன் நில்லாது ஓடிப்போய் விட்டார்.

தன் வாழ்க்கையின் மீது வெறுப்பு ஏற்பட்டுவிட்டது. அருணகிரியாருக்கு. அண்ணாமலையார் கோயிலில் வல்லாளராஜன் கோபுரத்து உச்சியிலே ஏறினார். மனங்கரைந்து கண்ணீர்சோர முருகக் கடவுளைத் தியானித்துக் கைகூப்பிய வண்ணம் "அடியேனுடைய தவறுகளையெல்லாம் இதோ விண்ணப்பித்துக் கொள்கின்றேன்" என்று வாய்விட்டுக் கூறினார். "என்னை ஆட்

கொண்டருளும் கருணைவள்ளலே" என்று யிரை இதோ உன்வசம் ஒப்படைக்கிறேன் எனச் சொல்லிக்கொண்டே கோபுரத்தில் இருந்து கீழே குதித்து விட்டார்.

**"குன்(று) உளழ்கோ புரத்தேறிக்**
**கூசாமல் குதித்தானே"**

என்கின்றது புலவர் புராணம் குதித்தவர்முன், மேகக் கூட்டங்களிடையே எழுந்த மின்னற் பிழம்புபோல் ஒளி ஒன்று உதயமாக, அதிலிருந்து ஒளிக் கிரணங்கள் போன்ற கைகள் தோன்றி விழுந்த அருணகிரியாரை ஏந்திக் கொண்டனவாம். அந்த உருவம் ஏந்திப் பூமியில் விட்டதும், அருணகிரியார் உற்றுநோக் கினார். அருள் ஒழுகு கண்ணும் அறங்கிடந்த நெஞ்சுமாய்நின்ற அத் திருவுருவம் பொருள் கிடந்த சொற்பொலிவு கொண்டு "இது முறையன்று" என்றது.

அத்திருவுருவம் திருநீறு அணிவித் தது. குளிரநோக்கியது. ஆறெழுத்து மந்தி ரத்தை உபதேசித்தது. ஜபமாலை தந் தது. இவர் தாயாகிய முத்தம்மையின் பெயரை முதலாக உடைய "முத்தைத் தரு.... எனத் தொடங்கிப் பக்தியுடன் பாடுமாறு கட்டளையிட்டது. பிறகு அந்த ஜோதி உருவம் கோபுரத்தை அடுத்து வடபால் உள்ள பிம்பத்துள் மறைந்தது. பிறகு அருணகிரியார் செய்ததென்ன?

**"குருவாகி வந்ததும் அக்**
**குமரனே எனத்தேறி**
**ஒருவாமல் இரவுபகல்...**

உருச் செபித்து தியானித்தார் என்கிறது புலவர் புராணம்.

செந்தமிழால் முருகக் கடவுளைத் துதிசெய்யும் ஆற்றல் வந்துவிட்டது அருணகிரியாருக்கு. "முத்தைத் தரு.... என்று பெருமான் அடியெடுத்துக் கொடுத்தார் அல்லவா?

**"முத்தைத் தரு பத்தித்திரு நகை**
**அத்திக்கிறை சத்திச் சரவண**
**முத்திக்கொரு வித்துக் குருபர....."**

என்று கடல்மடை திறந்தாற்போல பாடத்தொடங்கி விட்டார் அருணகிரியார். ஒன்றா! இரண்டா!! பதினாறாயிரம் பாடல்களையல்லவா பாடியருளினார்.

அன்றுதொட்டு கௌபீனதாரியாகி, முருகவேள் ஆட்கொண்ட அற்புதக் கரு ணைத் திறனை எண்ணியெண்ணி அகங் குழைந்து, தாம் அதற்குமுன் காமுகராய் அனுபவித்த துக்கங்களை முற்பகுதி யிலே வைத்துப் பாடத் தொடங்கினார் அருணகிரியார். முருகக் கடவுளின் கொற்றவேல் கொண்ட தோளின் திறத் தையும், வேதசிகரமாக விளங்கும் தாளின் திறத்தையும் மறவாது பாடினார். கற்றா ரும் மற்றாரும் தேனூறும் செந்தமிழின் இரசத்தைச் செவியென்னும் வாயாற் பருகி இன்புறுமாறு சந்தப்பாக்களால் தம்மையாட்கொண்ட கந்தப் பெரு மானைப் பாடத்தொடங்கினார்.


இன்று எல்லா ஆலயங்களிலும் நித் தியநைமித்திய காமிக பூசைகள் இடம் பெறும்போது பஞ்ச தோத்திரம் ஓதப்படும் சமயம் திருப்புகழும் இடம்பெறுகின்றது. இவ்வாறு ஓதுவார்களினால் பண்ணுடன் திருப்புகழ் இசைக்கப்படும்போது, இசைப் பிரியர்கள் ஏன் மற்றவர்களும் கூடத் திருப் புகழின் ஓசை நயத்தையும், தமிழின் சிறப்பையும் உணர்ந்து அவ்விசையிலே

தம்மை மறந்து இருப்பதை நாம் பார்க்கின்றோம்.

மனம் ஒரு குரங்குக்குச் சமமானது. ஏனெனில் குரங்கு, மரம் தாவித்தாவிப் பாய்வதுபோல, எமது உள்ளமும் நேரத்திற்கு நேரம் அலையுந் தன்மை கொண்டது. எனவே மனத்தினை அடக்கி, இறை சிந்தனையை மனத்திலே இருத்தி இறைவனைத் தியானிக்க இந்தப் பஞ்ச புராணங்கள் பெரிதும் துணை புரிகின்றன என்பதற்கு எமக்கு முன் வாழ்ந்த தற்போது வாழ்ந்து கொண்டிருக்கின்ற ஆன்மீகவாதிகளுடைய போதனைகள் சான்று பகருகின்றன.

சந்நிதியான் ஆலயச்சூழலிலே முருகனடியார்கள் தமக்குற்ற இடர்களையும், இந்நாட்டு மக்கள் எதிர் நோக்குகின்ற துன்பதுயரங்களையுந் துடைக்குமாறு முருகப் பெருமான்மீது அகங்குழைந்து, பக்தி சிரத்தையுடன் பாமாலைகள் இசைத்து வருவதை சந்நிதியான் ஆலயத்திற்குச் சென்றுவரும் பக்தர்கள் அறிவார்கள்!

ஆகவே காமுகனாக இருந்த அருணகிரியார் எவ்வாறு முருகப்பெருமானால் ஆட்கொள்ளப்பட்டு, பக்திச் சுவை ததும்பும் பல நூறாயிரம் திருப்புகழ் என்னும் தமிழ் மணக்கும் சந்தப்பாக்களைப் பாடியருளி எவ்வாறு இறைபதமடைந்தாரோ, நாமும் திரிகரண சுத்தியோடு ''திருப்புகழ்'' என்னும் படகிலேறி இறைபதமடைவோமாக.




*கட்டுடைப் பிரதேச கோபாலன் பாலர் பாடசாலை மாணவர்களுக்கான கல்வி உபகரணங்கள் 07.08.2009 வெள்ளிக்கிழமை கையளிப்பதைப் படத்தில் காணலாம்.*

உ

# சிவசக்தியாக விளங்கும் சிவபெருமான்

நா. நல்லைதம்பி அவர்கள்

**அகர உயிர்போல் அறிவாகி எங்கும்**

**நிகரில் இறை நிற்கும் நிறைந்து (திருவருட்பயன்)**

எழுத்துக்களுக்கெல்லாம் அகர உயிர் இன்றியமையாதது போல, இறைவன், உலகம் இயங்குவதற்கு இன்றியமையாதவனாகி, அறிவாகி எங்கும் நிறைந்து நிற்கின்றான் என்று உமாபதி சிவாசாரியார் கூறியிருப்பது காணலாம். இதே வழியில் தெய்வப் புலவரும்,

**அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**

**பகவன் முதற்றே உலகு**

எனக் காட்டுகின்றார்.

திருவாசகத்தேன் தந்த மாணிக்கவாசகர், சிவபெருமான் ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி என்று பாடியருளியிருக்கின்றார்.

இவ்வாறு இறைவன்,

**விறகில் தீயினன் பாலிற் படுநெய்போல்**

**மறைய நின்றுளான் மாமணிச் சோதியான்**

ஆக இருக்கிறான். ஆயினும், ஞானமார்க்கத்தில் செல்லுகின்றவர்களுக்கும் விளங்காத பரதத்துவம், பக்திமார்க்கத்திற் செல்லுகின்றவர்களுக்கு விளங்குகின்றது. பரமன் பக்திவலையிற் படுவோனாக இருக்கின்றான், அடியார்களது பக்திவலையிற் சிக்குண்டு போகிறான். அடியார்கள்,

**உறவுகோல் நட்டு உணர்வுக் கயிற்றினால்**

**முறுக வாங்கிக் கடைய முன்நிற்கின்றான் சிவன்**

சிவன், சத்தியின் பிறப்பிடமாக விளங்குகின்றான். சத்தியைச் சார்ந்து ஆன்மாக்கள் சிவத்தை அடைய வேண்டும் என்னும் பெருங்கருணையினாலேயே அவ்வாறு சத்தி பின்னமில்லாமல் நிற்கின்றான், தந்தையிடம் ஒன்றைப் பெறுவதற்கு மகவு தாயைச் சார்ந்து நிற்றல் போலசிவன், ஆன்மாக்கள் அருளைப் பெறுவதற்கு வாய்ப்பாக அம்மை அப்பனாக இருக்கின்றான்.

**தன்னிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும் சத்தி**

**பின்னமிலான் எங்கள் பிரான் (திருவருட்பயன்)**

உயிர்கள் சார்ந்ததன் வண்ணமாக உள்ளனர். உலக மாயையிற் சிக்குண்டு தனுகரண புவன போகங்களை அனுபவித்துக்கொண்டு அவற்றைச் சார்ந்து நிற்கும் உயிர்கள், தாம் ஆறறிவுபெற்ற மனிதப் பிறவி எடுத்ததன் பயனைப் பெறாதவர்களாகவே இருப்பர். ஆனால் எங்கள் பிரானாகிய சிவபெருமான், தன்னைச் சார்ந்து நின்று உயிர்கள் பிறவிப் பெருங்கடலை நீந்திக் கடக்க வேண்டுமென்னும் கருணையினால் சத்தியோடு பின்னமில்லாமல் சிவசத்தியாக விளங்குகின்றான் என்கிறார் உமாபதி சிவாசாரியார். (நமது மனது சிவனைச் சார்ந்துநிற்கவேண்டும் என்ற தத்துவத்தை விளக்குவதற்காகவே சிவபெருமானுடைய ஒரு கையில் மான் ஒன்று சிவனைப் பார்த்தவண்ணம் இருப்பதாக உருவம் அமைக்கப்பெற்றுள்ளதைக் காணலாம்.)

சிவன் தன்னைச் சார்ந்து பக்திசெய்பவர்களுக்கு திருவருளைக் கொடுக்கிறான்.

ஆடம்பர வாழ்வு அமைதிக்குப் பகையாகும்.

வணங்காதவர்களுக்குக் கொடுக்காது இருப்பான். ஆயினும் வணங்குபவர் வணங்காதவர் என்று விருப்போ வெறுப்போ கொள்ளமாட்டான், யாவருக்கும் சுகங்கொடுப்பான். அதனாலேயே சிவனுக்குச் சங்கரன் என்ற பெயர் வழங்குகின்றது.

**நலமிலன் நண்ணார்க்கு, நண்ணினர்க்கு நலன்**
**சலமிலன் பேர் சங்கரன்.**

(திருவருட்பயன்) என்கிறார் உமாபதிசிவாசாரியார்.
(சங்கரன் - சுகஞ்செய்பவன்)

மேலும் ஆன்மாக்களுக்கு அவரவர் பக்குவநிலைக் கேற்ப இறைவன் அருள்வழங்குகின்றான். அதற்காக, அருவம், உருவம், அருவுருவம் ஆகிய மூன்று நிலைகளில் நிற்கின்றான்.

சிவ தத்துவத்தில் சிவன் + சத்தியாக நிற்கும் நிலை அருவ நிலை என்றும், மகேசுரம் உருவநிலை என்றும், சதாசிவம் அருவுருவநிலை என்றும் பேசப்பெறுகின்றது.

தேவர்களாலும் காணமுடியாத சிவன், தன்னைச் சார்ந்து பக்தி செய்யும் அடியவர்களை என்றும் அகலாது அவர்களது அறிவில் நின்று அருள்புரிகின்றான்.

**ஆனா அறிவாய் அகலான் அடியவர்க்கு**
**வானாடர் காணாத மன்** **(திருவருட்பயன்)**

குருவடிவாக வந்து இறைவனால் ஆட்கொள்ளப் பெற்ற மாணிக்கவாசகர்,

**அன்றே என்றன் ஆவியும் உடலும்உடைமை**
**எல்லாமும் குன்றே அனையாய்!**
**என்னை ஆட்கொண்டபோதே கொண்டிலையோ**
**இன்றோர் இடையூறு எனக் குண்டோ? எண் தோள் முக்கண் எம்மானே!**
**நன்றே செய்வாய் பிழைசெய்வாய் நானோ இதற்கு நாயகமே.**

எனத் தன்னை ஆண்டுகொண்ட சிவன் தனக்கு உறுதுணையாக விளங்குவதனைப் பாடுகின்றார்.

ஆகவே, பிறவிப் பிணிக்கு மருந்தாக விளங்கும் சிவபெருமானை உணர்வு பூர்வமாகப் பக்திசெய்து உய்தி பெறுவோமாக. இந்தத் தத்துவம் வேதங்களால் உறுதிசெய்யப் பெற்றது, உறுதியானது, ஐயமில்லாதது.

**உன்னும் உளது ஐயமிலது ஒவாது**
**மன்னுபவம் தீர்க்கும் மருந்து** **(திருவருட்பயன்)**

ஐயமில்லாது மெய்யுணர்ந்தார்க்கு நிலவுலகத்திலும் பார்க்க, நாம் செல்ல வேண்டிய வீட்டுலகம் மிக அண்மையில் உள்ளதாகத் தெய்வப்புலவர் வாய்மொழி இருப்பதுவும் உணரத்தக்கது.

**ஐயத்தின் நீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்**
**வானம் நணியது உடைத்து.** **(திருக்குறள்)**

எனவே,

**பற்றுக பற்றற்றான் பற்றினை. அப்பற்றைப்**
**பற்றுக பற்றுவிடற்கு** **(திருக்குறள்)**

எல்லாப் பொருளையும் பற்றிநின்றும் பற்றில்லாத இறைவனைச் சேரும் வீட்டுநெறியை நன்னெறியாக மனதிற்கொள்வோமாக. அப்பொழுது நம்மைப் பற்றி நிற்கும் உலகப் பற்று நீங்கும், வீடுபேறு வந்துசேரும்.

துயரம் மனிதனைக் கிழவனாக்கி விடுகிறது

உ

# சந்நிதியான் ஆச்சிரமத்தால் மேற்கொள்ளப்பட்ட சமூகப்பணிகள்

05.06.2009 / 07.08.2009

- பார்வைக் குறைபாடு உடைய சரசாலை வடக்கு மீசாலையைச் சேர்ந்த திருமதி புஸ்பனேஸ்வரி என்பவருக்கு 05.06.2009 அன்று நடைபெற்ற வாராந்த வெள்ளி நிகழ்வில் மூக்குக் கண்ணாடி வழங்கப்பட்டது.
- எழுந்து தன்னிச்சையாக நடமாட முடியாத இடைக் காடு அச்சுவேலியைச் சேர்ந்த திருமதி ஜெயராமக் குருக்கள் யோகமலர் என்பவருக்கு 05.06.2009 அன்று நான்கு சில்லு தள்ளுச் சக்கரவண்டி வழங்கப்பட்டது.
- வறிய குடும்பத்தைச் சேர்ந்த பாடசாலை மாணவி ஒருவருக்கு 24.07.2009 அன்று துவிச்சக்கர வண்டி கையளிக்கப்பட்டது.
- பார்வைக் கோளாறுடைய சங்கானையைச் சேர்ந்த திருமதி கார்த்திகேசு கனகமணி என்பவருக்கு 31.07.2009 அன்று மூக்குக்கண்ணாடி கையளிக்கப்பட்டது.
- குடத்தனையைச் சேர்ந்த சுடரொளி முன்பள்ளி மாண வர்களுக்கான சத்துணவு 05.08.2009 அன்று தொடக்கம் மாதா மாதம் வழங்குவதற்குரிய செயற் பாடு மேற்கொள்ளப்பட்டன.
- கட்டுடை மானிப்பாயில் அமைந்துள்ள கோபாலன் பாலர் பாடசாலையைச் சேர்ந்த 25 மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளை மேம்படுத்தும் வகையில் கற்றல் உபகரணங்களாக கொப்பி, பென்சில், புத்தகப்பை, தண்ணீர் போத்தல் என்பன 07.08.2009 அன்று வழங்கப்பட்டது.

உ

# முத்திக்கு வித்தாகும் பக்திநெறி

திரு மூ. சிவலிங்கம் அவர்கள்

எல்லாம் வல்ல அகிலலோக நாயகன் சிவப்பரம்பொருள் கருணையால் பக்தர்களைத் தடுத்தாட்கொண்டு அவர்களுக்கு முத்தியும் சகல சித்திகளும் தந்து அரவணைக்கிறார். அதேசமயம் தூய பக்தியற்ற நிலையில் தற்பெருமையும் இறுமாப்பும் கொண்டவர்களுக்கு அருள் புரிவதில் பல சோதனைகளை ஏற்படுத்தினார்.

இறைவனாகவே பூஜிக்கப்படும் பிரம்மா, மகாவிஷ்ணு ஆகியோர் யார் பெரியவர் என்ற இறுமாப்பினால் அடிமுடிதேடிச்சென்று அலைந்தும் தோல்வி அடைந்தனர். எத்தனையோ காலமாக இறைவனை வேண்டிக் கடுந்தவமிருந்தும் தேடிக்கிடைக்காது பற்பல தவமுனிவர்கள் செயலிழந்தனர்.

வேடுவர் குலத்தில் பிறந்து கல்வியறிவோ, சற்குருவின் உபதேசமோ, வழிகாட்டலோ ஏதுமற்ற திண்ணன் தற்செயலாக இறைவனின் சிவலிங்கத் திருமேனியைக் கண்டதும் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி லிங்கத்திருமேனியைப் பக்தி மேலீட்டினால் ஆரத்தழுவி இன்புற்றவர். இறையருளினால் ஆறு நாட்களில் இறைவனால் தடுத்தாட்கொள்ளப் பட்டார். இதனைச் சற்று நோக்குவோம்.

தென்கைலாயம் எனப்படும் காளத்தியப்பர் குடிகொண்டுள்ள திருக்காளத்தி மலையின் சிறு தொலைவில் அமைந்துள்ளது பொத்தப்பி நாடாகும். இங்குள்ள மலைவளமும், சூழ்ந்த காடுகளும் அமைந்த புண்ணிய கிராமமான உடுப்பூரில் வேடுவகுலத்தினர் வாழ்ந்தனர். இவர்களின் தலைவனான நாகனும் அவர்தம் துணைவியும் செய்த நற்பயனாக அவதரித்தவர் திண்ணன். பெற்றோர் தமது குல மரபுப்படி மகனின் பதினாறு வயதில் வில் ஏந்தும் விழாவைச் சிறப்புடன் நடாத்தினர். தொடர்ந்து தமது தொழிலுக்கேற்ற சகல பயிற்சிகளையும் சிறந்த வீரர்கள் மூலம் பயிற்றுவித்தனர். தமது பிரிவிலுள்ள எல்லா வேடுவர்களையும் ஒன்று கூட்டித் தமது முதுமை காரணமாகத் திண்ணனை வேடுவர் தலைவனாக்கி அறிமுகஞ்செய்து வைத்தார்.

தந்தையின் உத்தரவின்பேரில் திண்ணன் ஒரு சுபதினத்தில் தமது இரு மெய்க்காவலருடன் உதவியாட்கள் புடைசூழ கன்னி (ஆரம்ப) வேட்டைக்குப் புறப்பட்டார். வழியில் தென்படும் மிருகங்களை எல்லாம் கொன்று குவித்துக் கொண்டே சென்றனர். இதேசமயம் ஒரு பெரிய பன்றி இவர்களின் எதிரில் தென்பட்டது. அதனைக் கொல்வதன் பேரில் திண்ணன் ஆயுதங்களுடன் வெகுதூரம் துரத்திச்சென்றார். திண்ணனுடன் காவலர் இருவரும் தொடர்ந்தனர். ஏனையோர் வழி மாறிச் சென்றுவிட்டனர். பன்றியும் இவர்களுக்கு அகப்படாது வெகுதூரஞ் சென்று காளத்தி மலையின் சூழலில் ஒரு மரத்தடியில் சோர்வடைந்து நின்றது. துரத்திச் சென்ற திண்ணன் அதனைக் கொன்றார்.

யாவரும் துரத்திச்சென்ற களைப்பினால் பசியும் தாகமும் மேலிட மிக வருந்தினர். பசிக்காகத் தாம் கொன்ற பன்றியைத் தீயில் வாட்டி உண்ணவும், தாகத்துக்கான நீரைத் தேடவும் முற்பட்டனர். அவர்கள் செல்லும் பாதையில் திருக்காளத்திநாதரின் சிவலிங்கத் திருமேனியைக் கண்ணுற்றனர். திண்ணனுடன் வந்தவர்கள் நாங்கள் வணங்கும் "குடுமித்தேவர்"

என்னும் தெய்வம் இவரே எனத் தெரிவித்தனர். சிவலிங்கத் திருமேனி காந்தம் இழுத்தது போலத் திண்ணனைக் கவர்ந்தது. இதனைக் கண்டதும் தன்னை மறந்தார். மனம் பதைபதைக்க, கண்ணீர் மல்க, நாவது உலர, உள்ளம் உருகிப் பக்தி மேலீட்டினால் ஓடிச்சென்று சிவலிங்கத் திருமேனியைக் கட்டித் தழுவினார். அத்திருமேனியை உச்சி மோந்து "இன்று இவர் என்னிடம் அகப் பட்டார்" என்று மகிழ்ந்து இன்புற்றார். பக்தியால் உருகி மயங்கி விழுந்தார்; எழுந்தார். இறைவனுக்குப் பூசகரால் சார்த்தப்பட்டிருந்த பூக்களை அவதானித் தார். "இப்படிப் பூசை செய்வதை ஏற் பாரோ! நானும் பூசை செய்வேன்" என்று தீர்மானித்தார். இவருக்குப் பசிக்குமே என எண்ணியவர் இறைவனை விட்டுப் பிரிய மனமில்லாமல் வேட்டைக்குப்புறப்பட்டார். நல்ல பதமான இறைச்சியைத் தீயில் வாட்டித் தன்வாயில் வைத்து ருசிபார்த்து அதனை ஒரு கலயத்தில் எடுத்துக்கொண்டார். பூசைக்கு வேண்டிய பூக்களையும் இலை[illegible]யும் எடுத்துத் தமது தலை முடியில் இட்டுக் கொண்டார். இறைவனுக்கு அபிஷேகஞ் செய்வதற்காக அருகிலுள்ள ஆற்றுநீரை வாயில் மொண்டு கொண்டார். ஒருகையில் தமது வில், அம்பும், மறுகையில் இறைவனுக்குப் பசியாற்றும் சுத்தமாக்கிய இறைச்சியும், தலையில் பூவும் கொண்டுவந்தார். முதலில் வாயிலுள்ள நீரினால் அபிஷேகம் செய்யும் முன் திருமேனியிலுள்ள பூக்களைத் தமது செருப்புக்காலால் அகற்றினார். அபிஷேகம் செய்தார். இறைச்சியைப் படைத்தார். தலையிலிருந்த பூக்களை இறைவனுக்குச் சூட்டினார். தமது பூசையில் நிறைவு கண்டு மகிழ்ந்தார்.

இரவு வந்ததும் இவர் இவ்விடத்தில் தனியே இருப்பதால் கொடிய மிருகங்கள் இவரைத் தாக்காது கையில் வில் அம்பு ஏந்தியவாறு உறங்காது காவல் புரிந்தார். விடிந்ததும் இவருக்குப் பசியாற்ற வேட்டையாடப் புறப்பட்டார். சிறிது நேரத்தின் பின் வழமை போல அர்ச்சகர் பூசை செய்வதன் பேரில் வந்தார். இறைவன் முன் இருந்த புலால் உணவைக் கண்டு மனம் வெதும்பினார். இறைவனிடம் தமது நிலையை விண்ணப்பித்தார். தொடர்ந்து ஐந்து நாட்கள் இவ்வாறு அர்ச்சகரின் ஆசார பூசையும், திண்ணனின் அசைவபூசையும் தொடர்ந்தது. பூசகரின் விண்ணப்பத்தின் பேரில் இறைவன் அவரின் கனவில் தோன்றித் தனது பக்தனின் பக்தியின் சிறப்பை மறைந்திருந்து பார்க்குமாறு தெரிவித்தார்.

ஆறாம் நாள் தமது ஆசாரபூசை முடிந்ததும் அர்ச்சகர் மறைந்திருந்தார். சிறிது நேரத்தில் திண்ணன் பூசைக்குரிய ஆயத்தத்துடன் வரும் போது அபசகுணங்கள் தென்பட்டன. இறைவனுக்கு ஏதோ ஆபத்து நேர்ந்தது என எண்ணியவாறு ஓடோடி வந்தார். இறைவனது வலது கண்ணிலிருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. திண்ணன் இதைக் கண்டதும் பதைபதைத்தார். தான் இல்லாத நேரத்தில் ஏதோ நடந்ததென உணர்ந்தார். கையிலிருந்த வில், அம்பு தானாகவே நழுவியது. இறைச்சிக்கலயமும், பூ, அபிஷேக நீர் யாவும் சிதறி விழுந்தன. யாராவது அயலில் நிற்கின்றனரா என கையில் வில், அம்பை ஏந்திய வண்ணம் நாற்திசையும் ஓடியோடிப்பார்த்தார். எவரும் தென்படவில்லை. லிங்கத்திருமேனியிலிருந்து இரத்தம் வடிந்துகொண்டிருந்தது. "ஆ! நான் கெட்டேன் குடுமித்தேவருக்கு ஆபத்து வந்துவிட்டதே. இதை எப்படிக் குணமாக்குவேன்'' என்று நிலத்தில் விழுந்து புரண்டு கதறி அழுதார். பின் எழுந்து தமது குலத்தவர் செய்யும் மூலிகை இலைகளை எடுத்து வந்து சாறு எடுத்து கண்ணில் விட்டார். அதுவும் பயன்

படவில்லை. உடனே திடீரென ஒரு எண்ணம் தோன்றியது.

"இரத்தத்துக்கு இரத்தம்" என்று கூறிக்கொண்டு ஒரு கூரிய அம்பை எடுத்துத் தமது வலது கண்ணைத் தோண்டி எடுத்து இரத்தம் வடிந்த கண்ணின் மீது அப்பினார். குருதி வடியவில்லை. பக்தி மேலீட்டினால் பேருவகையுடன் ஆடிப்பாடி மகிழ்ந்தார். இதே சமயம் இறைவனின் இடது கண்ணிலிருந்து குருதி பெருகியது. இதைக் கண்டதும் தமது பக்தியில் ஏதும் தவறு ஏற்பட்டதோ என ஏங்கினார். மிகத் தெளிந்த உணர்வுடன் "இடது கண்ணையும் எடுத்து வைப்பேன்" என்று கூறினார். தமது இரண்டாவது கண்ணையும் எடுத்தால் இறைவனின் பழுதான கண் இருக்குமிடத்தை அடையாளம் காணமுடியாதே என உணர்ந்தார். தமது செருப்பணிந்த காலால் இறைவனின் இடது கண் மீது ஊன்றிய வண்ணம் அம்பெடுத்துத் தமது இடது கண்ணைத் தோண்ட முற்பட்டார்.

இதே சமயம் இறைவனின் லிங்கத்திருமேனியிலிருந்து ஒரு கை வெளியே வந்தது. இறைவன் "நில்லு கண்ணப்ப" என மும்முறை சொல்லிய வண்ணம் அவரின் அம்பெடுத்த கையைப் பிடித்து தடுத்தாட்கொண்டார். இறைவனின் திருவிளையாடலை அறிந்த தேவர்கள் மலர்மாரி பொழிந்தனர். இறைவன் மேலும் கண்ணப்பரைக் கருணையுடன் நோக்கி "ஒப்புயர்வற்ற கண்ணப்ப! உன் அயராத பக்தியை மெச்சினேன். நீ எமது வலப் பக்கத்தில் எப்பொழுதும் நிற்பாயாக" எனத் திருவாய் மலர்ந்தருளினார்.

முன்னொரு காலத்தில் வில் விஜயன் பாசுபதாஸ்திரம் பெறுவதற்காகக் கடுந்தவமிருந்த போது விவாத மேலீட்டினால் இறைவனின் மார்பில் வில்லால் அடித்தான். இறைவன் ஏற்றார். மதுரையில் வைகை நதியைப் பெருகவிட்டுத் தாமே கூலியாளாக வந்து அணைகட்டிய இறைவன் மதுரை அரிமர்த்தன பாண்டியனால் முதுகில் பிரம்படி பட்டார். எறிபத்த நாயனாரினால் கல்லால் எறியப்பட்டார். இறைவன் ஒப்பாரும் மிக்காரும் அற்றவர்; அதிபதியானவர். யாவற்றிலும் சிறந்து விளங்குபவர். அவரின் திருவிளையாடலில் அற்ப பிறவிகளாகிய மானிடரின் அடாத செயல்களையும் ஏற்று யாவருக்கும் கருணை காட்டியவர். இவர்களின் செயல் வேறு. இச்செயல்களையும் அன்போடு ஏற்றவர்.

திண்ணன் கல்வியறிவில்லாத வேடனானாலும் கண்டதும் காதல் கொண்டு தன்னையே பக்தி மேலீட்டினால் இறைவனிடம் அர்ப்பணித்தவர். இறைவன் இவரது பக்தியை ஆறு நாட்களிலும் கண்டவர். ஆசாரமற்ற புலால் அமுதையும் வாயால் கொப்பளித்த நீரை அபிஷேகமாகவும் அன்புடன் ஏற்றவர். செருப்பணிந்த காலால் முடிமீதும், கண்மீதும் தீண்டப்பட்டவர். பக்தனின் பெருமையை உலகறியச் செய்தே பொன்னைப் புடம் போட்டது போல வேட்டுவப் பக்தியை மலரச்செய்தவர். பக்தி மேலீட்டினால் தமது இரு கண்களையும் தாமாகத்தோண்டி இறை அருளை வியக்க வைத்தவர். இவரது பக்திக்கு நிகர் ஏதுமில்லை.

திண்ணன் என்ற பெயருடையோன் தமது கண்ணை இறைவனின் ஊனம் அடைந்த கண்ணில் அப்பியதால் கண்ணப்பனென இறைவனால் அழைக்கப்பட்டவர். இவரது பக்தியை மெச்சிய இறைவன் இவருக்கு முத்திப்பேற்றினை அளித்து என்றும் தமது வலப்பக்கத்தில் நிற்கச் செய்தார்.

முத்திக்கு வித்தான இத்தூய பக்தியின் பெருமையை யாவரும் உள் அன்போடு பூசித்து இறையருளை இறைஞ்சுவோமாக.

கொடுக்கும் போது கனிவு இருத்தல் வேண்டும்

உ

வாரியார் பக்கம்

# மயில்

**- வாரியார் சுவாமிகள் -**



*உமையெனு மயில் பெற்ற மயில் வாகனனே:*

உமா என்ற வடசொல் தமிழில் உமை என்று வந்தது. ஆகார ஈறு தமிழில் இன்மையால் ஐகார ஈறு பெற்றது. உ - ம - அ என்ற மூன்று எழுத்துக்களும் இணைந்து உமா என்று ஆயிற்று. உ என்ற எழுத்து அளித்தலையும், ம என்ற எழுத்து அழித்தலையும், அ என்ற எழுத்து ஆக்கலையும் செய்யும். அம்பிகை பொதுவாக முத்தொழிலுக்கும் உரியவராக இருப்பினும் சிறப்பாக அளித்தலுக்கு உரியவராதலின் உகர எழுத்தை முதலாகக் கொண்டு உமா என்ற மறைகளால் அழைக்கப்படுகின்றனர்.

மயில் உருவம் எடுத்து அம்பிகை அரனாரைப் பூசித்தார். அவ்வாறு வழிபட்ட திருத்தலம் மயிலாப்பூர் என்று இன்று வழங்குகிறது. திருஞானசம் பந்தர் எலும்பைப் பெண்ணுருவாக்கிய அருமைத் திருத்தலம். அதனால், மயில் என்று கூறியருளினார்.

மயில் போன்ற சாயலுடன் கூடிய திருமேனியுடையவர். ஆதலின் அம்பிகையை மயில் என்று கூறினார். மயில் மழைமுகிலைக்கண்டு மகிழ்வதுபோல், அம்பிகை அருள்மழை பொழியும் முக்கண்ணராகிய முகிலைக் கண்டு மகிழ்பவர் ஆதலின் மயில் என்று உருவகம் புரிந்தனர்.

மயில் பச்சை நிறம்; பார்வதிதேவியும் பச்சை நிறம். மயில் மலையில் வாழும். இமயவல்லியாம் உமையம்மையும் மலைவளர் காதலி.

*மயில்வாகனனே:*

அயிலேந்தும் பெருமான் மயிலேந்த வந்து அடியவர்க்கு அருள் புரிவார்.

உலகங்களையெல்லாம் ஒரு நொடிப் பொழுதுக்குள் வலம் வந்த அதிவேகமும் ஆற்றலும் அமைந்தது மயில் வாகனம் ஆதலின், அதிவிரைவில் வந்து அடியார்களது அல்லலை அகற்றுவார் என்பது குறிப்பு.

வேதம், ஆகமம், புராணம், இதிகாசம், மூவர், தேவர், முனிவர், சித்தர், முத்தர் முதலிய எவருக்கும் கிடைக்கப் பெறாத எந்தை கந்தவேள் திருவடித்தாமரை எப்போதும் தீண்டப்பெறும் பெருந்தவமுடையது மயில் என்று அறிக.

மயிலின் பேராற்றலை அருணகிரிநாதர் மயில் விருத்தத்தில் கூறும் அழகை அறிந்து இன்புறுக.

**“ தீரப் பயோததி திக்குமா காயமும்**
**செகதலமு நின்று சுழலத்**
**திகழ்கின்ற முடிமவுலி சிதறிவிழ வெஞ்சிகைத்**
**தீக்கொப் புளிக்க வெருளும்**
**பாரப் பணாமுடி யருந்தன்முத லரவெலாம்**
**பதைபதைத் தேரு டுங்கப்**
**படர்சக்ர வாளகிரி துகள்பட வை யாளிவரு**
**பச்சைப்ர வாள மயிலாம் ”**

# 'ராம' பிரம்மம்

**திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் - அவர்கள்**

**வாரணம் பொருத மார்பும் வரையினை எடுத்த தோளும்**
**நாரத முனிவர்க்கேற்ப நயம்பட உரைத்த நாவும்**
**தாரணி மௌலிபத்தும் சங்கரன் கொடுத்த வாளும்**
**வீரமும் களத்தேபோட்டு வெறுங்கையோடிலங்கை புக்கான்.**

எவ்வளவு வெற்றிகள். எவ்வளவு வரங்கள். எப்பேறபட்ட வீரன். தர்மத்தின் வழி ஒழுகாததனால் கூனிக்குறுகி வெறுங்கையோடு அரண்மனைக்குத் திரும்பினான். யாருடைய அறவுரைகளையும் கேளாது இறுதியில் போர்க்களத்திலே ராமனுடைய பாணங்களுக்கு ஈடுகொடுக்க முடியாமல் தவித்தான். அவன் உடலில் ராம பாணங்கள் தொளை (ஓட்டை) போட்டன. ராவணன் துடித்தான். திருப்புகழ் வரிகள் இதனை விவரிக்கின்றன.

**தலைமுடி பத்து தெறித்து ராவணன்**
**உடல் தொளைபட்டுத் துடிக்கவே யொரு**
**தனுவை வளைத்துத் தொடுத்த வாளியன்**

அப்போதும் ராவணன் திருந்தவில்லை. ராமரை வணங்கி மன்னிப்புக் கேட்க வில்லை. தனது தவறை உணரவில்லை. அவன் தோள்களையும், பத்துத் தலை களையும் அறுத்துத் தள்ளினார் ராமர்.

**வணங்கச் சித்தமிலாத இராவணன்**
**சிரம் பத்துக்கெட வாளி கடாவியெ**
**மலங்கப் பொக்கரை யீட்டி மாதவன் (இணங்கித்தட்பொடு) திருப்புகழ்.**

ராவணன் வாழ்வு முடிந்தது. ராம ராவண யுத்தம் முடிந்து விபீஷணன் அரச னானான். வெற்றித் திருமகளைப் பெற்ற ராமர் சீதையைச் சிறைமீட்டார். சீதா தேவி புனிதமானவள் என்பதை உலகுக்கு உணர்த்த தீக்குளிக்க ஏற்பாடாயிற்று. சீதை சொன்னபடி லட்சுமணர் தீ மூட்டிவிட்டார். பிராட்டி தரையைப் பார்த்த வண் ணம் கணவனை வலம் செய்துவிட்டு "தெய்வங்காள்! உங்களை வணங்குகின்றேன். மகரிஷி கணங்களே! உங்களை நமஸ்கரிக்கிறேன். அக்கினியே! என் பரிசுத்தத்தை நீ அறிவாய். இதோ உனக்குள் பிரவேசிக்கின்றேன்" என்று கொழுந்து விட்டு எரியும் தீயில் குதித்து விழுந்தாள். தேவர்கள் அனைவரும் வந்து கூடிவிட்டனர்.

பிரமதேவர், நாராயணா! ராவணனைச் சங்கரிக்க அவதரித்த சர்வேஸ்வரனே! இவள் உம்முடைய பிராட்டி லட்சுமியன்றோ! என்றான். எல்லோரும் துதித்து நிற்க ஓர் அற்புதம் நிகழ்ந்தது. அக்கினிதேவன் எரியும் நெருப்பிலிருந்து கிளம்பிச் சீதாதேவியை அப்படியே வஸ்திர பூஷணதாரியாக எடுத்து இராமனிடம் தந்தான். ராமன் தேவியை அழைத்து, "சீதையே உன் பழியற்ற புனிதம் எனக்குத் தெரியாதா? நான் செய்த பரீட்சை மக்களுக்காகவே. அவர்களின் திருப்திக்காகவே, ராமன் காமத்தால் மதியிழந்தான். உலகவழக்கத்துக்கு மாறாக நடந்து கொண்டான்" என எண்ணுவார்களே அதற்காகவே இப்படிச் செய்தேன் என இருகரங்களையும் நீட்டி அழைத்துக் கொண்டான். அப்போது தசரதனும் வந்திறங்கி சக்கரவர்த்தித்

திருமகனை தன் மடியில் வைத்து ஆசீர்வதித்தான். சீதையை நோக்கி, "குழந்தாய், என் மகனை மன்னிப்பாய்! உலக தர்மத்தைக் காப்பதற்காக அவன் செய்த குற்றத்தைப் பொறுத்துக் கொள்வாய். உனக்கு மங்களம்" என்றான்.

'தன் உயிருக்கு நிகரான, திருமகளின் அவதாரமான சீதா தேவியை வெற்றியுடன் மீட்டுக் கொண்டார் ராமபிரான்' என திருப்புகழ் சொல்கிறது.

**ஆவியேயான ஜானகியை**

**ஆவலுடன் அழைத்தேகொள் மாயோன். (தலைவலி) திருப்புகழ்.**

சீதையைச் சிறைமீட்ட ராமர் அயோத்தி திரும்புகிறார். இராமேஸ்வரம் சிவஸ்தலம் இராமாயண வரலாற்றோடு தொடர்புடையது. ஸ்ரீ ராமனின் திருவடிகள் பதிந்த தலம். ராமச்சந்திரமூர்த்தி சிவபூசை செய்த தலம். சீதையை சிறைமீட்டு இராமேஸ்வரம் வந்து இராவணனை வதம் செய்ததால் ஏற்பட்ட பிரம்மகத்திதோஷம் போக்க என்னசெய்ய வேண்டும் என அங்கிருந்த அகத்தியர் முதலிய முனிவர்களைக் கேட்டார். அதற்கு அங்கிருந்த முனிவர்கள், "மகாப்பிரபோ தர்மத்தை நிலைநாட்டத் திரு அவதாரம் செய்த தாங்கள், இத்திருத்தலத்தில் ஒரு சிவலிங்கப் பிரதிஷ்டை செய்து வழிபடுங்கள். நீங்கள் செய்த கொலைப் பாவம் நீங்கிவிடும் என்றனர். உடனே ரகுகுலதிலகன் ஆஞ்சநேயரை நோக்கி காசி சென்று ஒரு சிவலிங்கத்தைக் கொண்டு வரும்படி கூற, காசி சென்ற அநுமான் காசியில் சிவலிங்கம் கிடைக்காததால் கைலாயம் சென்றார். அங்கே கடுந்தவமிருந்து, சிவபெருமானிடமிருந்து இரண்டு சிவலிங்கத் திருவுருவைப் பெற்று தென்திசை திரும்பினார். இரண்டு சிவலிங்கங்களின் ஒன்று இராமபிரான் பிரதிஷ்டை செய்வதற்கும், மற்றது தனது சிவவழிபாட்டிற்குமாகக் கொண்டு வந்தார். இதற்கிடையில் சீதாதேவி விளையாட்டாக மணலில் சிவலிங்கம் செய்தார். ஆஞ்சநேயர் குறித்த நேரத்திற்கு வராமையினால், பிரதிஷ்டை செய்வதற்கு குறித்த சுபநேரத்தில், சீதை விளையாட்டாகச் செய்த சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்யுமாறு முனிவர்கள் கூறினார்கள். எனவே முகூர்த்த நேரத்தில் ஸ்ரீ ராமர் தனது திருக் கரங்களினால் சிவலிங்கப் பிரதிஷ்டை செய்தார். பிரதிஷ்டை நிறைவேறியதும் சீதாராமன் சிவபூசை செய்யலானார்.

காலதாமதமாக வந்த ஆஞ்சநேயர் சிவலிங்கப் பிரதிஷ்டை நிறைவடைந்ததைக் கண்டு, மனமுடைந்து துக்கம் மேலிட ராகவனை நோக்கி, "என்னை அவமதித்துவிட்டீர்கள். என்னைநீங்கள் நம்பவில்லை. நான் உயிரை விடுவதன்றி வேறில்லை, என்று குழந்தை போல் மண் மீது விழுந்து புரண்டு புலம்பினான். இராமபிரான் அவரின் கோபத்தைத் தணிக்க, மாவீரனே! சாந்தமடைக நீ கூறுவதெல்லாம் முழுவதும் உண்மை. குறிப்பிட்ட நேரத்திற்கு நீ வராததால், இவை நடந்துவிட்டன. நீயும் நானும் வேறல்லவே. கயிலைநாதன் தந்த சிவலிங்கத்திருவுருவை நான் பிரதிஷ்டை செய்த சிவலிங்கத்திற்கு வடபால், நீயே உன்கையால் பிரதிஷ்டை செய்துவிடு அது உன் பெயரால் அனுமந்தலிங்கம் என்று வழங்கும் என்றார். அவர் சொல்லியும் சாந்தம் அடையாத அநுமானைப் பார்த்து, பிரமாவும், விஷ்ணுவும் பலவருடங்களாகத் தேடியும் அடிமுடி காணாத ஜோதிலிங்கமே இந்த மணல்லிங்கம். இச் சிவலிங்கம் ஏழு உலகங்களையும் கடந்து சென்று இப்போது ஊன்றி நிற்கிறது. இப்பிரதிஷ்டை உனக்குச் சம்மதமில்லையென்றால், இதை நீ பெயர்த்துவிட்டு, நீ கொண்டுவந்த லிங்கத்தையே பிரதிஷ்டை செய்வாய் என்றார் ஸ்ரீ ராமச்சந்திர மூர்த்தி. உடனே ஆஞ்சநேயர் எழுந்து ஸ்ரீ ராமனை சாஷ்டாங்கமாக வீழ்ந்து

வணங்கித் தனது பலத்தைக் காட்ட எண்ணி மிக அலட்சியமாக இடது கரத்தால் இராமலிங்கத்தைப் பெயர்க்க முயன்றார். ஆனால் அந்தச் சிவமுகூர்த்தம் அகலா மூர்த்தியானார். பின்பும் தன் முழுப்பலத்தையும் பிரயோகித்தும், அசையாத அந்தச் சிவபரம் பொருளைக் கண்டு தனது இருகைகளையும் பூமியில் ஊன்றிக் கொண்டு தன்பலம் பொருந்திய வாலால் சிவலிங்கத் திருவுருவைச் சுற்றி ஆகாயத்தில் கிளப்ப முழுப்பலத்துடனும் எழுந்தார். அப்போதும் அந்தச் சிவமுகூர்த்தம் இம்மியும் அசையாத மூர்த்தியானார். அநுமன் இழுத்த வேகத்தில் வால் நழுவவே சிறு தொலைவில் போய்வீழ்ந்தார்.

விழுந்த அதிர்வினால் இரத்தம் கக்கி, மூர்ச்சை அடைந்தார். இப்பொழுதும் ராமலிங்கத்தில், அநுமன் வாலால் சுற்றி இழுத்த தழும்பு காணப்படுகிறது. மூர்ச்சை அடைந்த அநுமனின் கண், மூக்கு, செவிகளில் இரத்தம் பெருகியது. பூமியும், மலைகளும் கிடுகிடுத்தன. எங்கும் இடிமுழக்கச் சத்தம் கேட்டது. உடனே கிருபாகரனான ராமன் தனது பக்தனை, தன்மடிமீது இருத்தி தன் இருகைகளாலும் தடவினார். தனக்கு அநுமன் இதுவரை ஆற்றிய அரும்பெரும் உதவிகளை நினைந்து கண்ணீர் சிந்தினார். இதன்பின்பு மகிழ்ச்சியடைந்த மாருதி, தான் கொண்டுவந்த மகாலிங்கத்தை, ராமலிங்கத்திற்கு அருகில் வடபுறம் பிரதிஷ்டை செய்தார். அந்த ஈசனை விஸ்வநாதர் என்பர். "சுந்தர இராமா! யாம்மிக்க மகிழ்வுற்றோம். தனுஷ் கோடியின் புனித நீரில் நீராடிவிட்டு, இப்போது ஸ்தாபனஞ் செய்த மூலவரான ஜோதிர்லிங்கத்தை வணங்கு" ஓம் நமசிவாய! என்று ஒரு முறை கூறிவிட்டு, இராமேஸ்வரத்தில் வழிபடுவோனுங் கூட சகல பாவங்களிலிருந்தும் விடுபடுவான். உங்கள் அனைவருக்கும் மங்களம் உண்டாகுக! என்று பகர்ந்த சிவபெருமான் தனது தேவியுடன் மறைந்து அந்த ஜோதிர்லிங்கத்தில் ஐக்கியமாகிவிட்டார். சீதை பிடித்த மணலால் ஆன இந்த பிருதுவி லிங்கம் (ராமலிங்கம்) கருங்கற்பாறை போல இறுகிவிட்டது. இராமாயண காலத்திலே இக்கோயில் தோற்றம் பெற்றது. இராமேஸ்வரம் பண்டுதொட்டு தீர்த்தமாட புண்ணிய தீர்த்தங்களையும், அலை ஓசையுடன் கூடிய சமுத்திரமும் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே அமைந்த முத்தி அளிக்கும் சிவஸ்தலம். ஸ்ரீ ராமபிரான் பூஜித்த எம்பெருமானை நாமும் மனம், மொழி, மெய்யால் வழிபட்டு நற்கதிபெறுவோமாக.

(தொடரும்)

# புரட்டாதி மாத குரு பூசை தினங்கள்

*15.09.2009 ஆவணி 30 செவ்வாய்*

**நீலகண்ட சிவாச்சாரியர் குருபூசை**

**செருத்துணையர் குருபூசை**

*16.09.2009 ஆவணி 31 புதன்*

**புகழ்த்துணையர் குருபூசை**

**அதிபத்தர் குருபூசை**

*21.09.2009 புரட்டாதி 05 திங்கள்*

**சங்கர பண்டிதர் குருபூசை**

*28.09.2009 புரட்டாதி 12 திங்கள்*

**ஏனாதிநாதர் குருபூசை**

தானம் என்பது பிரதி பலன் கருதாத கொடை

உ

(தொடர்ச்சி...

# பெருவாயின் முள்ளியாரின் ஆசாரக்கோவை

## 24. எப்படி இருந்து உண்பது?

**முன்துவ்வார் முன்னெழார் மிக்குறார் ஊணின்கண்**
**என்பெறினும் ஆற்ற வலம்இரார் தம்மில்**
**பெரியார்தம் பால்இருந்தக் கால்**

எந்த திசைபார்த்து அமர்ந்து உண்பது? எந்த இடங்களில் உண்ணுவது என்று கூறிய புலவர், பெரியோர்களுடன் பந்தியில் அமர்ந்து உண்ண நேரும்போது, எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்பதை விளக்குகிறார் இந்தப்பாடலில். தம்மில் வயதில் மூத்த, பெரியோருடன் அமர்ந்து உண்ணும் போது; அவர்கள் உண்ணத் தொடங்கும் முன்பு உண்ணக் கூடாது. அவர்கள் உண்டு முடித்து எழுவதற்கு முன் பந்தியிலிருந்து எழக் கூடாது. அவர்களுக்கு மிக நெருக்கமாக - இடித்துக் கொண்டு உட்காரக் கூடாது. உணவு வகைகளில், எவ்வளவு தான் அதிகம் படைக்கப் பட்டிருந்தாலும்; பெரியவர்கள் வலப்பக்கம் அமர்ந்து உண்ண நினைக்கக் கூடாது.

துவ்வார்-உண்ணார்; மிக்குறல்-நெருங்கியிரல்; ஊண்-உணவு.

## 25. எதை எதை உண்பது?

**கைப்பன எல்லாம் கடைதலை தித்திப்ப**
**மெச்சும் வகையால் ஒழிந்த இடையாகத்**
**துய்க்க முறைவகையால் ஊண்.**

உண்ணத் தொடங்கும் முன்பாக கசப்புச் சுவையுள்ளவற்றை கடைசியாகவும்; இனிப்புச் சுவையுடைய பண்டங்களை விருப்புடன் முதலிலும், மற்றவகை உணவுப் பண்டங்களை இடையிலும்; அதாவது - தித்திப்புச் சாப்பிட்டபின்பும்; கசப்பு உண்ணும் முன்னும்; உட்கொள்ளுவதே சரியான உண்ணும் முறையாகும்.

கைப்பு-கசப்பு; கடைதலை-கடைசி.

## 26. எதில் உண்ணுவது.

**முதியவரைப் பக்கத்து வையார் விதி முறையால்**
**உண்பவற்றுள் எல்லாம் சிறிய கடைப்பிடித்து**
**அன்பில் திரியாமை ஆசாரம் நீங்காமை**
**பண்பினால் நீக்கல் கலம்.**

பெரியோர்களை அருகில் வைத்துக் கொண்டு தான் மட்டும் உண்ண மாட்டார்கள். உணவு உண்ண ஏற்ற முறையான பாத்திரங்களில் சிறந்த சிறிய கலங்களில், அன்பு குறையாமல்; தூய்மை குறையாத கலங்களில் உண்க; பழைய கலங்களைக் கழித்திடுக.

திரிதல்-குறைதல்; கலம்-உண்ணும் பாத்திரம்.

### 27. உண்டு முடித்தபின்பு..........!

**இழியாமை நன்குமிழ்ந்து எச்சில் அறவாய்**
**அடியோடு நன்கு துடைத்து வடிவுடைத்தா**
**முக்கால் குடித்துத் துடைத்து முகத்துறுப்பு**
**ஒத்த வகையால் விரலுறுத்தி வாய்பூசல்**
**மிக்கவர் கண்ட நெறி.**

வாய்க்குள் போகாமல் நன்கு வாய் கொப்பளித்து, வாய் எச்சில் அடியோடு நீங்க வாயை நன்றாகத் துடைத்து, சிந்தாமல் நீரை உள்ளங்கையில் ஊற்றி மூன்று முறை நீர் குடித்து, வாய்துடைத்து, முகத்தில் உள்ள உறுப்புக்களான கண், காது, மூக்கு ஆகியவற்றை விரல்களை விட்டு, அழுக்குப் போக நன்றாக குடைந்து தூய்மைப் படுத்துவதே உணவு உண்டு முடித்த பின்பு மேற்கொள்ள வேண்டிய செயல் என்று கண்டறிந்து கூறியுள்ளனர் பெரியோர்.

இழியாமை - உட்செல்லாமை; முக்கால்-மும்முறை.

### 28. பெரியோர்க்கு மரியாதை

**இரு கையால் தண்ணீர் பருகார் ஒரு கையால்**
**கொள்ளார் கொடாஅர் குரவர்க்கு இருகை**
**சொறியார் உடம்பு மடுத்து.**

இரண்டு கைகளாலும் தண்ணீர் அள்ளிக் குடிக்கமாட்டார். பெரியோர்களிடம் ஒன்றைப் பெறும் போது ஒரு கை நீட்டி வாங்கமாட்டார். ஒரு கையால் ஒன்றைப் பெரியவர்களுக்குத் தரவும் மாட்டார். உடம்பில் இரு கை வைத்துச் சொறியவும் மாட்டார்.

மடுத்து-வைத்து.

### 29. விளக்கேற்றி விட்டால் விலக்க வேண்டியவை

**அந்திப் பொழுது கிடவார் நடவாரே**
**உண்ணார் வெகுளார் விளக்கிகழார் முன்அந்தி**
**அல்குண்டு அடங்கல் வழி.**

மாலைப்பொழுது கழிந்து, இரவு தொடங்குவதற்கு முன்னுள்ளதான, அந்தி நேரத்தில், படுத்து உறங்கக் கூடாது. தொலை தூரம் நடக்கக் கூடாது. அந்தி நேரத்தில், உண்ணக் கூடாது. பிறர் மீது கோபம் கொண்டு பேசக் கூடாது. அந்தி விளக்கு ஏற்றுதல் தவறக் கூடாது. அந்தி இரவில் வெளிச் செல்லாமல் வீட்டில் இருப்பதே நல்லது.

### 30. வடக்கே தலைவைக்கரதே

**கிடக்குங்கால் கைகூப்பித் தெய்வம் தொழுது**
**வடக்கொடு கோணந் தலைசெய்யார் மீக்கோழ்**
**உடல் கொடுத்துச் சேர்தல் வழி.**

படுத்துறங்கும்போது, இறைவனைக் கை கூப்பித் தொழ வேண்டும். வடக்கு திசையிலோ, இரண்டு திக்குகள் சேரும் மூலைவாக்கிலோ, தலைவைத்துப் படுக்கக் கூடாது. மேல் போர்வையை உடல் முழுவதும் போர்த்திக் கொண்டு தூங்குதலே நல்லதாகும்.

கோணம் - மூலை, மீக்கோழ் - போர்வை

உ

# "மங்கலப் பொருட்களின் வரிசையில் விபூதியின் மகத்துவம்"

**செல்வி செ. ஐடா அவர்கள்**

சிவபெருமானின் பிரசாதமாக அளிக்கப்படுவது 'விபூதி' ஆகும். "நீறில்லா நெற்றி பாழ்" என்கிறது எமது சமயம். விபூதி என்பது சகல விதமான உடல் உள வியாதிகளைத் தீர்க்கும் வல்லமை உள்ளது எனப் பொருள்படும். இது எல்லா இல்லங்களிலும் இருக்க வேண்டிய மங்கலப் பொருள். "மந்திரம் ஆவது நீறு, வேதத்தில் உள்ளது நீறு, பக்தி தருவது நீறு, சத்தியமாவது நீறு, சித்தி தருவது நீறு" என விபூதியை சம்பந்தர் போற்றுகின்றார்.

இந்த உலகமும் எல்லாப் பொருளும், நாமும் ஒரு காலத்தில் அழிந்து சாம்பராவோம் என்னும் தத்துவத்தைத் திருநீறு குறிக்கின்றது. திருநீற்றினை அணிவதனால் எமது உள்ளும், புறமும் தூய்மை பெறுகின்றது. இறை சிந்தனையைத் தூண்டுகின்றது. இதனைத் தரிப்பதனால் எமக்கு ஆன்மீக ஒளி கிடைக்கின்றமையால் 'பசிதம்' எனவும், ஆன்மாக்களை இரட்சிப்பதனால் 'இரட்சை' எனவும், பாசங்களை நீக்குவதனால் 'சாரம்' எனவும் திருநீறு பல பெயர்கள் கொண்டழைக்கப் படுகின்றது.

விஷ்ணு பக்தர்களுக்குரிய சின்னம் நெற்றியில் திரு மண்ணினால் நாமம் போடுதல் ஆகும். இறைவனது திருவடியினைத் தலையில் தாங்குகின்றேன் என்பதையே நாமம் குறிக்கிறது. எல்லாம் முடிவில் மண்ணாகிவிடும் என்ற உலகின் நிலையாமையைத் திருமண் உணர்த்துகிறது.

பசுவின் (சீவாத்மா) சாணத்தை ((மும்மலங்கள்) சுட்டுப் பெறப்படுவது திருநீறு. மும்மலங்கள் ஞானத் தீயினால் நீறாகிறது என்ற தத்துவத்தையும் இது வெளிப்படுத்துகிறது. சாணம் , கோமயம் என்று அழைக்கப்பெறும். இது அசுத்தங்களையும் நோய்க்கிருமிகளையும் அகற்ற வல்லது. சாணத்திலிருந்து தயாரிக்கப்படும் திருநீறு தலையிலுள்ள நீர்த்தோஷம், தலைவலி, உடம்பிலுள்ள கிருமிகள் முதலியவற்றை அகற்றவல்லது. காலை, மாலை நேரங்களிலும், குளித்தவுடனும், பூசை வழிபாடுகளுக்கு முன்னும், சாப்பாட்டிற்கு முன்னும். நெற்றியில் விபூதி தரித்தல் வேண்டும். வடக்கு அல்லது கிழக்கு முகமாக நின்று பூமியில் சிந்தாவண்ணம் விபூதியை எடுத்து அண்ணாந்து 'சிவ சிவ' என்று சொல்லி நெற்றியில் தரித்தல் வேண்டும்.

பிள்ளைகள் வீதிகளில் விளையாடிவிட்டு வீட்டுக்கு வந்ததும் கை, கால் சுத்தம் செய்து விபூதி அணிந்துவிட்டுத் தான் உணவருந்தவோ, வேறு எந்த வேலையையும் செய்யவோ வேண்டும் என்ற ஒழுங்கினை மேற்கொண்டால் தொற்றுகின்ற கிருமிகள் அழிந்து போகும்.

நெற்றியில் விபூதியை பூசுவதனால் ஞாபகசக்தி கூடுகின்றது. மாணவர்களாயினும், பெரியவர்களாயினும் ஏதாவது காரியம் மறந்து விடும் பொழுது அதனை நினைவுக்கு கொண்டு வருவதற்குக் கண்களை ஏறெடுத்துப் பார்ப்பதனையும், கண் புருவங்களை உயர்த்தி நெற்றியினைச் சுழிப்பதையும், பென்சிலையோ பேனாவையோ அல்லது விரலையோ கொண்டு நெற்றியில் மெதுவாகத் தட்டி ஞாபகப்படுத்திக் கொள்வதையும் நாம் அறிவோம். ஒலி அல்லது ஒளிப்பதிவுக் கருவி அல்லது கமரா போன்ற நவீன கருவிகள் மூலம் முன்னால் பேசியவற்றை அல்லது முன்பு பார்த்து இரசித்தவற்றை மீண்டும் கேட்கவும், காட்சியினைப் பார்த்துக் கொள்ளவும் முடிகின்றது. ஆனால் எவ்விதமான செலவுமின்றி கேட்ட மாத்திரத்தில் பின்னால் தேவைப்படும் பொழுது நினைவுக்கு கொண்டு வருவதற்குரிய வாய்ப்பினை நெற்றியின் பின்பாகத்தில் இறைவன் இயற்கையாகவே எமக்கு அமைத்துள்ளார். அதனால் முன்னர் எமக்கு ஏற்பட்டவற்றை நினைவுக்குக்கொண்டு வருவதற்கு வாய்ப்பு ஏற்படுகின்றது. எனவே ஒவ்வொருவரும் ஞாபகசக்தியினை நல்ல முறையில் செயற்படுத்த வேண்டுமாயின் நெற்றியைப் பாதுகாத்தல் முக்கியமானதாகும்.

நெற்றியில் விபூதி பூசிய முனிவர்களும் பெரியவர்களும் ஞாபக சக்தியால் நல்லசிந்தனையாளர்களாக இருந்தனர். இல்லத்தை வெள்ளைநிறம் அடித்து சுத்தமாக வைத்திருப்பது போன்று அறிவு குடியிருக்கும் நமது நெற்றியையும் வெண்ணீறு அணிந்து புனிதமாக வைத்திருத்தல் வேண்டும்.

உலகில் உள்ள எல்லாப் பொருள்களுமே தீயினால் அழிவு ஏற்பட்டதும் சாம்பராக மாறும். அதே போன்று நமது உடம்பு என்றாவது ஒரு நாள் அழிந்து ஒரு பிடி சாம்பராகிவிடும் அல்லது மண்ணோடு மண்ணாகக் கலந்துவிடும். விபூதி எமக்கெல்லாம் உணர்த்தும் தத்துவமானது ஒன்றுமே நிலைத்து இருக்காது என்பதாகும். நாமும் ஒன்றுமே நிலையில்லாதவை என்பதனை உணர்ந்து ஞானம் பெற்று நல்ல செயல்களையே கடைக்கொள்ளல் வேண்டும்.

எமது சமயச் சின்னமாகப் போற்றப்பெறும் திருநீற்றினைப் பரிசுத்தமாகப் பூசி அதன் மகிமையினைப் போற்றுவோமாக.

**திருச்சிற்றம்பலம்**

**"வேதத்திலுள்ளது நீறு வெந்துயர் தீர்ப்பது நீறு**
**போதந் தருவது நீறு புன்மை தவிர்ப்பது நீறு**
**ஓதத் தருவது நீறு வுண்மையிலுள்ளது நீறு**
**சீதப் புனல்வயல் சூழ்ந்த திருவால வாயன் திருநீறு"**

**திருச்சிற்றம்பலம்**

*- திருஞானசம்பந்தர்*

உ

# 2009 ஆம் ஆண்டு நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம்

| | | |
|---|---|---|
| விஸ்வலிங்கம் ஜெகதீஸ்வரன் | கனடா | 10,000.00 |
| கந்தசாமி நிரோஷன் | பண்டத்தரிப்பு | 2,000.00 |
| வ. தம்பையா | புலோலி மத்தி, பருத்தித்துறை | 2,000.00 |
| பிரவீனா ஈசன் | சங்கானை | 1,000.00 |
| த. இராசதுரை குடும்பம் | அச்சுவேலி வடக்கு | 1,000.00 |
| இ. குலசிங்கம் இளை. அதிபர், | கோண்டாவில் கிழக்கு | 2,000.00 |
| மா. நாகலிங்கம் லக்ஷிமி வெதுப்பகம் | அச்சுவேலி | 1 மூடை மா, 1,000.00 |
| சனஞ்சிகன் கிருஷ்ணப்பிரியா | பொற்பதி வீதி, கோண்டாவில் | 1,000.00 |
| B. பாலசாந்தன் | ஜேர்மனி | 16,800.00 |
| திரு. குமாரசாமி ஆசிரியர் குடும்பம் | பத்தமேனி அச்சுவேலி | 1,000.00 |
| P. சந்திரசேகரம் | சுண்ணாகம் | 1,000.00 |
| நா. நவராஜ் | கொழும்புத்துறை | 1,000.00 |
| கிருஸ்ணபிள்ளை வள்ளியம்மை | கரணவாய் தெற்கு | 1,000.00 |
| ந. இந்திரகுமார் | பருத்தித்துறை | 1,000.00 |
| திருமதி திருத்தேவி ஏகாந்தன் | வல்வெட்டித்துறை | 1,000.00 |
| செ. சூரியகுமார் | இன்பர்சிட்டி பருத்தித்துறை | 1,000.00 |
| திரு. கந்தசாமி குடும்பம் | இருபாலை வீதி, கோண்டாவில் | 2,000.00 |
| V. ரவிக்குமார் | கந்தர் மடம், யாழ்ப்பாணம் | 5,000.00 |
| சபா ரேடர்ஸ் | அச்சுவேலி | 1 மூடை அரிசி |
| நிலானி சிவகுமார் | இணுவில் (உடுபுடவை வகையில்) | 7,000.00 |
| கோ. பத்மநாதபிள்ளை | கொழும்பு | 5,000.00 |
| மீனாவதி சர்வானந்தசிவம் | வல்வெட்டித்துறை | 5,000.00 |
| சி. கிருபானந்தம் | (கனடா) பருத்தித்துறை | 20,450.00 |
| திருமதி கௌரி சுரேஷன் | ஆவரங்கால் | 2,000.00 |
| மோகன் குடும்பம் | சிவன் வீதி, ஆவரங்கால் | 2,000.00 |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1,000.00 |
| திருமதி பொ. இரத்தினசோதி | கதிரவேற்பிள்ளை வீதி, புலோலி | 7,000.00 |
| பாலச்சந்திரன் நிரஞ்சனா | சரசாலை | 5,000.00 |
| செல்வி சிவப்பிரகாசம் பரமேஸ்வரி | வட்டு. கிழக்கு வட்கோட்டை | 1,000.00 |
| க. விவேகானந்தராசா | சித்தங்கேணி | 300.00 |
| ஈஸ்வரி கணேசமூர்த்தி | அவுஸ்திரேலியா | 1,000.00 |
| செல்வி S. ஸ்ரீரங்கநாயகி தாதி உத்தியோகத்தர் | யாழ்ப்பாணம் | 4,000.00 |
| மார்க்கண்டு தயாளன் | கல்லூரி வீதி, சாவகச்சேரி | 10,000.00 |
| பொ. திருச்செல்வம் | தம்பசெட்டி பருத்தித்துறை | 1,000.00 |

| | | |
|---|---|---|
| அ. ஜெயேந்திரன் | கொக்குவில் | 1,000.00 |
| தர்மலிங்கம் தவேந்திரகுமார் | சித்தங்கேணி | 6,000.00 |
| சி. தணிகாசலம் | பத்தமேனி, அச்சுவேலி | 1,000.00 |
| ச. நாகரெட்ணம் | கல்வயல் சாவகச்சேரி | 2,000.00 |
| ப. ஜெகதீஸ்வரன் | சவூதி | 1,000.00 |
| மோகன் கடை | ஆவரங்கால் | 2 மூடை அரிசி, 1 புட்டி பருப்பு |
| மு. அப்புலிங்கம் | கோண்டாவில் | 1 மூடை அரிசி |
| வாசுகி | கோண்டாவில் | 10 கி. அரிசி |
| ஜெயபாஸ்கரன் குடும்பம் | மானிப்பாய் | 8,000.00 |
| வே. தங்கவேலாயுதம் | இமையாணன் உடுப்பிட்டி | 15,000.00 |
| ஆ. மகேந்திரலிங்கம் | இணுவில் | 4,000.00 |
| இரத்தினம் சந்திரன் | இராசவீதி தோப்பு, அச்சுவேலி | 2,000.00 |
| நா. குணரட்ணம் ஊடாக | புன்னாலைகட்டுவன் | |
| வே. சின்னையா | இலண்டன் | 20,000.00 |
| பாலசுப்பிரமணியம் பிரபாகரன் | குப்பிளான் | 1,000.00 |
| Dr. க. சிவஞானசூரியர் | கொழும்பு | 1,500.00 |
| சிதம்பரப்பிள்ளை இலக்சுமி | செங்குந்தர் வீதி, கரவெட்டி | 1,000.00 |
| சுப்பிரமணியம் உருத்திரசிகாமணி | வல்வை | 1,000.00 |
| தர்மினி பாலச்சந்திரன் | வதிரி | 2,000.00 |
| K. மங்கையற்கரசி | ஞானபண்டித பாடசாலை அருகில், கொக்குவில் | 5,000.00 |
| இ. ரகுநாதன் | இணுவில் கிழக்கு, இணுவில் | 10,000.00 |

(தொடரும்...



31.07.2009 வெள்ளிக்கிழமை கார்த்திகேசு கனகமணி என்பவருக்கு ஆச்சிரமத்தால் வழங்கப்பட்ட மூக்குக் கண்ணாடியை ஆசிரியை திருமதி கௌரி சுரேசன் அவர்கள் அணிவித்த போது....

நாவலர் பக்கம் : உ [தொடர்ச்சி...

# திருவிளையாடற்புராண வசனரூபம்

- ஆறுமுகநாவலர் -

படலம் – 13

## கடல் சுவற வேல் விட்ட படலம்

உக்கிரபாண்டியன் பூமியெங்கும் நீதி தவறாது அரசாண்டு வரும் நாளிலே வேத விதிப்படி எண்ணில்லாத யாகங்கள் பலவுஞ் செய்தான். அசுவமேத யாகம் தொண்ணூற்றாறு வரை நிறைவு செய்தான். இதைப் பார்த்த இந்திரன் உக்கிரபாண்டியன் மீது பொறாமை கொண்டான். வருணனை அழைத்து, "நீ ஊழிக்காலத்திலே ஏழு உலகங்களையும் ஒருங்கே அழிக்கும் கடலாய் உருவெடுத்துச் சென்றது போன்று மதுரையை வளைத்து அழிப்பாயாக" என்றான்.

வருணனும் மேல் விளைவுகளை எண்ணாமல் அவ்வாறே செய்யத் துணிந்தான். அர்த்த ராத்திரியிலே சமுத்திரம் அண்டத்தை எட்டி முட்டிப் பெருக்கெடுத்து மதுரையின் கீழ்த் திசையை அண்மித்தது. சோமசுந்தரக் கடவுள் உக்கிரபாண்டியன் கனவிலே ஒரு சித்தர் வடிவில் தோன்றி, "பாண்டியனே! சமுத்திரம் உன் மதுரை நகரத்தை அழிக்கும் வண்ணம் ஆர்ப்பரித்து வருகிறது. நீ விரைந்து போய், உன் வேற்படையை எறிந்து வெற்றி கொள்வாயாக" என்று அருளிச் செய்தார்.

நித்திரையினின்றும் விழித்தெழுந்த உக்கிரபாண்டியன் தம் மந்திரிமாரையும் அழைத்துக் கொண்டு வாயில்கள் பலவற்றையும் கடந்து சென்றான்பேரொலியுடன் ஆரவாரத்துப் பெருகிவரும் சமுத்திரத்தைக் கண்டு அதிசயத்துடன் பார்த்தபடி நின்றான். கனவிலே வந்த சித்தர் நனவிலே நேராக வந்து, "அன்பனே! பகைவன் வலி கெடும் வண்ணம் வேற்படையை எறிந்து பூமியைக் காப்பாற்றுவாயாக" என்றார். உடனே உக்கிரபாண்டியன் வேற்படையை வலமாகச் சுழற்றி எறிந்தான். அவ்வேற்படை பட்டதும் சமுத்திரம் வரண்டு சுருங்கிப் பாண்டியனுடைய காலடியில் ததும்பி நின்றது. சித்தராகக் கண் முன்னே தோன்றிய சிவபெருமான் மறைந்து, ஆகாயத்திலே உமாதேவியாரோடும் இடபாரூடராய் காட்சி கொடுத்தார். உக்கிரபாண்டியன் அடியற்ற மரம்போல நிலத்தில் வீழ்ந்து வணங்கி நின்றான். மதுரை மாந்தருக்கு வந்த பேராபத்து நீங்கிய மன நிறைவோடு உக்கிர பாண்டியன் தன் திருமாளிகை உள்ளே புகுந்தான்.

படலம் : 14

## இந்திரன் முடிமேல் வளையெறிந்த படலம்

உக்கிரபாண்டியன் நல்லாட்சி செய்து வரும் நாளில் தமிழ் நாடு முழுவதும் மழை இல்லாதொழிய மூன்று தேசங்களும் பஞ்சத்தினால் வருத்தமுற்றன. அதுகண்ட சேர, சோழ, பாண்டியரெனும் தமிழ் வேந்தர் மூவரும் அகத்திய முனிவரை அணுகி மழை பொய்த்துப் போனமை பற்றி எடுத்துச் சொல்லி ஆலோசனை கலந்தனர். அகத்தியர் கிரகநிலைகளை ஆராய்ந்து பார்த்து, 12 ஆண்டுகளுக்கு மழை பெய்ய வாய்ப்பே இல்லையென்றும் மழை பெய்விப்போனாகிய இந்திரனிடத்தே சென்று முறையிடுமாறும்" கூறினார். "நாம் இந்திரனிடத்திலே எவ்வாறு செல்வது" என மூவேந்தர்களும் வினாவினர். "நீங்கள் சோமவார விரதத்தை நோற்று சிவபெருமானு

டைய திருவருளைப் பெற்று ஆகாய மார்க்கமாக செல்லக் கடவீர்கள்" என்று சோமவார விரதம் நோற்கும் முறைமை யினையும் அகத்தியர் கூறினார்.

அகத்தியர் கூறியபடியே சோமவார விரதத்தை அனுட்டித்து, அதன் பலனைப் பெற்று ஆகாயமார்க்கமாக இந்திரன் இருப் பிடம் நோக்கிச் சென்றனர். இதனை அறிந்து கொண்ட இந்திரன் தன் ஆசனத்திலும் தாழ்ந்த மூன்று ஆசனங்களைக் கொடுத்து வரவேற்றான். சேரனும்,சோழனும் அவன் காட்டிய ஆசனத்தில் அமர்ந்து கொண்ட னர். உக்கிரபாண்டியன் இந்திரனுடைய சிங் காசனத்தில் ஏறிச் சரிசமனாக வீற்றிருந் தான். இதனால் பெரும் மனப் புழுக்கம் அடைந்த இந்திரன் மற்ற இருவரையும் பார்த்து வந்த காரணத்தைக் கேட்டறிந்து கொண்டான். இந்திரன், அவர்கள் இரு வரதும் நாடுகளிலே மட்டும் மழை பெய்யு மாறு வரங்கொடுத்து, இரத்தினாபரணங் களும் பீதாம்பரங்களும் பரிசளித்து "நீங் கள் போங்கள்" என அனுப்பி வைத்தான்.

தன்னாசனத்தில் அமர்ந்திருந்த உக் கிரபாண்டியனை அவமானப்படுத்த எண் ணினான் இந்திரன், மிக உயர்ந்த மதிப் பளிப்பான் போலப்பாசாங்கு செய்து, பல பேர் தாங்கி வரும் பெரும் அளவு கொண்ட ஒரு ஆரத்தை பரிசாகக் கொடுத்தான். பாண்டியன் அதை வாங்கி, ஒரு பூமாலை அணிவது போன்று தன் கழுத்திலே அணிந்துகொண்டு அங்கிருந்து வெளி யேறி மதுரையை அடைந்தான்.

இந்திரனுடைய ஆணையினாலே சேர, சோழ நாடுகளில் மழை பொழிய, பாண்டி நாடு மழையின்றி வரண்டிருந்தது. ஒரு நாள் உக்கிரபாண்டியன் பொதிய மலை யிற்சென்று வேட்டையாடும் போது புட்கலா வர்த்தம் முதலிய மேகங்கள் நான்கும் அம் மலையின் மேல் வீழ்ந்து மேயக்கண்டு, அவைகளைப் பிடித்து விலங்கிட்டு கொண்டு போய் சிறையில் இடுவித்தான். இந்திரன் அது கேட்டு மிகக் கோபங்கொண்டான். சமுத்திரம் வற்றும் வண்ணம் வேல் விடுத்தமை யும், மிக வலிய ஆரத்தைத் தாங்கிய மையும், மேகங்களைச் சிறையிலிட்ட மையும் ஆகியவற்றை நினைந்து நினைந்து, "ஒரு மனிதனுக்கு இத்தனை வலிமை யாது!" என்று வியந்து பொறாமை மேலோங்க மதுரையை வளைத்து முற்றுகையிட்டு போருக்குத் தயாராகி நின்றான். இது கண்ட ஒற்றர்கள் ஓடிப்போய் உக்கிரபாண்டியனி டம், "மகாராசாவே! தேவசேனை நம்மு டைய நகர்ப்புறத்தைச் சூழ்ந்தது" என்று தெரிவித்தார்கள்.

உக்கிரபாண்டியன் கோபம் மிகக் கொண்டு நால்வகைச் சேனைகளும் சூழ தேவசேனையை எதிர்கொண்டு போரிட்டான். இறுதியில் இந்திரன் பாண்டியன் மேல் குலி சாயுதத்தை வீச, பாண்டியன் தன் கையி லிருந்த வளையைச் சுழற்றி வீசினான். அவ்வளை குலிசாயுதத்தை வீழ்த்தி, இந் திரனுடைய மகுடத்தைத் தள்ளிச் சிதைத் தது. இந்திரன் அஞ்சி ஓட்டமெடுத்தான். "யான் சோமசுந்தரக் கடவுளைத் தவறாது பூசித்து வந்ததனாலன்றோ உக்கிரபாண் டியன் வீசிய வளை என் சிரசைச் சிதை யாது என் முடியைச் சிதைத்தது" என்று கூறி சிவபெருமானுடைய திருவருளைப் போற்றிட நின்றான்.

போரில் எதிர்கொள்ள முடியாமல் ஓடிப்போன இந்திரன், "தங்கள் நாட்டுக்கு மழை தருவேன். மேகங்களைச் சிறையில் இருந்து விடுக" எனக் கேட்டு உக்கிர பாண்டி யனுக்கு ஒரு ஓலை அனுப்பினான். உக்கிர பாண்டியனும் சம்மதித்து மேகங்களைச் சிறை நீக்கினார். இந்திரன் ஏவலினாலே பாண்டியநாடு மாதம் மும்மாரி மழை பெய் யப் பெற்று மிகச் செழித்தோங்கியது.

உ

# வேண்டுதல்கள்

- திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் -

நாராயணன்பால் பக்திகொண்டு அவனைச் சேவித்த ஆழ்வார்களுள் திருமழிசை ஆழ்வாரும் புகழ்பெற்ற ஒருவர். அவர் அருளிய திருச்சந்த விருத்தம், பக்தியைத் தழி முள் பொதிந்து அருமையாகத் தருவதால் பாடுந்தோறும் பரவசம் பயக்கும் வகையில் அமைந்துள்ளது.

தமிழறிவும் தத்துவஞான முதிர்வுங்கொண்டோர் எழுத்தெழுத்தாக இரசிக்கக்கூடிய பாடல்களைக் கொண்டது.

இறைவனைப் போற்றிப் புகழ்ந்து துதிக்கும் அடியவர்கள் தம் வேண்டுதல்களையும் சமர்ப்பிக்கத் தவறுவதில்லையே. திருமழிசைப்பிரான் மட்டும் விதிவிலக்கானவரா என்ன? அவரும் திருச்சந்தவிருத்தத்தில் இடையிடையே தன் வேண்டுகோள்களை முன்வைக் கின்றார். இறைபக்தர்கள் எம்மைப் போன்று இவ்வுலகத் தேவைகளை யாசித்து நிற்பதில்லை. ஆழ்வாரும் தான் உய்வு பெற்று நாராயணன் பதமலரையடைய வேண்டிய வற்றையே வேண்டியுள்ளார். அவர் வேண்டும் முறைதான் வேறுபட்டுள்ளது. ஞானசம்பந்தப் பெருமான்,

**இடரினும் தளரினும் எனதுறுநோய்**
**தொடரினும் உனகழல் தொழு தெழுவேன்**

எனப்பாடினார்.

அப்பரடிகள்

**"நலந் தீங்கினும் உன்னை மறந்தறியேன்**
**உன் நாமம் என்நாவில் மறந்தறியேன்"**

என்று பாட

சுந்தரமூர்த்தி சுவாமிகளோ

**நற்ற வாஉனை நான்ம றக்கினும்**
**சொல்லும் நாநமச்சி வாயவே**

என்றார், இறைவனை மறக்காது அவன் நினைவாகவேயிருக்க அடியவர்கள் ஆசைப்படுவது வழமை. திருமழிசை ஆழ்வாரும் இதே வரத்தினை இரந்து கேட்டுள்ளார். ஆனால் வேறு வகையிலே கேட்டுள்ளார். அவர் **"கடல் வண்ணனே, நீ நினைக்க வேண்டும்"** என்று கோரியுள்ளதைக் காண எமக்கு வியப்பாக இருக்கிறது. "நாமல்லவா இறைவனைநினைக்க வேண்டும். இவரோ "ஏமநீர் நிறத்தமா, நீ நினைக்க வேண்டுமே" என்கின்றாரே. எனத் திகைப்படைந்து பார்த்தால், அவர் தம்மைநினைக்குமாறு இறைவனைக் கேட்கவில்லை. "வரந்தருந் திருக்குறிப்பில் வைத்ததாகில் இரந்துரைப்பதுண்டு" என்று வரங்கேட்கப்போனவர் தான் இறைவனை மறவா வரங்கேட்டிருக்கலாம். அல்லது இறைவன் தன்னைநினைத்து வந்து உய்விக்க வேண்டுமென்று கேட்டிருக்கலாம். அப்படிக் கேட்கத் தெரியாதவருமல்ல. இதற்கு முன்னுள்ள பாடல்களிலே இவற்றையெல்லாம் வேண்டியவர்தான். ஒரு பாடலிலே

**வரம்பிலா தபல்பிறப் பறுத்துவந்து நின்கழல்**
**பொருந்துமா திருந்த நீ வரஞ்செய் புண்டரீகனே**

என வேண்டியுள்ளார். "நான் எல்லையற்ற பலபிறவிகளை அறுத்து உனது பாதங்களை அடைய வேண்டும்" என வரங்கேட்டவர், மற்றொருபாடலிலே அவனது பாதத்திலே பக்தியை நல்கவேண்டும் என்று கேட்டு நிற்பதைக் காணலாம்.

**பிறப்பினோடு பேரிடர்ச் சுழிக்கண்நின் றும்நீங்குமஃது**
**இறப்பவைத்த ஞானநீசரைக் கரைக்கொடேற்றுமா,**
**பெறற்கரிய நின்னபாத பத்தியான பாசனம்**
**பெறற்கரிய மாயனே யெனக்குநல்க வேண்டுமே**

என்ற பாடலிலே அவரது வேண்டுதல் அவ்வாறு அமைந்தது. சுழியிலே அகப்பட்டவர் தப்புவது அரிது. இங்கே பேரிடர்ச்சுழியில் அகப்பட்டவரைக் கரையேற்றுகிற அதிசயம் நிகழ்கிறது. அதற்கு உனது பாதம் வேண்டும். அப்பாதங்களிலே பக்திவேண்டும். இந்த அதிசயத்தைச் செய்யும் மாயனாகிய நீ பெறற்கரியவன். உனது பாதம் பெறற்கரியது. அந்தப் பாதத்தில் வைக்கும் பக்தியும் பெறற்கரியது. இறைவனிடத்து பக்தி வைப்பதென்பது இலகுவானதல்ல. "பக்தி என்பது ஒருவகை மனோவியாதி" எனக் கருதுவோர் முதல் 'பக்தி செய்கிறோம்' எனக் கருதிக் கொண்டாலும் உண்மையான பக்தி செய்ய முடியாதோர் வரை நாமெல்லோரும் பக்தியைப் பெறமுடியாமல் தவித்துக் கொண்டிருக்கிறோம். இதனாலேதான் "நாடகத்தால் உன்னடியார் போல் நடித்து" என்று மாணிக்கவாசகப் பெருமானும் பாடியுள்ளார் போலும். அந்தப் பெறற்கரிய பக்தியை நல்குமாறு வேண்டிய ஆழ்வார்.

அடுத்த பாடலிலே "நீ நினைக்க வேண்டும்" எனக் கோரிக்கை விடுக்கின்றார். விஷ்ணு எதை நினைக்க வேண்டுமெனக் கேட்டுள்ளார் தெரியுமா, ஆழ்வாருக்குத் தெரியும் அவன் நினைக்காமல் எதுவும் நடைபெறாதென்று. பக்திசெய்ய வேண்டும். அதற்கு அரங்கனின் பாதங்களை நிரந்தரமாக இடையறாது நினைக்கவேண்டும். அப்படி நினைப்பதென்பது எளிதானதல்லவே. எனவே இறைவன் நினைத்தால்தான் அது நடைபெறும்.

**இரந்துரைப்ப துண்வொழி ஏமநீர்நிற் தமா,**
**வரந்தரும் திருக்குறிப்பில்வைத்ததாகில் மன்னுசீர்**
**பரந்தசிந்தை யொன்றிநின்று நின்னபாத பங்கயம்**
**நிரந்தரம் நினைப்பதாக நீ நினைக்க வேண்டுமே**

என்று எங்கெங்கோ அலையும் சிந்தை ஒன்றிநின்று பரந்தாமனின் பாதத்தாமரைகளை நிரந்தரமாக நினைப்பதற்கு வரங்கேட்கின்றார். இத்துடன் அவரது வேண்டுதல் நின்றுவிடவில்லை. "நின் பெயர் உருக்கலந்தொழிவிலாது உரைக்குமாறும் "கிடந்து, இருந்து, நின்று, இயங்கும்போதும் நின்ன பொற்கழல் தொடர்ந்து விள்விலாததோர் தொடர்ச்சி" யும் நல்க வேண்டுமென்றும் இடையீடின்றித் தொழுவதற்கான வேண்டுதல்கள் திருச்சந்தத்திலே, தொடர்கின்றன.

"அடைக்கலம் புகுந்தவென்னை அஞ்சல் என்ன வேண்டுமே" "மீள்விலாத போகம் நல்க வேண்டும்" ஆகிய பல வேண்டுதல்களை இவர் செய்திருந்தாலும் அவரது வேண்டுதல்கள் அனைத்தையும் இக்கட்டுரையுள் அடக்குவது கடினம். எனினும், சுவையான மற்றொரு வேண்டுதலை மட்டும் பார்ப்போம்.

கண்ணன் பஞ்சபாண்டவருள் ஒருவனான நகுலனுக்கு பல உருவில் காட்சி தந்ததும் பக்தியால் அத்தனை பேரையும் நகுலன் கட்டியதும் நாம் அறிந்த கதை. இறைவனை "ஏகன் அநேகன்" எனப்பாடுகின்றார் மணிவாசகர். எண்ணிலாதவனாய்

எல்லோருள்ளும் இருக்கும் இறைவன் என்னுள்ளும் இருக்கின்றான். ஆனால் தீய சக்திகள் குடிகொள்ளும் போது தெய்வம் மறைந்து விடுகிறது. இப்படி இருந்த இறைவனைத் தொலைத்துவிட்டு அசுரகுணங்களுடன் அலைவோர் பலருள்ளனர். அப்படி நானும் மாறிவிடக்கூடாது என்ற எண்ணம் திண்ணமாக எம்முள் இருக்கவேண்டும். தீய சக்திகள் என்னுள்ளே புகுந்து ஆட்டம்போடத்தான் செய்யும். அதற்காக இறைவா நீ அகன்றுவிடலாமா? நீ என்னுள்ளிருந்து நீங்கிவிடக்கூடாதுஎன இறைஞ்சி நிற்கின்றார் திருமழிசைப் பிரான்

**எண்ணிலாத மாய நின்னை யென்னுள் நீக்கவென்றுமே**

என்பது அவரது வேண்டுகோளாகும்.

'நீ ஏற்கனவே என்னுள் இருக்கின்றாய். என்னுள்ளிருந்து உன்னை நீக்கிவிடாதே" என்பதும் ஒரு வேறுபட்ட வேண்டுதலாகும்.

திருச்சந்த விருத்தம் தத்துவக் கருத்துக்களைப் பாடும்போது தமிழின் திறனையும் அழகையும் சிறப்பையும் வெளிக்காட்டி நிற்பது போன்றே வேண்டுதல்களையும் சுவைசொட்ட, நுட்பமாக முன்வைக்கின்றது. இவற்றைப் படிக்கும்போது எமது சமய தத்துவங்கள் வரண்டவையல்ல. சுவைநிறைந்தவை என்பதை உணரமுடிகிறது.

## அறவழியில் பொருளும் இன்பமும்

பொருளுக்குத்தான் உலகில் அதிக மதிப்பு. இதைக் கொண்டு யாரும் தவறான வழியில் செல்வம் திரட்டக்கூடாது. அறத்தின் வழியே பொருள் திரட்ட வேண்டும். பிறர் அழ, அழ பொருளைச் சேர்க்கக்கூடாது. பிறரை அழவைத்துச் சம்பாதித்தால், சம்பாதித்தவன் அழ அழ அவன் கையை விட்டு அது போய்விடும். அறம் என்றால் தர்மம் செய்வது. அதுவும் அறத்துடன் இருக்க வேண்டும். ஒருவனுக்கு பணம் கொடுக்கிறோம். அதைப்பெற்றுக் கொண்டவன், ஒரு கத்திரிக்கோல் வாங்கி ஊரார் பையையெல்லாம் கத்தரித்துப் பணத்தைத் திருடினால் நாம் கொடுத்ததும் வீணாகிவிடும். ஆகவே தர்மம் செய்வதும் தர்மத்துடன் இருக்க வேண்டும். இன்பம் கூட தாலி கட்டிய மனைவியிடம் பெறுகின்ற இன்பமாக இருக்க வேண்டும். தவறான வழியில் வருகின்ற இன்பமாக இருக்கக் கூடாது.

உ

# நால்வர் நற்றமிழ்

- சிவ சண்முகவடிவேல் அவர்கள் -

தேனினும் இனிய தீந்தமிழ் மொழியில் நான்கு என்னும் இலக்கம் நற்பொருள் பலவற்றை நமக்கு நன்கு உணர்த்தும்.

அவற்றுள் ஒருசிலவற்றை இங்கு எடுத்து இயம்புகின்றோம். இருக்கு, யசுர், சாமம், அதர்வணம் என வேதம் நான்கு. அறம் பொருள் இன்பம் வீடு என மாந்தர்க்கு உறுதிபயப்பன என்று உயர்ந்தோரால் எடுத்து உணர்த்தப்படும் பொருள் நான்கு. பிரமசரியம், இல்லறம், வானப்பிரத்தம், சந்நியாசம் என அறநெறியில் நின்றொழுகும் நிலை நான்கு. குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல், என நிலவகை நான்கு. அச்சம்,மடம்,நாணம்,பயிர்ப்பு எனப் பெண்மைக்குரிய குணம் நான்கு. அரசர், அந்தணர், வணிகர், சூத்திரர் எனவருணம் நான்கு கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என திசை நான்கு. கருப்பை, முட்டை, கிழங்கு, வியர்வை, என உயிர்த்தோற்ற வகை நான்கு. வெண்பா, ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா, எனப் பாவகை நான்கு, சனகர் சனற்குமாரர் சனந்தனர் சனாதரர் என ஆலமர்கடவுள் அருமாணாக்கர் நான்கு. மெய்கண்டதேவர், அருணந்தி சிவாச்சாரியார், மறைஞான சம்பந்த சிவாச்சாரியார், உமாபதி சிவாச்சாரியார் எனச் சந்தானகுரவர் நான்கு. அதேபோலத் திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், திருநாவுக்கரசுநாயனார், சுந்தரமூர்த்திநாயனார், மாணிக்கவாசக நாயனார் எனச் சமயகுரவர் நான்கு.

அப்பெருமக்களுடைய திருநாமங்களை எடுத்துச்சொல்லாமல் நால்வர் என்ற நயப்பாட்டோடு அழைக்கும் நன்மரபு அன்றுதொட்டே சைவசமயத்தில் நிலவிவரும் வழக்கமாகும். நாலுபேர் சொன்னபடி நட! சமயகுரவர் நால்வர். அகச்சந்தனாச்சாரியார் என்று அழைக்கும் நடைமுறையும் சைவசமயத்தில் உண்டு.

பாண்டிய மன்னனுடைய வெப்பு நோய் மாற்றிய புகலியர்மன்னனுக்கு வணக்கம் என்றும், கடலில் கல்லில் தெப்பமாகக் கரை சேர்ந்த பெருமானுக்கு வணக்கம் என்றும், என்றும் அருட்செல்வத்தில் வாழும் திருநாவலூரில் அவதரித்த வன்றொண்டர் திருவடிகளுக்கு வணக்கம் என்றும் ஊழிக்காலங்களிலும் உலவும் திருவாதவூரருடைய திருவடிகளுக்கு வணக்கம் என்றும் நால்வருடைய, கழல், அடி, பதம், திருத்தாள் போற்றும் உமாபதி சிவாச்சாரியார் பாடல் வருமாறு:

**பூழி யர்கோன் வெப்பொழித்த**
**புகலியர் கோன்கழல் போற்றி**
**ஆழி மிசைக்கன் மிதப்பில்**
**அணைந்த பிரானடி போற்றி**
**வாழி திருநா வலூர்வன்**
**றொண்டர் பதம் போற்றி**
**ஊழி மலிதிரு வாத**
**வூரர் திருத்தாள் போற்றி.**

சைவ உலகம் போற்றும் நால்வர் பெருமக்கள் அளித்த தெவிட்டாத தெள்ளமுது பன்னிருதிருமுறையில் முதல் எட்டுமாகும். அவை தேவாரம் திருவாசகம் திருச்சிற்றம்

பலக்கோவையுமாகும்.

எல்லப்பநாவலர் என்னும் பெரியார் தேவாரமும் திருவாசகமும் சைவ சமயத்திற்கு மேலான சமயம் வேறு இல்லை என்பர். சைவம்சார்ந்த சிவத்திற்கு மேலான கடவுள் இல்லை. அந்த மெய்ப்பொருளை உணர்த்துவன சிறப்புமிக்க அருளார முதமான தேவாரமும் திருவாசகமும். அவற்றை அருளிச்செய்து நாம் உய் வடையும் நெறியை உணர்த்திய நால் வருடைய பொன்போன்ற புனிததிருவடிகள் எமது உயிருக்கு உற்றதுணை.

**சைவத்தின் மேற்சமயம் வேறில்லை**
**மற்றதிற் சார்சிவமாம் தெய்வத்தின்மேற்**
**தெய்வம் வேறில்லை என்றிடும்வாய்**
**மைவைத்த சீர்த்திருத் தேவா**
**ரமும்திரு வாச கமும்**
**உய்வைத் தரச் செய்த நால்வர்**
**பொற்றாள் எம் உயிர்த்துணையே.**

நமக்கு எல்லாம் உய்வைத்தரச் செய்யும் தேவாரத்தையும் திருவாசகத்தை யும் புனித இடத்தில் அமர்ந்து ஓதுவத னாலும் செவிமடுத்துக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கிக் கேட்பதனாலும் பெறும் பயனை இனிச்சொல்வாம்.

"புன்னெறி அதனில் செல்லும் போக் கினை நீக்கும் நன்னெறி ஒழுகச்செய்யும். நவையறு காட்சி நல்கும். பந்தபாசம் பாற்று விக்கும். வந்த காரணத்தைத் தந்து நிற்கும்.

"நமனார் தமர்செக்கில் இடும் போது தடுத்தாட் கொள்ளும். உருமன்ன கூற்றத்தை உருண்டோ உதைத்து உலவா இன்பம் உதவும். சுரும்பார் விண்டமலர் அவைதூவித் தூங்கு கண்ணீர் அரும்பா நிற்குமனத் தடியாரோடும் அன்பு கூட்டும். முத்தியும் ஞானமும் வானவர் அறியா முறை முறை பலபல நெறிகளும் காட்டும். 'வரும்பெரும் வல்வினை என்றி ருந்தெண்ணி வருந்தலுரு மனந்தரும். 'நினை தரு பாவங்கள் நாசமாக்கும். 'பாச வேரறுத்துப் பழம் பொருள் தன்னைப் பற்றுமாறருளும்', 'வஞ்சனை செய்தவர் பொய்யையும் மாய்க்கும்', 'பத்தர் தம் நெஞ்சம் இருக்கை கொள்ளும். கற்ற கல்வியினும் இனிக்கும்!. மாய மாய மனங் கெடுக்கும். பத்தராக்கும் பத்தி வித்தினால் முத்தி விளைக்கும். உற்றநோய் இற் றையே உறவொழிக்கும்.

'உலகறி பழவினை அறவொழிக்கும். 'தவநெறி சென்றம ருலகம் ஆள் விக்கும். வாசம் மல்கு குழலினார்கள் ஆசை நீக்க ஈசர்பால் நேசமாக்கும் 'பத்தராகிப் பரமர் பாதம் பணிவிக்கும். பறையுமாம் செய்த பாவங்கள் தானே'.

'தொல்வினை தீர்தல் எளிதாமே. பரமன் னடி சேர்ந்து குற்றமின் றிக்குறை பாடொழி யாப்புக ழோங்கிப் பொலிவாரே இந்தப் பாரொடு விண்பரி பாலகரே. 'இமைய வரேத்தவி ருப்பர்தாமே', 'கேதத்தினை யில்லார்சிவ கெதியைப் பெறுவாரே. ஊழின் மலி வினைபோயிட வுயர்வானடைவாரே. என்றும் விளங்கும்புக ழுதனோடுயர் விண் ணும் முடையாரே. சில மல்கிய செல்வன் னடி சேர்வர்சிவ கதியே. 'குன்றாத்தமிழ் சொல்லக்குறை வின்றிநிறை புகழே, எழின் மலர்மகள் கலைமகள் சயமகள் இனமலி புகழ்மக ளிசைதர விருநில ளிடையினி தமர்வரே. உலங்கொள் வினைபோய் யோங்கி வாழ்வாரே. எளிதாம் பிறவாவகை வீடே விண்ணோருலகத் தினில்வீற் றிருப்பாரே.

'விண்ணவர் விமானங் கொடுவர ஏறி வியனுல காண்டுவீற் றிருப்பவர் தாமே.

'செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவ னடிக்கீழ்ப் பல்லோரு மேத்தப் பணிந்து,

'தொல்லை இரும்பிறவிச் சூழும் தளை நீக்கும். அல்லல் அறுக்கும். ஆனந்த மாக்கு விக்கும் மருவா நெறி அளிக்கும்.

'பேரொளியைப் பெரும்பற்றப் புலியூ ரானைப் பேசாத நாளெல்லாம் பிறவா நாளே. வாராத செல்வம் வருவிக்கும். தீராத நோய் தீர்க்கும். போகாத வினை போக்கும். செல்வாய செல்வம் சேர்க்கும்.

இன்னும் ஆயிரம் ஆயிரமாகத் தேவாரம் திருவாசகம் ஓதும் பயனை அள்ளி அள்ளிச் சொரியலாம். விரிவஞ்சி விடுக்கின்றாம்.

இனி, ஓரிரு சென்னாப் புலவர்கள் ஓதற்பயனைச் சுருங்கச் சொல்லிவிளங்க வைக்குந் திறங் காண்போம்.

**சேக்கிழார் பெருமானுடைய செம்மொழி**

**"ஊன டைந்த உடம்பின் பிறவியே**
**தான டைந்த உறுதியைச் சாருமால்.**

**– திருத்தொண்டர் மாக்கதை**

**கச்சியப்ப சிவாச்சாரியாருடைய கந்தன் தமிழ்**

**"இந்திர ராகிப் பார்மேல்**
**இன்பமுற் றினிது மேவிச்**
**சிந்தையி னினைந்த முற்றிச்**
**சிவகதி யதனிற் சேர்வர்**

**– கந்தபுராணம்**

**பரஞ்சோதி முனிவருடைய பரகதித் தமிழ்**

**"......... வானா டெய்திப்**
**புங்கவரா யங்குள்ள போக மூழ்கிப்**
**புண்ணியராய்ச் சிவனடிக்கீழ் நண்ணி வாழ்வார்.**

**– திருவிளையாடற் புராணம்.**

**கடவுள் மாமுனிவர் கைவந்த தமிழ்**

**"............ இயம்பினர் நயந்தே**
**சிந்தையி னினைப்பவ ் செவிப்புல நிறைப்போர்**
**புந்திமகி ழப்புவி புரப்பருடல் விட்டா**
**லந்தவுல கந்தனி லரன்சபையில் வாழ்வார்.**

**– திருவாதவூரடிகள் புராணம்**

இவை யாவும் புராண சாரப் பயனைத் திரட்டித்தந்த குளிகைத் தமிழ். அவை தேவார திருவாசகத் திருமுறைத் தமிழிற்குப் பொருந்துமோ என மலைவு எழலாம். அது அற்றன்று.

எங்ஙனமோ வெனில் காரணம் காட்டுதும். விளங்காத வேத மந்திரப் பொருளை விளங்க வைக்கவும், பத்தியாய் உணர்வோர் அருளைவாய் மடுத்துப் பருகுதோறமுத மொத்தவர்க்கே தித்தியாய் இருக்கும் புராணங்களைப் போல நால்வர் நற்றமிழாகிய தேவாரம் திருவாசகத் திருமுறைகளும் தமிழ் வேதமாகவும் பரிசுத்தராகிப் பண் சுமந்து பாடுவோரையும் கேட்போரையும் பத்தி வெள்ளத்தில் பரவசப்படுத்தி முத்திக் கடலில் மூழ்குவித்துச் சித்தித்திறங் காட்டும் திருவருட் பிரசாதம் போல்வதும் ஆகலின் புரா ணப் பயன் திருமுறை - நால்வர் நற்றமிழுக்கும் ஒப்பாகும் என்று கொள்க.

இனி நால்வர் தமிழ் நற்றமிழ் என்பதனை ஒரு பானை சோறானாலும் ஒரு சோற்றால் பதம் பார்ப்பது போல ஒரு திருப்பாடலை எடுத்துச் சிந்தனைக்கு விருந்தாக்குவோம்.


(வளரும்...

தர்மம் துரதிருஷ்டங்களைத் தடுக்கிறது

உ

(தொடர்ச்சி...

# மோகனதாஸ் சுவாமிகளின் வட இந்திய ஸ்தலயாத்திரை



**காலம்: 31-07-2008 வியாழன் - காலை 6.45 மணி**

**இடம்: கேதாரநாத் நோக்கிய பஸ் பிரயாணம்**

காலை 6.45 மணிக்கு ஹரித்துவாரிலிருந்து புறப்பட்டு இவு 10.00 மணிக்கு கேதாரநாத் கோயிலுக்குச் சமீபமாகவுள்ள "ராம்பூர்" விடுதியில் தங்கிக் கொண்டோம். நீண்ட பகல் நேர பஸ் பிரயாணமாதலால் மலைத் தொடர்களின் அழகிய ரம்மியமான காட்சிகளை வழிநெடுகிலும் பார்த்து அதிசயித்தோம். ஆழமான தூக்கத்துடன் இரவுப் பொழுது கழிந்தது

**காலம்: 01.08.2008 வெள்ளி காலை 6.00 மணி (ஆடி அமாவாசை)**

**இடம்: கேதாரநாத்**

அதிகாலை 5.30 மணியளவில் கேதாரநாத் மலையுச்சியை அடைவதற்குரிய முதற்கட்டமாக அடிவாரத்தில் அமைந்த கௌடி குண்டத்தில் உள்ள வெந்நீர் ஊற்றினுள் பல நாட் பிரயாணத்தின் உடல் அலுப்புத் தீர உடலுக்கு இதமான வெந்நீரில் நாம் எல்லோரும் ஸ்நானஞ் செய்தோம். அதன் பின்னர் அடிவாரத்தில் இருந்து 14 கி.மீ. தூரம் கொண்ட மலையின் உச்சியில் உள்ள கேதாரநாத் சிவன் கோவிலுக்குப் போவதற்குரிய ஒழுங்குகளை எமது முகவராகச் செயற்பட்ட கலாநிதி திரு. ஸ்ரீரெங்கநாதன் அவர்கள் மேற்கொண்டார்கள். மலை உச்சியை அடைவது என்பது எமக்கெல்லாம் ஒரு பயங்கரமான செயற்பாடாக இருக்கும் என்பதை நாம் எல்லோரும் உணர்ந்து கொண்டாலும் எம்மால் மேற்கொள்ளப்பட்ட புனித யாத்திரையின் நிமித்தம் எமது பிரயாணம்

வெற்றிகரமாக அமையும் என்ற நம்பிக்கையுடன் அப்பிரயாணத்திற்கு நாம் எல்லோரும் தயாரானோம்.

பிரயாணத்தின் முதற்படியாக மலையுச்சியை அடைய இருக்கும் 14 கி.மீ. தூரத்தையும் அங்கே அதற்கென இருக்கும் பழக்கப்பட்ட குதிரைகள் மூலம்தான் செல்ல வேண்டும். அப்படி செல்லுவதற்கு இரு குதிரைக்கு ஒரு பாதுகாவலரும் வருவார்கள். அவ்வகையில் குதிரையிற் செல்லும் ஒருவர் ரூபா 750.00 (இந்திய ரூபா) செலுத்த வேண்டும். அப்படிக் குதிரையில் செல்ல இயலாதவர்கள் பல்லக்கின் மூலம் செல்லக் கூடிய ஒழுங்கும் அங்கே செய்யப்பட்டிருந்தன. அப்படிப் போகுமிடத்து ஒருவருக்கு 2500.00 ரூபா செலுத்த வேண்டும். (இந்திய ரூபா) பல்லக் கில் மலை உச்சிக்குப் போகின்றவரை இருத்தி நான்கு பேர் சுமந்து கொண்டு செல்வது ஒரு பெரிய அதிசயமாகவே எமக்குப்பட்டது. பாதையோ கரடு முரடானது, சீரான படிக்கட்டு இல்லை. அப்படியான பாதையில் தூக்கிக் கொண்டு ஓடுவது என்பது லேசான காரியமில்லை.

இவற்றையெல்லாம் தெரிந்துகொண்டு எமது பிரயாணத்தை ஆரம்பித்தோம். மேலே கூறியபடி நாம் குதிரையில் ஏறி இருந்ததும் இரு குதிரைக்கு ஒரு பாதுகாவல னும் எம்மோடு வருவதற்கு ஆயத்தமானார்கள். பாதுகாவலன் எம்மை குதிரையில் இருத்தி தான் நடந்து குதிரையை மெதுவாக கூட்டிச்சென்றான். நாம் குதிரையிற் செல்லும்போது ஒருசில வட இந்திய யாத்திரிகர்கள் தடி ஊன்றிக்கொண்டு மலைமீது ஏறிக் கொண்டிருப்பதைக் கண்டோம். அதைப் பார்க்குமிடத்து எனக்கும் ஒரு ஆவல் ஏற்பட்டது. நானும் நடந்திருக்கலாமே என்று. எம்மைச் சுமந்து செல்லும் குதிரையின் களைப்புத் தீரவதற்கு வழிநெடுக தண்ணீரத் தொட்டிகள் அமைக்கப்பட்டிருந்தன. மலை மீது ஏறுகின்ற யாத்திரிகளின் களைப்புத் தீருவதற்குரிய வகையில் வழிநெடுக பல சிறு சிறு கடைகளும் அமைந்திருந்தன. சரியாக மலை உச்சியின் நடுப்பகுதிக்கு வந்ததும் தானாகவே குதிரை நின்றது. வழக்கமாக அந்த இடத்தில் குதிரைக்கு தீனி வைத்து சுமார் அரைமணி நேரம் குதிரையும், செல்லும் யாத்திரிகர்களும் இறங்கி ஓய்வு எடுத்துக் கொண்டுதான் செல்வதை நடைமுறைப்படுத்துகின்றார்கள். அதன் பிரகாரம் நாமும் இறங்கி இளைப்பாறிச் சுமார் 11 மணியளவில் மலை உச்சியை அடைந்தோம். மலையின் உச்சியில் நாம் நின்ற பொழுதுதான் எவ்வளவு உயரமான இடத்தில் நாம் நிற்பதை உணர்ந்தோம். சுற்றுமுற்றும் பனி மலைசார்ந்த சூழலும் அதன் குளிர்த் தன்மையும் எமது உடலுக்கும் மனதுக்கும் ஒரு பெரும் புத்துணர்வைத் தந்தன. மலையிலிருந்து நாற்புறமும் சிறு சிறு அருவிகளாக கீழிறங்கிக் கொண்டிருக்கும் நீர் வீழ்ச்சியைக் காணுகின்ற பொழுது சிவபிரானது தலைமுடியிலிருந்து கங்கை நீர் குதித்தோடுவதைப் போன்ற உணர்வு தான் எமக்கு ஏற்பட்டது.

மலையின் மேலே கேதாரநாத்தின் தென் பாகத்தில் வைரவருக்கான ஒரு கோயில் கட்டப்பட்டுள்ளது. கோயிலிள் உள்ள சுவர்களில் செதுக்கப்பட்ட அழகிய சிற்ப வேலைப்பாடுகளை நாம் காணக்கூடியதாக இருந்தது கேதாரநாத் ஆலயத்தில் மண்டபமும், கர்ப்பக் கிரகமும் உள்ளன. கர்ப்பக் கிரகத்தில் சிவலிங்க சொரூபமாக சிவனை வணங்குகிறார்கள். இதன் எதிரே பெரிய நந்தி காணப்படுகிறது. இங்கே உள்ளசிவபிரான் பன்னிரண்டு ஜோதிர் லிங்கங்களுள் ஒன்றாகும். ஏப்ரல் மாத கடைசி வாரத்தில்த்தான் குளிர் நீங்கி ஆலயம் தரிசனத்திற்காகத் திறந்து விடப்படுகிறது. மே முதல் ஒக்டோபர் வரையிலான மாதங்கள் கேதாரநாத் யாத்திரைக்கு மிகவும்




சிறந்தவை. தீபாவளி தரிசனம் முடிந்ததும் ஆலயம் மூடப்படுகிறது அதன் பின்னர் குளிர்காலத்தில் பூசை கிடையாது. அந்த நாட்களில் மலை உச்சியில் உள்ள அனைவரும் மலையடி வாரத்துக்கு வந்து விடுவார்கள்.

நாம் கேதாரநாத் ஈஸ்வரனைத் தரிசிக்கச் சென்ற நாள் ஆடி அமாவாசை. இந்த நன்நாளில் கேதாரநாத் ஈஸ்வரனைத் தரிசனம் செய்ய நாம் கொடுத்து வைத்திருக்க வேண்டும். அவ்வெண்ணத்தோடு மதியம் 12 மணிக்கு நடைபெறும் பூசை வழிபாட்டினில் மிகுந்த ஈடுபாட்டுடன் கலந்துகொண்டோம். சுமார் ஒரு மணித்தியாலயம் அளவில் ஆலயப் பிரகாரத்தில் மனதை ஒரு நிலைப்படுத்தி அனைவரும் பிரார்த்தனையில் ஈடுபடுவதற்கு கேதாரநாத் அமைந்த சூழல் ஒரு உந்து சக்தியாக விளங்கியது. எமது பூசை வழிபாடுகள் முடிந்த பின்னர் மலை அடிவரரத்தை நோக்கி இறங்க ஆரம்பித்தோம். இப்போதுதான் எதிர்பாராத அந்த சம்பவம் எனக்கு ஏற்பட்டது.

(தொடரும்...

## வைகாசிப் பெருவிழாவிற்கு ஆதரவு நல்கிய அன்பர்கள் (தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| M.S.K. மகேஸ்வரன் | தாவடி | 2000.00 |
| ஐ. இராமச்சந்திரா | லவ்வேலன், உடுவில் | 1[illegible]0.00 |
| க. தர்மலிங்கம் J.P. | நீர்வேலி | 1010.00 |

நல்ல நம்பிக்கை என்பது உண்மையின் மறுபிறப்பு

உ

(தொடர்ச்சி...

# தவமுனிவனின் தமிழ் மந்திரம் (கட்டுரைத் தொடர் - 28)

- சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்கள்-

திருமூலர் தான் பெற்ற ஞானானந்த அனுபவத்தை தனது பாடல்களின் ஊடாக மக்களுக்கு வெளிப்படுத்துகின்றார். நந்தியெம்பெருமானே குருவாக வந்து தம்மை ஆட்கொண்டருளிய சிறப்பினைத் தனது பாடல்களில் கூறுகின்றார். குருவாக வந்த இறைவன் தன் திருவருளாலே ஆனந்தக் கடலாகிய அமுதக் கடலிலே என்னைக் குளித்து மகிழச் செய்தான் என்கிறார். அருளோடு தன் திருவடி இரண்டையும் என் தலையிலே சூட்டி என்னை ஆட்கொண்டான். அந்தத் திருப்பாதங்களிலே அன்பு உண்டாக்கி என்னைத் தீவிர பக்தி கொள்ளும்படி செய்தான். திருவருள் அமுதத்தை தான் உண்ணும்படி எனக்கு ஊட்டி அருளினான். இவ்வாறு தனது குருநாதனாகிய நந்தியெம்பெருமான் தன் உள்ளத்திற் புகுந்து கொண்ட அனுபவங்களைத் தவயோகி தனது பாடலில் வெளிப்படுத்துகின்றார்.

சற்குருவை அடையும் போது உள்ளத்தில் பக்தி தோன்றுகிறது. பக்தி வளர்ந்து முதிரும் போது பேரானந்த நிலை ஏற்படுகிறது. இந்தப் பேரானந்தப் பெருநிலையைப் பின்வரும் திருமந்திரப் பாடல் விளக்குகிறது.

**அருளால் அமுதப் பெருங்கடல் ஆட்டி**
**அருளால் அடி புனைந் தார்வம் தந்திட்டு**
**அருளான ஆனந்தத் தாரமுதூட்டி**
**அருளால் என் நந்தி அகம் புகுந்தானே**

ஞானம் ஒருவனிடம் உதயமாகிவிட்டால் ஆதவனைக் கண்ட பனி போல அஞ்ஞானம் ஆன்மாவை விட்டு நீங்கி விடும். ஞானத்தீ எல்லா வினைகளையும் பொசுக்கும். திருவருள் ஒளியாகிய ஞானத்தின் முன்பு பிறவி காரணமாக ஏற்பட்ட துன்பங்கள் அனைத்தும் நீங்கும் ஞானம் என்னும் விளக்கை ஏற்றினால் எல்லையற்ற பரம்பொருளை அறிந்து கொள்ளமுடியும். அப்பரம்பொருளின் முன்பு மலமாயா கன்மங்களாகிய உடலின் துன்பங்கள் யாவும் அகலும். மிக்க ஒளி வெளிப்படுத்தப்படும். திருவருளாகிய அறிவு விளக்கைப் பெற்றவர்கள் திருவருளாகிய விளக்கினைத் திருமேனியாகக் கொண்டு ஒளிர்ந்து விளங்கும் விளக்காகிய சிவத்துள் ஒடுங்கிச் சிவமாய்த் திகழ்வர்.

**விளக்கினை யேற்றி வெளியை அறிமின்**
**விளக்கினின் முன்னே வேதனை மாறும்**
**விளக்கை விளக்கும் விளக்குடையார்கள்**
**விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே**

உடம்பு என்பது ஓர் ஆலயம். உள்ளம் என்பது ஆலயத்திற்குள் உள்ள கர்ப்பக்கிருகம். அந்தக் கர்ப்பக்கிருகத்துள் இறைவன் வந்து வீற்றிருக்கின்றான். கருணையோடு கோயில் கொண்ட வள்ளலாகிய எம்பெருமானுக்கு உள்ளமே கருவறையாகிய கர்ப்பக்கிருகம். வாய்தான் கோபுரவாசல் தெள்ளிய அறிவோடு மெய்ஞ்ஞானம் பெற்றவர்களுக்கு ஆன்மாவே பூசைக்குரிய சிவலிங்கம் ஆகும்.

இந்த உடம்பாகிய கோயிலுக்கு ஏற்றிய ஐந்து புலன்களும் ஐந்து காளா மணி விளக்குகளாகவே உள்ளன. ஞானம் பெற்றவர்களுக்கு ஐந்து புலன்களும் அணை யாத ஆலய விளக்குகளாகும். ஞானம் பெறாதவர்களுக்கு அவை கள்ளப் புலன்களாகும். ஞானம் பெற்றவர்களுக்கு அவையே சிவலிங்கத்தைக் காட்டும் ஒளி விளக்குகளாகும்.

**உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்**
**வள்ளல் பிரானார்க்கு வாய் கோபுர வாசல்**
**தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்**
**கள்ளப் புலனைந்தும் காளா மணிவிளக்கே**

ஒவ்வொரு தனி மனிதனும் தன்னு டைய ஆத்ம ஈடேற்றத்திற்காக நாளாந்தம் வழிபாடு செய்தல் வேண்டும் என்றே சிவா கமங்கள் கூறுகின்றன. இதனை ஆன் மார்த்த பூசை என்று கூறுவர். சைவர்களா கப் பிறந்த ஒவ்வொருவரும் சமய தீட்சை பெற்றுக்கொள்ளுதல் வேண்டும். சமய தீட்சை பெறுதலே சைவ சமயி ஆவதற் கான அடிப்படைத் தகுதியாக உள்ளது. சமய தீட்சை பெற்றுச் சிவ மூல மந்திரத்தை உச்சரித்து சிவசின்னமாகிய திரு நீற்றினைத் திரிபுண்டரமாக நெற்றியிலே தரித்து உடம்பினைச் சிவக்கோலமாக மாற்றுதல் வேண்டும்.

ஆன்மாவைத் தூய்மைப்படுத்தி இறை நினைப்பினை ஏற்படுத்திச் சீவனுக் குள்ளே சிவமணம் பூக்கச் செய்வதற்கு நித்திய வழிபாடு அவசியம் ஆகும். நாளாந் தம் வழிபாடு செய்வது நிலையான புண்ணி யம். இதைச் செய்யும் எண்ணம் தோன்று வது பெரும் பாக்கியம். "என்ன புண்ணி யம் செய்தனை நெஞ்சமே" என்ற சம்பந் தர் வாக்கிற்கு அமைய இறைவனை வழிபடுவதற்கும் பூர்வ புண்ணிய பயன் வேண்டும். நாளாந்த வழிபாட்டிற்கு வேண்டிய அடிப்படைப் பொருள்களாகிய பூவும், நீரும் யாருக்கும் எப்போதும் எளிதில் கிடைக்கக் கூடியவை. இவ்வாறு இலகு வான வழி இறைவனை அடைவதற்காக உரியபொழுதிலும் இந்த எளிய மார்க் கத்தை உணராமல் பலர் நழுவிப் போகி றார்களே என மனம் வருந்துகிறார் திருமூலர்.

**புண்ணியம் செய்வார்க்குப் பூவுண்டு நீருண்டு**
**அண்ணல் அது கண்டு அருள் புரியா நிற்கும்**
**எண்ணிலி பாவிகள் எம் இறை ஈசனை**
**நண்ணறியாமல் நழுவுகின்றாரே**

சைவர்களுக்குரிய சிவ மூல மந்திரம் பஞ்சாட்சர மந்திரம் என்றே நாயன்மார்கள் நால்வரும் உறுதிபடக் கூறியுள்ளார்கள். உலகியலில் வாழ்பவர்கள் தூலபஞ் சாட்சரமாகிய நமசிவாய மந்திரத்தையும் முத்திகாமிகள் சிவாயநம என்ற சூக்கும பஞ்சாட்சரத்தையும் உச்சரித்தல் வேண் டும். "நாதன் நாமம் நமச்சிவாயவே" என்று ஞான சம்பந்தரும், "நற்றுணையாவது நமச்சிவாயவே" என்று அப்பர் பெருமா னும், "சொல்லுநா நமச்சிவாயவே" என்று சுந்தரரும், "போற்றியோம் நமச்சிவாய புக லிடம் பிறிதொன்றில்லை" என மணிவாசக ரும் நமசிவாய மந்திரத்தின் பெருமை யைப் போற்றி உள்ளார்கள்.

காலை, உச்சி, மாலை என்னும் முப்பொழுதும் சிவனை வழிபடுவதற்குப் பேரன்பு கொள்ளுங்கள். "நமசிவாய" என் னும் ஐந்தெழுத்தைப் புகழ்ந்தோதிப் போற் றுங்கள். சூரியன், சந்திரன், அக்கினி ஆகிய முச்சுடரும் சிவனார் திருவருள் ஒளி என்பதை உணருங்கள். இம் மூன்றிலும்

சிவபெருமான் திருவருள் ஒளி மேம்பட்டு விளங்கும் உண்மை அறிந்து சிவன் திரு உருவாக வழிபடுங்கள். அவனுடைய திருப்பெயர் நந்தி நாயகன் என்றும் நவிலப்படும்.

**உச்சியும் காலையும் மாலையும் ஈசனை**
**நச்சுமின் நச்சி நமவென்ற நாமத்தை**
**விச்சுமின் விச்சி விரிசுடர் மூன்றினும்**
**நச்சுமின் பேர் நந்தி நாயகனாகுமே**

இறைவன் வெளிப்படும் இடங்களில் ஒன்றாகச் சிவனடியார் வழிபாடாகிய சங்கம வழிபாட்டினைப் பெரிய புராணம் குறிப்பிடுகிறது. தொண்டர்களின் உள்ளத்தில் இறைவன் வீற்றிருப்பதால் அவர்களுடைய பெருமை பேசுவதற்குப் பெரியது என்பதை "தொண்டர் தம் பெருமை பேசவும் பெரிதே" எனத் தமிழ் மூதாட்டி ஆகிய ஔவையாரும் குறிப்பிட்டுள்ளார்.

ஆன்மாவைப் பீடித்திருக்கும் மலங்கள் நீங்கி ஆன்மா இறைவனை அடைவதற்குச் சிவாலய வழிபாடும் சிவனடியார் வழிபாடும் துணை செய்யும் என்பதை

**மாலறநேயம் மலிந்தவர் வேடமும்**
**ஆலயந்தானும் அரனெனத் தொழுமே**

எனச் சிவஞானபோதம் பன்னிரண்டாம் சூத்திரம் கூறுகிறது. அடியார்களோடு இணங்கி இருத்தலே ஆண்டவனை அடையச் சிறந்த வழியென்பதை "அடியார் நடுவுள்ளிருக்கும் அருளைப் புரியாய்" என மணிவார்த்தையாகிய திருவாசகமும் குறிப்பிடுகிறது. சூரியனுடைய வெப்பத்திலும் பார்க்க சூரியனின் வெப்பத்தை தன் அகத்தே இழுத்து வைத்திருக்கும் மணலின் சூடு அதிகமாக இருக்கும் இவ்வாறு இறைவனுடைய திருவருளிலும் பார்க்க இறையருளைத் தன் அகத்தே பெற்று வைத்திருக்கும் சிவனடியார்களின் அருள் உயர்வானது என்பதைப் பின்வரும் நீதி வெண்பாப் பாடல் சிறப்பாக விளக்குகிறது.

**ஈசனெதிர் நின்றாலும் ஈசனருள் பெற்றுயர்ந்த**
**நேசரெதிர் நிற்பதரிதாமே – தேசுவளர்**
**செங்கதிரவன் முன் நின்றாலும் செங்கதிரவன் கிரணம்**
**தங்கு மணல் நிற்பதரிதே தான்.**

கோயிலிலே மூர்த்திக்கு ஏதேனும் நிவேதனம் இட்டால் அது அப்படியே அடியார்களுக்குப் போய்ச் சேராது. ஆனால் சற்பாத்திரம் ஆகிய சிவனடியார்களுக்கு ஏதேனும் சமர்ப்பித்தால் அது அவர்களுக்குப் பயன்படுவதோடு அப்படியே இறைவனுக்கும் போய்ச் சேருகிறது. தவத்தின் மிக்கார் சிவ நாட்டம் உடையவர்கள் மகிழ்ச்சியோடு உண்ணும் உணவு மூவுலகும் உண்டு நிறைந்தது போலாகும். நடமாடும் கோயிலாகத் திரிகின்ற சிவனடியார்களுக்குச் செய்யும் ஈகையும் சிறந்த கடவுள் வழிபாடே எனத் தவயோகி திருமூலர் தனது பாடலில் வலியுறுத்துகின்றார்.

**படமாடக் கோயில் பகவற்கு ஒன்று ஈயில்**
**நடமாடக் கோயில் நம்பர்க்கங்கு ஆகா**
**நடமாடக் கோயில் நம்பர்க்கு ஒன்று ஈயில்**
**படமாடக் கோயில் பகவற்கது ஆமே**

அடியவர்களாகிய நாம் அனைவரும் இறைவனுக்கு மீளா அடிமைகள். சுந்தர மூர்த்தி சுவாமிகளை இறைவன் திருமணப் பந்தலிலே அடிமை ஓலை காட்டியே ஆட் கொண்டார். அன்போடும் உரிமையோடும் தனது துன்பத்தை இறைவனிடம் முறையிடும் பொழுது சுந்தரர் தன்னை "மீளா அடிமை" என்றே குறிப்பிடுகின்றார். சிவத்தினுடைய பேரின்பமாகிய தாளை ஆன்மாவாகிய தலை சேருதலே தலைமுத்தி எனத் திருவருட்பயன் கூறுகிறது. முத்திநிலையிலும் ஆன்மா இறைவனுக்கு அடிமை என்பதே சைவசித்தாந்தக் கோட்பாடாகும்.

அம்மையும் அப்பனுமே தாயாகவும் தந்தையாகவும் நின்று அடியவர்களுக்கு அருள் புரிகின்றார்கள் என்பதை "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே"என்று மணிவாச கரும் "எந்தாயுமெனக் கருள் தந்தையு நீ" என்று அருணகிரிநாதரும் தங்கள் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்கள். திருமூல நாயனாரும் சிவபெருமானுக்கு தான் ஆட்பட்ட தொன்மையைத் திருமந்திரத் தில் பாடியுள்ளார். என் பிறப்புக்கள் அனைத் திலும் எனக்குத் தாயானவளும் தந்தை யானவரும் சிவபெருமானுக்கு அடிமை என்று கொடுத்துவிட்டார்கள். இந்த அடி மைப் பத்திரம் பிறக்கும் பொழுதே எழுதப் பட்ட சாசனமாகும். இந்த அடிமைப் பத்தி ரத்தை எழுதியது யார்? அதில் சாட்சிக் கையெழுத்திட்டது யார்? என்றெல்லாம் தனது பாடலில் குறிப்பிட்டுள்ளார்.

உலகங்களையும் உயிர்களையும் படைத்த பிரமன் தொடக்கத்திலேயே நான் சிவனுக்கு அடிமை என்று ஆவணம் எழுதிவிட்டான். இந்த உலகங்களைப் பரிபாலித்து வருகின்ற காத்தல் கடவு ளான திருமால் சாட்சிக்கு கையெழுத்து இட்டுவிட்டார். பிறப்பின் பயன் இறை வனுக்கு அடிமை செய்வதே என்பதைத் திருமூலர் வலியுறுத்துகின்றார்.

**என் தாயோ டென்னப்பன் ஏழேழ் பிறவியும்**
**அன்றே சிவனுக்கெழுதிய ஆவணம்**
**ஒன்றாய் உலகம் படைத்தான் எழுதினான்**
**நின்றான் முகில் வண்ணன் நேரெழுத்தாயே**

சிவனடியார்கள் ருசிக்காக உணவு உண்பதில்லை. உயிர் உடலில் தங்கி இருப்பதற்காக உணவினை உண்பர். பசித்தால் புசிப்பவர்கள் சிவனடியார்கள். நல்ல விவசாயி தனது விளை நிலத்தை தெய்வமாக கருதுகின்றான். புனிதமாகவே பாதுகாக்கின்றான். நிலத்தைப் போல உடம் பைக் கருதும் அடியார்களும் அதனைப் போற்றிப் பாதுகாப்பார்கள். இவர்களுக்கு உடம்பு ஆலயமாக உண்ணும் உணவு அமிர்தமாகிறது.

சிவன் உடம்பினுள் உயிர்க்குயிராய் விளங்குதல் கண்டு அடியார்கள் உச்சிப் பொழுதில் பிச்சை எடுத்து உண்டு அவ னைக் காப்பர். தான்வேறு அவன் வேறு என்று அவர்கள் எண்ணியதில்லை. பேத மற்ற ஞானம் வரப்பெற்றதால் ஏகாந்த மாய் இறைவனோடு ஒன்றி இருப்பர்.

**அச்சிவன் உள்நின்ற அருளை அறிந்தவர்**
**உச்சியம் போதாக உள் அமர் கோவிற்குப்**
**பிச்சை பிடித்து உண்டு பேதம் அற நினைந்து**
**இச்சை விட்டு ஏகாந்தத்து ஏறி இருப்பரே**

பசிப்பிணி என்பது மிகவும் கொடிய நோய். ஒருவருடைய பசியைப் போக்குவது தானதர்மங்களில் உயர்ந்த தர்மம். "உண்டி கொடுத்தோர் உயிர கொடுத்தோரே" என்ற பழமொழி இதனால் தான் ஏற்பட்டது. தானங்களில் உயர்ந்த தானம் அன்னதானம் என்பதை

**"மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதி சூடும்**
**அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்**

எனப் பெரியபுராணம் குறிப்பிடுகிறது. பசி ஏற்பட்டுவிட்டால் பெருமை, குடும்பச் சிறப்பு, கல்வி, அழகு, உண்மை, உணர்வு, ஈகை, நோன்பு, உயர்வு, தொழில் முயற்சி, மங்கையர் மேல் ஆசை கொள்ளுதல் ஆகிய பத்தும் பறந்து போய்விடும் என ஔவையாரின் மூதுரைப் பாடல் குறிப்பிடுகிறது.

தீயை ஒத்த பசியையும், ஆசையையும், கோபத்தையும், சிவனடியார் குற்றமாய் கருதுவதால் அவற்றில் ஒரு போதும் அவர்களுடைய மனம் பொருந்துவதில்லை. உடம்பும் உடமைகளும் இறைவனால் தமக்கு கொடுக்கப்பெற்ற இரவல் என்பதை மறந்து தம்மை மதித்து மனம் பொங்கிச் செருக்குறுவதில்லை. இதனால் சிவன் அடியார்கள் உடல் இன்பத்தை நாடுவதில்லை. சிவனின் திருவடியையே தஞ்சம் எனச் சேர்ந்து வாழ்வார்கள்.

**அங்கார் பசியும் அவாவும் வெகுளியும்**
**தங்கார் சிவனடியார் சரீரத்திடைப்**
**பொங்கார் புவனத்தும் புண்ணிய லோகத்தும்**
**தங்கார் சிவனைத் தலைப்படுவாரே**

---

## சஞ்சலங்கள் தீர்த்தருள சந்நிதியில் தேரேறு!

எழிலான சந்நிதிக் கந்தனே! தேரேறு
எம்மவர் துயர் தீர்த்திட தேரேறு
பொழிவான மயிலேறி ஐயா! தேரேறு
புவனமிதைக் காத்தருள தேரேறு
அருளான சந்நிதிக் கந்தனே! தேரேறு
அடியவர் குறை தீர்த்திட தேரேறு
பொருளான சரவணத்து நாயகனே தேரேறு
புதுமைகளைத் தந்தருள சந்நிதியில் தேரேறு

---

## தேசம் வேண்டும் வரமீய தெல்லியூரில் தேரேறி அருள்வாய்

தங்க நிறச் சுடரொளியே தேரேறி அருள்வாய்
தமிழ் விஞ்சும் அம்பிகையாய் தேரேறி அருள்வாய்
அங்கமெலாம் அரவணித்த நாயகியாய் தேரேறி அருள்வாய்
ஆதியது பாதியாக அம்மா தேரேறி அருள்வாய்
குங்குமப் பொட்டோடு தாயே! தேரேறி அருள்வாய்
குமிண் சிரிப்போடு துர்க்கையே தேரேறி அருள்வாய்
சிங்கமதில் அமர்ந்தே தெல்லியூரில் தேரேறி அருள்வாய்
சிறப்பெல்லாம் அருள துர்க்காபுரத்தில் தேரேறி அருள்வாய்.

மதுரகவி காரை. எம்.பீ. அருளானந்தன்

உ

தொடர்ச்சி...

# சந்நிதியான்

திரு ந. அரியரத்தினம் அவர்கள்



20.08.2009 வியாழக்கிழமை ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய வருடாந்த உற்சவம் ஆரம்பமாகி சிறப்பான முறையிலும் பக்தி பூர்வமாகவும் உற்சவம் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. அதனடிப்படையில் ஆவணி மாத வெளியீடாகிய ஞானச்சுடர் மலரில் சந்நிதியான் எனும் பகுதியில் சந்நிதியான் ஆலயச் சூழலில் அமைந்துள்ள சந்நிதியான் ஆச்சிரமத்தின் பல செயற்பாடுகளையும் சந்நிதிக் கந்தன் எவ்வாறு வழி நடத்துகின்றான் என்ற பல விடயங்களை வாசகர்களாகிய உங்களுடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

கலியுகக் கந்தனாக விளங்கும் ஸ்ரீ செல்வச் சந்நிதி வேற்பெருமானது உற்சவமானது ஆரம்பமாவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே ஆலய சுற்றாடலும் ஆலயம் அமைந்து பெருமை சேர்த்துக்கொண்டிருக்கும் தொண்டைமானாறு கிராம மக்களும் அதனை அண்டிய பிரதேச முருகனடியார்களும் ஆலய உற்சவத்தை ஆவலோடு வரவேற்கின்றனர்.

தொண்டைமானாறு ஸ்ரீ செல்வச் சந்நிதிஆலயம் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஆகியன ஒருங்கே அமையப் பெற்று ஆகமவிதிகளுக்குட்படாத மௌனபூசை செய்யும் பிரசித்தி பெற்ற ஸ்தலங்களில் ஒன்றாக அமைந்திருப்பதால், ஆலயத்திற்கு வருகை புரியும் முருக பக்தர்கள் அனைவரையும் ஆற்றங்கரையான் ஆட்கொள்கின்றான் என்பதை நாம்

கண்கூடாகக் காணலாம்.

ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயக் கந்தன் அன்னதானக் கந்தன் என அழைக்கும் பெயரை நிலைநிறுத்தும் முகமாக பல மடங்கள் அமைந்தும், அடியார்களின் பசிப்பிணியைப் போக்கும் ஒரு இட மாகவும் விளங்கி சிறப்புப் பெறுகின்றது. அத்துடன் நாளாந்தம் ஆலயத்திற்கு வரும் பக்தர்களும், ஆலயத்தில் தங்கி இருக்கும் முதியவர்களும் ஏதோ ஓர் இடத்தில் உணவருந்திச் செல்லக்கூடிய சூழ்நிலை இங்கே காணப்படுகின்றது.

ஆரம்ப காலங்களில் ஆலயத் தைச் சூழவுள்ள பகுதிகளில் சுமார் நாற் பத்தைந்து மடங்களுக்கு மேல் அமைந் திருந்தன. நாட்டில் ஏற்பட்ட வன்செயல் கள், அனர்த்தங்கள் போன்ற அசம்பாவித நடவடிக்கைகளின் பின்னர் சில மடங் கள் சீரழிந்து கவனிப்பாரற்றுக் கிடக்கின் றன. அத்தகைய சூழலில் முத்துக்குமாரு மயில்வாகனம் சுவாமிகளினால் வழி நடாத்தப்பட்டு வந்த ஆனந்த ஆச்சிரம மும் அக்கால அனர்த்தங்களுக்கு உள் வாங்கப்பட்டு இயங்க முடியாத நிலை ஏற்பட்டது.

இக்காலச் சூழலில் ஸ்ரீ செல்வச் சந்நிதி ஆலயத்திற்கு வரும் முருகன் அடியார்களின் பசிப்பிணியைப் போக்கும் முகமாக 1988ஆம் ஆண்டளவில் சந் நிதியான் ஆச்சிரமம் உருவாகியது. ஆரம்ப காலங்களில் பல சிரமங்களுக்கு மத்தியிலும் அன்னப் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது. காலப்போக்கில் நித் திய அன்னப்பணி வழங்கும் இடமாக ஆச் சிரமத்தின் செயற்பாடுகள் விஸ்தரிக்கப் பட்டன.

சந்நிதியான் ஆச்சிரமத்தின் இச் செயற்பாட்டிற்கு பல இடங்களில் இருந் தும் நிதிகள் வந்த வண்ணம் இருந்தது. ஒரு சில கால கட்டங்களில் நிதி நிலமை நெருக்கடியாக இருந்தபொழுதெல்லாம் ஆச்சிரமத்தின் செயற்பாட்டிற்கு மிகவும் பேருதவியாக இருந்தவர்களில் யாழ்ப் பாணம் வேணிகளஞ்சிய உரிமையாளர் அவர்களும் க.கு. கந்தையாபிள்ளை அன்சன்ஸ் உரிமையாளர் அவர்களும் ஆச்சிரமத்தால் வழங்கப்பட்டு வரும் நித்திய அன்னதானப் பணிக்கு பெரிதும் உதவிபுரியும் பண்டாளர்களாக விளங் கிக் கொண்டு இருக்கின்றார்கள்.

மேலும் சந்நிதியான் ஆச்சிரம மானது அன்னப்பணியோடு மட்டும் நின்று விடாது தீர்க்கமுடியாத நோய்களுக்குட் பட்டு, வயது முதிர்ந்து யாருமற்றவர் களாக ஆலயத்தில் வந்து தங்கியிருக் கும் வயோதிபர்களுக்கு வருடத்தில் பல தடவைகள் உடுபுடவைகள் வழங்கு வதற்கு உதவிகள் புரியும் யாழ். மகா ராணி புடவையக உரிமையாளர் அவர் களும், ஆச்சிரமத்தால் பாடசாலை மாண வர்களுக்கு வழங்கப்படும் பரிசுப் பொருட் களை ஆச்சிரமத்தின் நிலையைக் கருத் திற் கொண்டு வழங்கிவரும் யாழ் பெஷன் ஹவுஸ் உரிமையாளர் அவர்களும் ஆச் சிரமத்தின் சமூகப் பணிகளுக்கு ஊன்று கோலாக விளங்குகின்றார்கள்.

2001ஆம் ஆண்டிலிருந்து ஆச்சிர மத்தால், வாரந்தம், இருநாட்கள் நடாத் தப்பட்டுக் கொண்டிருக்கும் மருத்துவ சேவைக்கான மருந்து வகைகளை நியா யமாகத் தந்துதவும் யாழ். இரத்தினம் பார் மஸி உரிமையாளர் அவர்களும் சந்நிதி யான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையினால் தொடர்ச்சியாக மாதா மாதம் வெளியிட்டுவரும் ஞானச்சுடர் மலருக் குரிய காகிதாதிகளை வழங்கி கொண்டி ருக்கும் யாழ்ப்பாணம் பெற்றா எசென்ஸ் உரிமையாளர் அவர்களும் நெல்லியடி

தன்னை மதிப்பவன் பிறரையும் மதிப்பான்.

சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை உரிமையாளர் அவர்களும் மற்றும் முன்னாள் இந்து கலாச்சார அமைச்சராகவும் பாராளுமன்ற உறுப்பினராகவும் இருந்த அமரர் தி. மகேஸ்வரன் அவர்களும் ஆச்சிரமத்தின் சேவைகளுக்கு பல்வேறு வகையில் உதவிகளை வழங்கி ஆச்சிரமப் பணி சிறக்க உதவியவர்களாவார்கள்.

ஆச்சிரமத்தால் மேற்கொள்ளப்பட்டுவரும் இச்செயற்பாடுகளுக்கு பெருமளவு நிதி பயன்படுத்தப்பட்டு வருகின்றது. சில காலங்களில் நிதி நெருக்கடி ஏற்படும் பட்சத்தில் மேலே கூறிய வர்த்தகப் பிரமுகர்கள் காலவரையறையின்றி கடனடிப்படையிலும் நியாய விலைகளிலும் ஆச்சிரமப் பணிகளுக்கு தேவையான பொருட்களை வழங்கிக் கொண்டு இருப்பதனால்த்தான் ஆச்சிரமத்தில் நடைபெறும் சகலகாரியங்களும் மற்றவர்கள் வியந்து பார்க்கும் வண்ணம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

மேலும் சந்நிதியான் ஆச்சிரமப் பேரவையினால் நடாத்தப்பட்டுக் கொண்டிருக்கும் வாராந்த வெள்ளி நிகழ்வுகள், உற்சவகால விசேட நிகழ்வு கள், ஞானச்சுடர் மலர் சம்பந்தமான நிகழ்வுகளில் முழுமனதுடன் கலந்து சிறப்பிக்கும் அன்பர்கள், அவர்கள் தாம் சந்நிதியானுக்குச் செய்யும் பணி என நினைத்து அச்செயற்பாடுகளை மேலும் ஊக்குவித்து வருகின்றமையும் போற்றுதற்குரியது.

அதேபோன்று வருடா வருடம் இடம் பெறுகின்ற உற்சவ காலங்களில் நடைபெறும் அன்னதானச் செயற்பாட்டுக்கு குறிப்பிட்டுக் கூறக்கூடிய ஒரு சில அன்பர்களை இணைத்து ஆச்சிரமத்தின் செயற்பாட்டினை வழிநடத்துவது சந்நிதி வேலவனது அருட் திறனே.

இவ்வகையில் சந்நிதி வேலவனது பூரண அருட்கடாட்சம் சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெறும் சகல பணிகளிலும் வியாபித்து முருகனடியார்கள் அனைவரும் பயனடையக் கூடிய வகையில் சந்நிதியான் ஆச்சிரமத்தை நிலை நிறுத்தி தனது பெருமையினை உலகு எங்கும் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றான்.

எல்லாம் அவன் செயல்
ஓம் முருகா

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப்பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்புகொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
**செ. மோகனதாஸ்**
**சந்நிதியான் ஆச்சிரமம்,**
**தொண்டைமானாறு.**
**T.P.No. 021- 2263406**
**060 - 2219599**

**காசோலை**
**செ. மோகனதாஸ்**
**க. இல. 7342444**
**இலங்கை வங்கி,**
**பருத்தித்துறை.**

**www. sannithiyan. org**

உ

# செய்திச் சிதறல்கள்

- பருத்தித்துறை ஸ்ரீராம கிருஷ்ண சாரதா சேவாச்சிரம வெளியீடான குருபூர்ணிமா மலர் வெளியிடப்பட்டுள்ளது.

• • •

- "தென்மராட்சி அறநெறிப் பாடசாலையின் ஒன்றியத்தால் நடாத்தப்பட்ட அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு 25.07.2009 சனிக்கிழமை சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இடம்பெற்றது.

• • •

- அச்செழு கொக்கிருந்தபதி சிவகாமி அம்மன் கோவில் சித்திரத் தேர் வெள்ளோட்ட நிகழ்வு 23.07.2009 வியாழக்கிழமை இடம் பெற்றது.

• • •

- இலங்கை பிரம்ம குமாரிகள் இராஜயோக நிலையங்கள் வழங்கும் "தற்கால மன அழுத்தத்திலிருந்து விடுதலை" எனும் பொருளிலான சொற்பொழிவு நிகழ்வு 15.08.2009 சனிக்கிழமை நாவலர் மண்டபத்தில் நடைபெற்றது.

• • •

- கொக்குவில் இந்துக் கல்லூரியின் படைப்பாக வெளிவரும் நித்திலம் வைகாசி ஆடி 2009 காலாண்டிதழ் வெளிவந்துள்ளது.

• • •

- நல்லூர்க் கந்தன் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டு தாவடி ஸ்ரீ இராமகிருஷ்ண சமிதியால் "எழுந்திரு! விழித்துக் கொள்!" கண்காட்சியும் புத்தகவிற்பனையும் நல்லூர் முருகன் ஆலய பின் வீதியில் உள்ள முத்துதம்பி அன்னதான மண்டபத்தில் நடாத்தப்பட்டது.

• • •

- திருக்கயிலாய பரம்பரை மெய்கண்ட சந்தானம் திருவாவடுதுறை ஆதீனத்திற்குச் சொந்தமான இலுப்பைப் பட்டு (பழமண்ணிப் படிக்கரை) அருள்தரு அமுதகரவல்லி அம்மன் உடனாய அருள்மிகு நீலகண்டேசுவரப் பெருமான் திருக்கோயில் திருக்குடப் புனித நன்னீராட்டுப் பெருவிழா 30.08.2009 ஞாயிற்றுக்கிழமை மிகவும் சிறப்பாக இடம்பெற்றது.

• • •

- தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தில் திருமஞ்ச வெள்ளோட்ட நிகழ்வு 26.08.2009 புதன்கிழமை மாலை 3.00 மணிக்கு செஞ்சொற் செல்வர் திரு. ஆறு திருமுருகன் தலைமையில் நடைபெற்றது.

• • •

- காரைநகர் வியாவில் ஐயனார் தேவஸ்தான கணபதிஸ்வரக் குருக்கள் நூலகமும்கணினிப் பயிற்சி நிலைய திறப்பு விழாவும் 29.08.2009 சனிக்கிழமை 11.15 மணியளவில் திரு. க. சோமசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பழிவாங்குவதற்குப் பெருவழி மன்னித்துவிடுதல்

தமிழகத் திருக்கோயில் வரிசை:

# திருவிடைக்கழி

– வல்வையூர் அப்பாண்ணா அவர்கள்–

"சிறக்கு மாதவர் முனிவர் மகபதி இருக்கு வேதனும் இமயவர் பரவிய திருக்குராவடி நிழல்தனில் உலவிய பெருமாளே" என அருணகிரிநாதர் தன் திருப்புகழில் "குரா" மரத்தையும் (ஸ்தல விருட்சம்) குராமரத்தடிக் குமரனையும் போற்றித் துதி செய்கின்றார். அருணகிரிநாதர் வியந்து போற்றிய இந்த திருக்கைவேல் வடிவழகுப் பெருமான் "சுப்பிரமணியன்" என்ற அருட் கோலம் கொண்டவர். தமிழ் நாட்டில் தலவிருட்சம் சிறப்புப் பெற்ற தலங்கள் இரண்டு. ஒன்று காஞ்சிமாவடி. மற்றது திருவிடைக்கழி குராவடி. இந்த "குரா" மரத்தடியிற்றான் "ராகு" முருகனைப் பூசித்து வரம் பெற்றதால் இது "ராகுதோசம் நீக்கும் ஸ்தலம்" எனப்படுகிறது. இந்த "குரா" மரத்தடி நிழலில் இன்றும் முருகன் விரும்பி உலாவுவதாக ஸ்தலபுராணம் சிறப்பிக்கின்றது. "ராகு" என்பதை திருப்பி நோக்கினால் "குரா" என வரும். எனவே, ராகு கிரகத்துக்கும் குரா மரத்துக்கும் ஏதோ ஒருவகை தொடர்பு இருப்பது புரிகிறது. "இந்த ஊரில் பாம்பு யாரையும் தீண்டுவதில்லை. அப்படித் தீண்டினாலும் நஞ்சு ஏறி யாரும் மரணிப்பதில்லை" என்று இந்த கிராமவாசிகள் அடித்துக் கூறுகிறார்கள். இது தொடர்பான இன்னொரு செய்தி. இந்தக் கோயிலில் நவக்கிரக சந்நிதியும் இல்லை.

நாகை மாவட்டம் தரங்கம்பாடி வட்டத்தில் தில்லையாடியிலிருந்து 2 கி.மீ. தூரத்தில் உள்ளது இந்த ஊர். இன்னுமொரு பாதையும் குறிப்பிடுகிறேன். "மணிவிழா", "சதாபிஷேகம்" இவற்றிற்கு பிரபலமான திருக்கடவூரிலிருந்து நேர் தெற்கு நோக்கிய பாதையில் (தரங்கம்பாடிக்கு இடையே) 6 கி.மீ. தூரத்தில், பிரதான பாதையிலிருந்து வலது புறம் விலகி 1 கி.மீ. தூரம் உள்ளே போக வேண்டும்.

திருவிடைக்கழி சிறிய ஊர். சிவாலய அமைப்பில் முருகப்பெருமான் சிவ சொரூபமாக நின்று அடியவர்க்குத் திருவருள் பொழியும் ஒரே முருக ஸ்தலம் "திருவிடைக்கழி". ஏழு நிலை ராஜ கோபுரத்துடன் கம்பீரமாக எழுந்து நிற்கிறது திருவிடைக்கழி "ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி" திருக்கோயில். இங்கே இரண்டு கருவறைகள். ஒன்று பிரதான கருவறையின் சற்று பின்புறமாகக் காணப்படும் "பாபநாசப் பெருமான்" லிங்கவடிவில் அருள்பாலிக்கும் இடம். மற்றொரு கருவறையில் முருகன் "சிவகுமாரன்" ஆகவும், சிவன் "குமாரசிவம்" ஆகவும் (இரு பெயருக்குமிடையே உள்ள தொடர்பினை அன்பர்கள் ஊன்றிக் கவனிக்க வேண்டும்). ஒருங்கே அமர்ந்திருந்து அருளும் அதிசயம் வேறு எங்குமே காணமுடியாதது. திருவிடைக்கழியில் மட்டுமே காணலாம். லிங்கவடிவில் "குமாரசிவமாகி" நிற்கும் இறைவன் சற்று பின்புறமாக அமர்ந்திருக்கும் காரணத்தை அறிய முடியவில்லை. அழகன் "சிவகுமாரன்" முன்பாக சிறியதொரு ஸ்படிக லிங்கம் உள்ளது. சூரன் மகன் இரண்யாசுரனை சம்ஹாரம் செய்த தோசநிவர்த்திக்காக முருகன் இந்த ஸ்படிக லிங்கத்தை வழிபாடு செய்ததாக ஸ்தல புராணம் கூறுகிறது. சுப்பிரமணியர் ஒரு திருமுகத்துடனும், இரு கைகளில் ஒன்று அபயமாகவும் - மற்றதை இடுப்பிலும் கொண்

நாட்டின் நலனுக்கு வாழ்ந்து பணி செய்தலே நல்லது

டுள்ள கோலத்தை அள்ளிப்பருக ஆயிரம் கண்கள் வேண்டும்.

திருவிடைக்கழி திருவிசைப்பா பெற்ற ஸ்தலங்களுள் ஒன்று. முதல் இராசராசன் காலத்தில் மிகச்சிறுவனாக இருந்த நம்பியாண்டார் நம்பிகள், அம்மன்னன் மகன் முதல் இராசேந்திரன் காலத்தில் இடைவயதை அடைந்து, இராசேந்திரனின் விருப்பப்படி திருவிசைப்பா, திருப்பல்லாண்டு திருப்பதிகங்களை ஒன்ப

என்று சேந்தனார் கண்டு காதலித்த வடிவழகை நாமும் கண்டு மையல் கொண்டு மயங்கி நிற்கிறோம். இன்னமும், "செழுந்தடம் பொழில்சூழ் திருவிடைக்கழியில் திருக்குரா நிழற்கீழ் நின்ற எழுங்கதிர் ஒளியை ஏத்துவார் கேட்போர் இடர்கெடுமே" என்று நிறைவு செய்கிறார் பதினோராவது திருவிசைப்பாவில்.

அருணகிரிநாதர் இடைக்கழி அழகனை எட்டுத் திருப்புகழ் பாடலில் போற்றியுள்ளார். அதற்குப் பரிசாக முருகன் அவருக்குத் தத்துவங்களையும் வித்தைகளையும் அனுக்கிரகம் செய்தான். மகா

தாம் திருமுறையாகத் தொகுத்துக் கொடுத்தார் என்பது வரலாற்று ஆசிரியரின் துணிபாகும்.

திருவிடைக்கழி அழகனைத் திருவிசைப்பாவில் பதினொரு பாடல்களில் பாடி இன்புற்றார் சேந்தனார். "பரிந்த செஞ்சுடரோ! பரிதியோ! மின்னோ! பவளத்தின் குழவியோ! பசும்பொன் சொரிந்த செந்தூரமோ!..... (திருவிடைக் கழி, திருவிசைப்பா 7ஆவது பாடல்) வித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் இந்த இடைக்கழி முருகன் மீது "பிள்ளைத் தமிழ்..." பாடியுள்ளார்.

முருகன் சிவசொரூபமாக நின்ற ஒரே ஸ்தலம் என்று குறிப்பிட்டேன் அல்லவா! நடராஜர் இருக்க வேண்டிய இடத்தில் தெற்கு நோக்கி வில்லேந்திய வேலன் மிக அழகாகக் காட்சி தருகிறார். சோமாஸ்கந்தர் அமர்ந்திருக்க வேண்டிய இடத்தில் தேவசேனா சமேதப் பெருமானாக எம்பெருமான் கந்தவேள் உள்ளார். இங்கே உள்ள சந்திரசேகரர், பிரதோசநாயகர், சண்டேசுவரர் ஆகிய அனைத்து மூர்த்தங்களும் சுப்பிரமணிய

*சிவப்பரம்பொருள் புகழ் விரிக்கும் திருமுறைகள் பன்னிரண்டினுள்*
*திருவிசைப்பாவும் - திருப்பல்லாண்டும் ஒன்பதாம் திருமுறைகளாகும். ஒன்பதாம் திருமுறை அருளாசிரியர்கள் ஒன்பதின்மர். அவர்கள் திருமாளிகைத்தேவர், கருவூர்த்தேவர், பூந்துருத்தி நம்பி காடநம்பி, கண்டரர் சித்தர். வேணாட்டடிகள், திருவாலிய முதனார், புருடோத்தமநம்பி, சேதிராயர் என்போராகும்.*

ரூபமாக விளங்குவதும் இங்குள்ள ஓர் அதிசயமே. எல்லா மூர்த்தங்களுமே தமது வலது கரத்தில் வஜ்ரவேல் கொண்டுள்ளமை முருக வழிபாட்டுக்கு முதன்மை ஸ்தலம் இது என்பதை உணர்த்தும். ஏனைய ஸ்தலங்களில் திரிசூலமே அத்திரதேவராக (அத்தறதேவர்) அமைந்திருக்க, இங்கே வஜ்ரவேல் அத்திரதேவராகவும் உள்ளது.

தெய்வயானை அம்பிகை தெற்கு நோக்கிக் காட்சியளிக்கிறார். முகத்தைச் சற்று வலப்புறம் திருப்பியபடி எழிலாக - அழகாக - ஒயிலாக முருகன் அழகை மானசீகமாகக் கண்டு இன்புறும் காட்சியை நாமும் கண்டு இன்புறலாம். தாயாரின் திருவுருவமும் (பார்வதி) சந்நிதியும் எங்கும் இல்லை.

திருவிடைக்கழி "சுப்பிரமணியன்" அடைந்தாருக் கெல்லாம் அடைக்கலம் தரும் அருளாள னாக அமர்ந்திருக்கும் கோலம்கண்ட மனநிறைவோடு பிரிய மனமின்றிப் பிரிந்து வருகிறோம்.

**திருவிசைப்பா பெற்ற ஸ்தலங்கள் பதினான்கு.**

அவை :

1. தில்லைத் திருக்கோயில்
2. திருவீழிமிழலை
3. திருவாவடுதுறை
4. திருப்பூவணம்
5. திருவிடைமருதூர்
6. திருவாரூர்
7. கங்கை கொண்ட சோழேச்சுரம்
8. தஞ்சை இராசராசேச்சுரம்
9. திருக்களந்தை ஆதித்தேச்சரம்
10. திருக்கீழ்க் கோட்டூர்
11. திருமுகத்தலை
12. திரைலோக்கியசுந்தரம்
13. திருச்சாட்டியக்குடி
14. திருவிடைக்கழி.

இத்தலங்கள் பதின்நான்கினுள் முதல் ஆறும் தேவாரமும்பெற்ற தலங்கள். ஏனையவை திருவிசைப்பா மட்டும் பெற்றவை.

## புரட்டாதி மாத ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய விசேட உற்சவ தினங்கள்

- 07.09.2009 **ஆவணி 22 திங்கள்** — **பிராயச் சித்த அபிஷேகம்**
- 10.09.2009 **ஆவணி 25 வியாழன்** — **கார்த்திகை உற்சவம்**
- 19.09.2009 **புரட்டாதி 03 சனி** — **நவராத்திரி விரதம் ஆரம்பம்**
- 27.09.2009 **புரட்டாதி 11 ஞாயிறு** — **சரஸ்வதி பூஜை**
- 28.09.2009 **புரட்டாதி 12 திங்கள்** — **விஜயதசமி**

தியானம் செய்வதால் மனம் உறுதியடைகிறது

உ

# புரட்டாதி மாத வாராந்த

# நிகழ்வுகள்

04-09-2009 வெள்ளிக்கிழமை

**ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய தீர்த்தோற்சவ நிகழ்வு**

11-09-2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

இன்னிசை :- ''திருப்புகழ்'' (பாட்டு) (பக்கவாத்திய சகிதம்)

வழங்குபவர் :- திருமதி கிருபாசக்தி கருணா அவர்கள்

[விரிவுரையாளர், இசைத்துறை யாழ். பல்கலைக்கழகம்]

18-09-2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- ''தேவிபாகவதம்'' (தொடர்)

வழங்குபவர் :- அ. குமாரவேல் அவர்கள்

[சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ் கல்லூரி வட்டுக்கோட்டை]

25-09-2009 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் 141 ஆவது
## மாத வெளியீடு

# புரட்டாதி - 2009

வெளியீட்டுரை :- சிவ. ஆறுமுகசாமி J.P. அவர்கள்

மதிப்பீட்டுரை :- பண்டிதர் சி. வேலாயுதம் அவர்கள்

[கிளை. அதிபர்]

பதிவு இல. Q.D/38/NEWS/2009

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம் 2009

